குர்ஆனின் குரல்

رَمَضَان - شَوَّال - ١٤٤٤

ஏப்ரல் - 2023

₹25/-

ஈத் பெருநாள் சிறப்பிதழ்

இறைவனை தொழுவோம் !
ஈகையினை வழங்குவோம் !!

999 PRAYER KIT

999 PRAYER KIT

அனைத்தும் ஒரே பேக்கில்.
ஒரே விலையில்

தொழுகைக்கும் உடுத்தலாம் ...
தோழருக்கும் கொடுக்கலாம் ...

நோன்பு பெருநாளின் உன்னதத்தை
உலகுக்கு உணர்த்தலாம் ...

K.A.S. ZAINULABDIN & Co.
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

உங்கள் பிள்ளைகள் ஆலிம் & ஹாஃபிழ் ஆக வேண்டுமா?
கவலை வேண்டாம்!

மதுரை ஜே.எம்.எஸ்.அரபு கல்லூரி

சிவகங்கை தேசிய நெடுஞ்சாலை,
ஜாமிஆ நகர், மதுரை - 20.

கல்விப் பணியில் 40 ஆண்டுகள்....

★ ஐந்து ஆண்டுகளில் மவ்லவீ ஆலிம் பட்டம்
★ குர்ஆன் மனன ஹிஃப்ழு பிரிவு
★ குர்ஆன் நாஜிரா பிரிவு
★ அரபி பேச்சுப் பயிற்சி
★ அஃப்ழலுல் உலமா தேர்வு எழுத வைத்தல்
★ தமிழ் பயான் பயிற்சி
★ 8, 10, 11 மற்றும் 12 வரை உலகக் கல்வி

- தரமான கல்வி
- திறமையான ஆசிரியர்கள்
- சுவையான உணவு
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
- வசதியான தங்குமிடம்
- இயற்கையான சூழல்
- தடையில்லாத மின்சாரம்
- ஆங்கில பேச்சுப் பயிற்சி
- கணினிப் பயிற்சி

கல்லூரியில் சேர எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மவ்லானா மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்
S.சபூர் முஹைதீன் மிஸ்பாஹி ஹள்ரத்
தலைவர்.

மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் அல்லாமா அஷ்ஷைகு
M.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் கிப்லா
முதல்வர்.

மேலும் தொடர்புக்கு :
94430 66539, 9486017570, 9994148480

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

AL HUSSAM

Travel & Tours India (p) Ltd

Specialist in: Haj & Umrah

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196

Platinum Package
(31 - 33 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

Platinum Short Package
(18 - 21 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50MTRS)
(MADINA : 50-150MTS)

Golden Package (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

Admin Office: No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

Booking Center: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுசாமின் தனிச்சிறப்பு...

மாதம்
ஒரு மாமறை வசனம்

அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீத்தவர்கள் மரணிக்கவில்லை!

وَلَا تَقُولُوا لِمَن يُقْتَلُ فِي سَبِيلِ اللَّهِ أَمْوَاتٌ ۚ بَلْ أَحْيَاءٌ وَلَٰكِن لَّا تَشْعُرُونَ

"மேலும், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்படுகிறவர்களை மரணித்தோர் என நீங்கள் கூற வேண்டாம்; மாறாக, (அவர்கள்) உயிரோடுள்ளவர்கள் – எனினும் நீங்கள் (அதனை உணர்ந்து கொள்ளமாட்டீர்கள்." – அல்குர்ஆன் (2 : 154)

அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீத்தவர்களை மரணித்த வர்கள் எனக் கூறவேண்டாம்! அவர்கள் உயிருடன் இருக் கிறார்கள். ஆனால் அந்நிலையை உங்களால் உணர முடியாது என்கிறான் அல்லாஹ். இந்த அந்தஸ்து அவர்களுக்கு அல்லாஹ் வின் தரப்பிலிருந்து தரப்படும் மிகப் பெரும் பாக்கியமாகும்.

இவர்களுக்கு அரபியில் "ஷுஹதாக்கள்" எனச் சொல்லப் படும். இவர்களின் ரூஹுகள் பச்சைப் பறவைகளின் உடலில் செலுத்தப்பட்டு சுவனத்தில் சுற்றித் திரிவார்கள். இவர்களின் மண்ணறையில் மண்ணும், புழு, பூச்சிகளும், கரையானும் தீண்டாது என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

நபி யூசுப் (அலை) அவர்களின் அழகில் தங்களையே மறந்து, உணர்வற்று தங்களின் விரல்களை வெட்டிக் கொண்டார்கள். வலியையும் உணரவில்லை ஜுலைகாவின் வீட்டிற்கு வந்திருந்த விருந்தாளிப் பெண்கள்.

அவ்வாறே அல்லாஹ்வை காணப்போகிற ஆவலில் தன் உடல் ஜல்லடையைப்போல் ஆக்கப்படுவதையும், கழுத்து வெட்டுப்படுவதையும், அதன் வலியையும் ஷுஹதாக்கள் உணரமாட்டார்கள்.

மரணத்தை நித்தம் நினைப்பவர் பாயில் படுத்த நிலையில் மரணித்தாலும் அவர் ஷஹீதின் அந்தஸ்தைப் பெறுவார் என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

ரஹ்மத்துகள் – 100

إن لله مائة رحمة، أنزل منها رحمة واحدة بين الجنِّ والإنس والبهائم والهوام، فبها يتعاطفون، وبها يتراحمون، وبها تعطف الوحش على ولدها، وأخَّر الله تسعا وتسعين رحمة يرحم بها عباده يوم القيامة"

"நிச்சயமாக அல்லாஹ்விடம் 100 ரஹ்மத்துகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து ஒரு ரஹ்மத்தை மட்டும் உலகில் இறக்கி வைத்துள்ளான். அதைக் கொண்டுதான் ஜின்கள், மனிதர்கள், மிருகங்கள் தங்களுக்கு மத்தியில் இரக்கம் காட்டுகின்றன. காட்டு விலங்குகள் கூட அதன் காரணமாகவே தன் குட்டியின் மீது அன்பு செலுத்துகிறது. மீதி யுள்ள 99 ரஹ்மத்து களை மறுமை நாளில் தன் அடியார்கள் மீது பொழிவதற்காக அல்லாஹ் தள்ளி வைத்துள்ளான்" என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : புகாரீ, முஸ்லிம்)

புனித ரமளானில் ரஹ்மத்தைப் பெற அழைப்பு விடுக்கும் குர்ஆனின் குரல் மீது அல்லாஹ் தன் அளவிலா ரஹ்மத்தை அள்ளி வழங்குவானாக.

செய்யது சகோதரர்கள்

நாகூர்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

குர்ஆனின் குரல்

66-ஆம் ஆண்டு

குரல் : 66 | ரமளான், ஷவ்வால்–1444 | எதிரொலி – 4 | ஏப்ரல் – 2023

ஆட்டம் கண்ட அதானி சாம்ராஜ்யம்!

2014-ல் குஜராத்தைச் சேர்ந்த தொழிலதிபர் அதானி, உலகப் பணக்காரர்கள் வரிசையில் 313-வது இடத்திலும், இந்தியப் பணக்காரர்கள் வரிசையில் 11-வது இடத்திலும் இருந்தார்.

நம்ம குஜராத் மோடி 2014-ல் இந்தியாவின் பிரதமராக ஆன பின்பு, அதானியுடைய தொழில் வளர்ச்சி மிக மிக வேகமாக வளர்ந்தது. சில ஆண்டுகளிலேயே அதானி நிறுவனங்கள் மிகப் பெரும் வளர்ச்சியை எட்டத் தொடங்கின. இந்தியாவின் சர்வ வல்லமை மிக்க தொழிலதிபராக அதானி உருவெடுத்தார்.

உலகப் பணக்காரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்திற்கும், இந்தியப் பணக்காரர்கள் வரிசையில் முதலாவது இடத்திற்கும் முன்னேறினார்.

இந்தச் சூழலில்தான் ஹிண்டன்பர்க் ரிசர்ச் நிறுவனம் அறிக்கை அதானியின் தொழில் வளர்ச்சியை கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது. ஹிண்டன்பர்க் ரிசர்ச் அமெரிக்காவைச் சேர்ந்த நிதி ஆய்வு நிறுவன மாகும். 2017-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நிறுவனம், கார்ப்பரேட் நிறுவனங்களில் நிகழும் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் குறித்து ஆய்வு செய்வதைத் தனது பணிகளில் ஒன்றாகக் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனமானது வணிக உலகில் நடக்கும் முறைகேடுகளைப் புலனாய்வு செய்து பொது வெளிக்குக் கொண்டு வருகிறது. அப்படியாக அதானி நிறுவனங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து வந்துள்ளது. அதானி குழுமத்தின் முன்னாள் உயர் அதிகாரிகள் சிலரை நேர்காணல் செய்தும் தகவல் திரட்டியுள்ளது. இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அறிக்கையை அந்நிறுவனம் கடந்த மாதம் வெளியிட்ட நிலையில், அது இந்தியப் பங்குச் சந்தையில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

அதானி குழுமம் பங்கு முறைகேடு, பங்கு மதிப்பை உயர்த்திக் காட்டி அதிகக் கடன் பெறுதல், போலி நிறுவனங்கள் தொடங்கி

வரி ஏய்ப்பு உள்ளிட்ட முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக ஹிண்டன்பர்க் ரிசர்ச் அறிக்கை தெரிவிக்கிறது.

அதானி குழுமம் பல ஆண்டுகளாக அதன் நிறுவனப் பங்கு களிலும், கணக்கியல் முறையிலும் மோசடி செய்து வருகிறது. நிதி நிலைமை சிறப்பாக இருப்பதாக பொய்யாகக் காட்டி அதன் மூலம் பங்குச் சந்தையை ஏமாற்றி அதானி குழுமம் இலாபம் பார்த்துள்ளது.

ஹிண்டன்பர்க் ரிசர்ச் அறிக்கையைத் தொடர்ந்து அதானியின் சாம்ராஜ்யம் ஆட்டம் காணத் தொடங்கியது. உலகப் பணக்காரர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்திலிருந்த அதானி, அந்தப் பட்டியலிலிலிருந்தே வெளியேற்றப்பட்டு விட்டார்.

உடனே, இங்குள்ள சங்கிகள் "இது ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் மீதான தாக்குதல் அல்ல. மாறாக, இந்திய நிறுவனங்கள் மீதும், இந்திய ஒருமைப்பாடு, இந்தியாவின் வளர்ச்சி, இந்தியாவின் இலட்சியம் ஆகியவற்றின் மீதுமான திட்டமிட்ட தாக்குதலாகும்" என்றனர்.

மோடி மற்றும் மோடியைச் சார்ந்தவர்களின் தவறுகளை கூறினால் அது இந்தியாவை எதிர்ப்பதாகும் எனக் கடந்த 9 ஆண்டுகளாக சங்கிகளால் கட்டமைக்கப்பட்ட போலி இந்துத்துவ தேசிய வாதத்தின் நிலை இது!

ஜனநாயகம், கருத்துச் சுதந்திரத்தை வளர்த்தெடுக்கும் நோக்கில் ஓப்பன் சொசைட்டி என்ற அறக்கட்டளையை நடத்தி வரும் அமெரிக்கத் தொழிலதிபர் ஜார்ஜ் சோரஸ், "மோடியும், அதானியும் மிக நெருக்கமானவர்கள். அவர்கள் இருவரது வளர்ச்சியும் ஒன்றோடு ஒன்று பிணைந்தது. தற்போது அதானி குழுமம் சீட்டுக் கட்டு சரிவது போல் சரிந்துள்ளது. ஆனால், இந்த விவகாரத்தில் மோடி அமைதியாக இருக்கிறார். சர்வதேச முதலீட்டாளர்களின் கேள்விக்கு அவர் நாடாளுமன்றத்தில் பதில் அளித்தாக வேண்டும். அதானி குழுமத்தின் சரிவு மோடியின் ஆட்சியை வலுவிழக்கச் செய்யும். ஒருவகையில், இது இந்தியாவில் ஜனநாயக மறுமலர்ச்சிக்கான வாய்ப்பை ஏற்படுத்தும்" என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

இப்போது அதானியின் சாம்ராஜ்யம் சரிந்து விட்டது;

இன்ஷா அல்லாஹ் வரும் 2024 மக்களவை பொதுத் தேர்தலில் மோடியின் சாம்ராஜ்யமும் சரியும்!

☛ ஜகாத் கொடுப்பதின் சட்டமே குர்பானி கொடுப்பதற்கும் வருமா? குர்பானி கொடுப்பதற்கு வேண்டிய தகுதிகள் என்ன?

மைசூரிலிருந்து
எம்.முஹம்மது சுல்தான்

✍ ஜகாத் கொடுப்பதற்கு குறிப்பிட்ட அளவுள்ள தங்கம் அல்லது வெள்ளி அல்லது பணம் போன்றவை தனது கை வசம் வந்து அதில் ஓராண்டு முழுமை பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், குர்பானி கொடுப்பதற்கு அந்த பொருள் இருக்கவேண்டுமே தவிர, அதில் ஓராண்டு முழுமை பெற்றிருக்க வேண்டிய அவசிய மில்லை. குர்பானி கடமையாகக் கூடிய அந்த பிறை 10, 11, 12 ஆகிய மூன்று நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் அந்தப் பொருள் அவனுக்கு சொந்தமாகி விட்டால் குர்பானி அவன் மீது கடமையாகிவிடும். பருவ வயதை அடைந்து, ஜகாத் தின் பொருளளவு வசதி பெற்றி ருக்கக்கூடிய முஸ்லிமான ஒரு மனிதரின் மீது குர்பானி கடமை யாகும். எனினும், அவர் பயணம் செய்யக்கூடிய முஸாஃபிராக இருந்தால் அவர் மீது குர்பானி கடமையாகாது. இவ்வாறே பருவ வயதை அடையாத குழந்தைக்கு போதுமான வசதிகள் இருந்தா லும் அவர் மீதோ அந்தக் குழந்தை யின் பொறுப்பாளர் மீதோ குர்பானி கொடுப்பது கடமையாகாது. மேலும், பெண்கள் நகை அல்லது பணத்திற்கு சொந்தக்காரர்களாக இருந்தால் அவர்கள் மீதும் குர்பானி கடமையாகும்.

☛ பெண்களுக்கு பெருநாள் தொழுகையும், ஜும்ஆவுடைய தொழுகையும் கடமையில்லையா?

விழுப்புரத்திலிருந்து
ராபியத்துல் ஸஆதியா

✍ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஜும்ஆ தொழுகை நான்கு நபர்களைத் தவிர மற்றவர்களின் மீது கடமை யாகும்என்று கூறினார்கள். 1.பெண்; 2.நோயாளி; 3.அடிமை; 4.சிறுவர்" (நூல் : ஹாக்கிம், தார குத்னீ)

மேலும், பெண்கள் கணவருடைய பணிவிடையில் குறைவு செய்யக் கூடாது என்ற காரணத்தாலும், பெருநாள் போன்ற நாட்களில் அவர்களுக்கு வீட்டு வேலைகள்

பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
மு.முஹம்மது இஸ்மாயீல் காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

அதிகம் இருக்கும் என்ற காரணத் தாலும் அவர்கள் மீது பெருநாள் தொழுகை கடமையாகாது.

☛ குறிப்பிட்ட ஒரு வகைப் பூவை சகோதர சமுதாய நண்பர் கள் சாமி சிலை, சாமி போட்டோ மற்றும் உருவப்படங்களுக்குப் போடுவதற்காக பயன்படுத்து கிறார்கள். அதன் பெயரே சாமி பூ என்பதாகும். இந்தப் பூவை முஸ்லிம்கள் வியாபாரம் செய்ய லாமா? சில முஸ்லிம் பெண்கள் சம்பாத்தியத்திற்காக அந்த பூவை கூட்டிக்கொடுக்கிறார்கள். இப்படிச் செய்யலாமா?

கொடுமுடியிலிருந்து
முஹம்மது உவைஸ்

✍ அந்த வியாபாரம் கோவில் களுக்கு என்று மட்டுமே இருந் தால் அந்த வியாபாரம் செய்வது கூடாது. அப்படியின்றி பொது வான பூ வியாபாரம் என்ற வகை யில் இருந்தால் சாமி சிலைக்கும், மற்றவர்களுக்கும் பயன்படும் என்ற நிலையில் அந்த வியாபாரம் கூடும்.

☛ ரமளான் மாதத்தின் நோன்பு களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக ஸதக்கத்துல் ஃபித்ரு கொடுக்கப்படுகிறது. அப்படியானால் அன்று பிறந்த குழந்தைக்கு ஸதக்கத்துல்ஃபித்ரு ஏன் கொடுக்க வேண்டும்?

பள்ளபட்டியிலிருந்து
கே.எம்.முஹம்மது அலி

✍ அதில் இரண்டு விதமான நன்மைகள். ஒன்று : அந்த குழந்தைக்கு நன்மை. இரண்டு : ஸதக்கத்துல் ஃபித்ரு கொடுத்த அந்த தந்தைக்கு நன்மை. நோன்பில் ஏற்பட்ட குறைகளும் நிவர்த்தி செய்யப்படுகின்றன. கூடுதலான நன்மைகளும் தந்தைக்குக் கிடைக்கின்றன.

☛ புது மணத் தம்பதியர் ஒருவர் ரமளான் நோன்பு காலத்தில் உணர்ச்சி வசப்பட்டு சேர்ந்து விட் டால் அதற்கு குற்றப் பரிகாரம் என்ன செய்ய வேண்டும்?

✍ தொடர்ந்து 60 நாட்கள் நோன்பு வைக்க வேண்டும். இடை யில் பெருநாட்கள் போன்ற நோன்பு வைப்பது தடுக்கப்பட்டுள்ள நாட்கள் குறுக்கிடக் கூடாது. அது முடியாவிட்டால் 60 ஏழைகளுக்கு காலையும், மாலையும் வயிறு நிரம்ப உணவளிக்க வேண்டும். 60 ஏழைகளை ஒரிடத்தில் ஒன்று சேர்ப்பது சிரமமானால் ஒரு ஏழைக்கு தொடர்ந்து 60 நாட்கள் காலையிலும், மாலையிலும் உண வளித்தால் இன்ஷா அல்லாஹ் கப்பாரா நிறைவேறி விடும்.

☛ சுப்ஹு தொழுகை களாவாகி விட்டால் இரண்டு ரக்அத் சுன்னத் தையும் சேர்த்து களாச் செய்ய வேண்டுமா? மேலும் அஸர் தொழுகைக்குப் பின் மஃரிபு தொழுகை வரை நஃபில் மற்றும் விடுபட்ட தொழுகைகளை தொழுகலாமா?

தாராபுரத்திலிருந்து
உசேன் கான்

✍ ஃபர்ளுடைய தொழுகை தவறி விட்டால் கண்டிப்பாக அதன்

சுன்னத் இரண்டு ரக்அத்தையும் சேர்த்தே களாச் செய்ய வேண்டும். அஸர் தொழுகைக்குப் பின் மஃரிபு தொழுகை வரை எந்த நஃபில் தொழுகையையும் தொழக் கூடாது. விடுபட்ட தொழுகைகளை களாச் செய்து கொள்ளலாம்.

வாழ்த்துக்கள்!

குர்ஆனின் குரலின் பாசமிகு சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், விற்பனை முகவர்கள், சிறப்புப் பிரதிநிதிகள், குர்ஆனின் குரலின் ஒலி உலகெங்கும் ஒலித்திட துஆ செய்து வரும் வாசக நேயர்கள் அனைவருக்கும் எங்களின் இதயங்கனிந்த ''ஈத்முபாரக்'' நல்வாழ்த்துக்களை உரித்தாக்குவதில் பெருமகிழ்வு எய்துகிறோம்.

- குர்ஆனின் குரல் குழுமம்.

☛ ஹனஃபீ மத்ஹபின்படி பெண்கள் ஆண்களைப் போன்று தொழுகாமல் சற்று வேறுபட்டு ஸஜ்தாவில் தொடையோடு வயிறை ஒட்டி வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதே! ஆனால், புகாரி உடைய ஒரு ஹதீஸில் ஏழு உறுப்புகளை ஸஜ்தாவின் போது தரையில் படும்படி வைக்க வேண்டும் என்று ஆண், பெண் வித்தியாசமில்லாமல் சொல்லப்பட்டுள்ளது. இப்படியிருக்க பெண்களுக்கான இந்த வித்தியாசம் ஹனஃபீ மத்ஹபின்படி எங்கிருந்து சொல்லப்பட்டது?

பெரியகுளத்திலிருந்து
ஷாஜாதி பேகம்

✍ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தொழுது கொண்டிருக்கக் கூடிய இரண்டு பெண்களைக் கடந்து சென்றார்கள். அப்பொழுது "நீங்கள் இருவரும் ஸஜ்தாவின் போது சில சதைப் பகுதியை சில சதைப் பகுதியோடு சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள். இந்த ஹதீஸ் அபூதாவூத், நஸயீ, இப்னு மாஜா, தாரமீ போன்ற கிதாபுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்துதான் பெண்களின் ஸஜ்தாவுக்கான சட்டம் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மத்ஹபுகளுடைய இமாம்களின் மீது குறை தேட வேண்டிய அவசியம் நமக்கில்லை.

☛ சில பள்ளிவாசல்களில் ளுஹர், அஸர் போன்ற தொழுகைகளில் வெளிமைக் பயன்படுத்தப்படுகிறது. இது சரிதானா?

போடியிலிருந்து
முஹம்மது தாஹா

✍ சரியல்ல.

☛ நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணத்தின் போது அல்லாஹ்வை நேரடியாக சந்தித்தார்கள் என்று

ஒரு புத்தகத்தில் படித்திருக்கிறேன். ஆனால், "எந்த நாயகமும், நபிகளாரும் அல்லாஹ்வை நேரடியாகப் பார்க்க முடியாது. அப்படிச் சொல்பவர்கள் பொய் சொல்பவர்களாக ஆவார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது. மார்க்கம் என்ன சொல்கிறது?

சென்னையிலிருந்து
முஹம்மது ஹுஸைன்

✍ உலக நடைமுறையில் உலகத்தினுடைய கண்களை கொண்டு வெளிரங்கமாக யாரும் நிச்சயமாக அல்லாஹ்வைப் பார்க்க முடியாது. பார்த்ததுமில்லை. ஆனால், நபி (ஸல்) அவர்களோ இந்த உலகத்திற்கு அப்பாற்பட்ட ஒரு இடத்திற்குச்சென்று அல்லாஹ்வை நேரடியாகக் கண் குளிர பார்த்தார்கள் என்பது குர்ஆன், ஹதீஸ்கள் மூலமாக உறுதிபடுத்தப்பட்டுள்ள தெளிவான விஷயமாகும். யாரும் அதை மறுக்க முடியாது. எனவே, நீங்கள் படித்த அந்த புத்தகத்தில் உலக ரீதியான, நடைமுறையை அனுசரித்து சொல்லப்பட்டிருக்கலாம்.

☛ முஸ்லிம்கள் பீடி, சிகரெட், பான்பராக் போன்றவற்றை விற்பனை செய்யலாமா?

மடப்புரத்திலிருந்து
முஹம்மது பிலால்

✍ இதுபோன்ற உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய பொருட்களை விற்பனைச் செய்வது மக்ரூஹாகும். சில மார்க்க அறிஞர்கள் அதை ஹராமுக்குச் சமீபமான குற்றத்தில் சேர்த்து எழுதியுள்ளார்கள்.

☛ சில பள்ளிவாசல்களில் வலது ஓரத்தின் மூலையில் கலர் துணிகளை அலங்காரம் செய்து அதன் மீது மலர்கள் அணிவித்திருக்கிறார்கள். இதன் நோக்கம் என்ன?

சென்னையிலிருந்து
அப்துல் வஹ்ஹாப்

✍ நீங்கள் கூறுவது ஒரு புதிய விஷயமாக உள்ளது. இப்படி ஒரு விஷயத்தை நாம் எங்கும் கண்டதில்லை. ஆனால், இப்படிச் செய்பவர்கள் நிச்சயம் மார்க்கத்தை விளங்காதவர்கள் போலத் தெரிகிறது. மார்க்கத்திற்கும், அவர்களின் இந்த செயல்பாடுகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அல்லாஹ் அவர்களுக்கு விளக்கத்தைத் தருவானாக.

☛ வெள்ளிக்கிழமையன்று சுப்ஹு தொழுகையில் பெரும்பாலான இமாம்கள் முதல் ரக்அத்தில் சூரா ஸஜ்தாவும், இரண்டாவது ரக்அத்தில் தஹ்ர் என்ற சூராவையும் ஓதுகிறார்கள். இதற்கு ஆதாரம் உண்டா?

பொட்டல்புதூரிலிருந்து
உவைஸ் அஹமது

✍ அவர்கள் ஓதுவது முழுக்க சுன்னத்தான செயல்களாகும். நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு ஓதியதாக புகாரீ, முஸ்லிம், திர்மிதீ, நஸயீ, தாரமீ போன்ற ஹதீஸ் கிதாபுகளில் முறையாக ஹதீஸ்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, நமது இமாம்களைக் குறை கூறாதீர்கள்.

ஸ்தாபிதம் : 1957 Regd. S.No. : 46 of 1976 بسم الله الرحمن الرحيم Cell : 94433 91412, 94432 01097

MADRASA-I-MAZAHIRUL ULOOM VELLAKKALPATTI (P.o.), SALEM - 12.

மத்ரஸயே மழாஹிருல் உலூம்

வெள்ளக்கல்பட்டி (P.o.), சேலம் - 636 012.

இன்ஷா அல்லாஹ் நமது கல்லூரி ஷவ்வால் பிறை 13-ம் நாள் 04.05.2023 தேதி வியாழக்கிழமை அன்று துவங்க உள்ளது.

தவ்ரதுல் ஹதீஸ் பிரிவின் சிறப்பம்சங்கள்

நமது மத்ரஸயே மழாஹிருல் உலூம் அரபிக் கல்லூரியில் கடந்த 36 வருடங்களாக "தவ்ரதுல் ஹதீஸ்" பிரிவின் பாடங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் சிறப்பம்சங்கள் கீழ்வருமாறு :

★ ஸிஹாஹுஸ்ஸித்தா, முஅத்தா இமாம் மாலிக், முஅத்தா இமாம் முஹம்மத், தஹாவி ஷரீப் மற்றும் ஷமாயிலே திர்மிதீ ஆகிய கிதாபுகளின் பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

★ நமது மத்ரஸாவின் நூலகம் பழைய மற்றும் புதிய புத்தகங்களால் நிறைந்துள்ளது. குறிப்பாக மாணவர்கள் பயன்பெறக்கூடிய பல அரிய ஹதீஸ் கிதாபுகள் உள்ளன.

முஃப்தீ பிரிவு

❖ வராஸத் (வாரிசுரிமை) பிரச்சனைகளில் முழுக்கவனம் செலுத்தப்படுகிறது. சட்ட நூல் 'ஸிராஜி' முழுமையாக பயிற்றுவிக்கப்படுகிறது.

❖ ரத்துல் முஹ்தார், பதாவா மஹ்மூதிய்யா முழுவதும் மற்றும் இதர ஃபிக்ஹ் கிதாபுகளும் 'முதாலஆ' செய்வித்து பிக்ஹ் விஷயத்தில் ஆழ்ந்த ஞானம் ஏற்படுத்தப்படுகிறது.

தகுதி : 90க்கு மேலே மதிப்பெண் பெற்று ஆலிம் ஸனது பெற்றிருப்பதோடு நுழைவுத் தேர்விலும் முதல் தரத்தில் வெற்றி பெற வேண்டும்.

தஹ்மீலே அதப்

இந்தப் பிரிவு கடந்த 35 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இதில் கீழ்காணும் கலைகளில் ஆழ்ந்த கவனம் செலுத்தப்படுகிறது.

1) நஹ்வு 2) ஸர்பு 3)அரபி எழுத்துப் பயிற்சி (அரபி ஹேன்ட்ரைட்டிங்)
4) அரபி குத்பாக்கள் – மனனம் செய்விப்பது.
5) மொழியாக்கம் (அரபி to தமிழ்) (தமிழ் to அரபி)
6) அரபியில் சரளமாகப் பேசுவது. 7) அரபி மொழியைப் பிழையின்றி எழுதுவது.

அரபி, உர்தூ மொழியில் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஹிஃப்ழு பிரிவில் சேரத் தகுதி : 11 வயது நிறைந்த, குர்ஆன் ஷரீப் பார்த்து சரளமாக ஓதக்கூடியவர்கள் இந்தப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இப்படிக்கு மவ்லானா அல்ஹாஜ் **முஹம்மது அனீஸ்கான் சாஹிப்,**
முதல்வர் : **மத்ரஸா-யே-மழாஹிருல் உலூம் அரபிக் கல்லூரி, சேலம் - 12.**

எனினும், ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து அதையே ஓதாமல் இடையிடையில் வேறு சூராக்களை மாற்றி ஓதிக் கொள்ள வேண்டும் என்பதுதான் மார்க்க அறிவுரையாகும்.

☛ சிலர் ஸுஃபர் மாதத்தில் பூரி பாத்திஹா என்றும், ஹஜ்ஜுப் பெருநாளன்று ஆட்டின் ஈரலை எடுத்து, ஈரல் பாத்திஹா என்றும் நம்மவர்கள் செய்கிறார்கள். இதற்கு மார்க்கத்தில் இடம் உண்டா?

பழனியிலிருந்து
அப்துல்லாஹ்

✍ இப்படியெல்லாம் செய்வதற்கு நம் மார்க்கத்தில் அனுமதியில்லை.

☛ ஹள்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானீ (ரஹ்), ஹள்ரத் இமாம் அபூஹனீஃபா (ரஹ்) போன்ற மார்க்க மேதைகள் இஷா தொழுகைக்குச் செய்த ஒளுவோடு ஃபஜ்ரையும் தொழுதுள்ளார்கள் என்று படித்துள்ளேன். அப்படியானால், அவர்கள் தூக்கம் மற்றும் சிறுநீர் போன்ற சுய தேவைகளை நிறைவேற்றி இருக்க மாட்டார்களா?

உத்தமபாளையத்திலிருந்து
சிராஜுத்தீன்

✍ அவர்கள் அப்படி இஷாவுக்குச் செய்த ஒளுவோடு சுப்ஹு தொழுகையை நிறைவேற்றி வந்த அந்த குறிப்பிட்ட நாட்களில் ஒளுவை முறிக்கக்கூடிய ஆழ்ந்த தூக்கமோ அல்லது சிறுநீர் கழித்தல் போன்ற காரியங்களோ நிச்சயம் ஏற்பட்டிருக்காது. இது ஒன்றும் முடியாத காரியமல்ல. மனிதன் நினைத்தால் எதையும் கட்டுப்படுத்த முடியும் என்பதற்கு நமக்குள்ளேயே ஏராளமான நிகழ்வுகள் உள்ளன. பஸ்களில் தொடர்படியாகப் பயணம் செய்பவர்கள் சுய தேவைகளை கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். ஏதாவது காரியமாக ஒரு வேலையில் மூழ்கி விட்டவர்கள் எந்த தூக்கத்தையும், எந்தவிதமான சுய தேவைகளையும் பொருட்படுத்தாமல் தங்களுடைய ஒரே சிந்தனையில் ஈடுபட்டிருப்பதை பார்த்திருக்கிறோம். எனவே, இஷாவுக்குச் செய்த ஒளுவோடு மனதைக் கட்டுப்படுத்தி அல்லாஹ்வுக்காகவும், இந்த சமுதாயத்திற்காகவும் பாடுபட்ட அந்த பெரியார்களைக் குறை கண்களோடு பார்ப்பது அழகானதல்ல.

☛ கழுதைப் பால் உடலுக்கு ஆரோக்கியம் என்று சொல்கிறார்கள். அருந்தலாமா?

புதுவையிலிருந்து
ஆப்ரின் தஸ்ரின்

✍ கூடாது.

☛ தற்போதுள்ள இஸ்லாமிய நூல்கள் விற்பனை எப்படி உள்ளது?

திண்டுக்கல்லிலிருந்து
அபூபக்கர்

ஈகை பெருநாள் வாழ்த்துக்கள்!

ஆடைகளால் ஆனந்தம்

மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

✍ நெட் போன்ற தூரித சேவைகள் வந்து விட்டதால் இயற்கையாக அச்சிடப்பட்ட நூல்கள் பொதுவாகவே படிப்பதற்குக் குறைந்து விட்டன. எனினும், உலகம் சம்பந்தப்பட்ட நூல்கள், இதழ்கள் அதிகம் விற்பனைக்கு வந்து விட்டதாலும், மார்க்க நூற்களை பணம் கொடுத்து வாங்குவதற்கு முஸ்லிம்களின் சிந்தனைகள் தயங்க ஆரம்பித்துவிட்டன.

☛ ஒருவர் தன்னுடைய வாழ்வில் விடுபட்ட தொழுகைகளைத் தொழுது வருகிறார். சில சமயங்களில் 5 - 6 நாட்களுடைய தொழுகைகளை ஒரே நாளில் தொழுகிறார். அப்படி தொழுவது கூடுமா? ஒவ்வொரு தொழுகைக்கும் பாங்கும், இகாமத்தும் சொல்ல வேண்டுமா?

தாராபுரத்திலிருந்து
முஹம்மது அலீ

✍ ஒரே நாளில் களா தொழுகைகளை மொத்தம் மொத்தமாக தொழுவதை விட ஒவ்வொரு நேரத் தொழுகையுடன் அந்தந்த நேர களா தொழுகையை சேர்த்துத் தொழுவதுதான் இலகுவானதும், சிறந்ததுமாகும். தொடர்ந்து தொழும்போது முதல் தொழுகைக்கு மட்டும் பாங்கு சொல்லி விட்டால் போதுமானது. மற்ற தொழுகைகளுக்கு இகாமத் மட்டும் போதுமானது.

☛ இஸ்லாத்தில் குழந்தையில்லாதவர்கள் தத்தெடுக்கலாமா?

பெங்களூரிலிருந்து
முஹம்மது ரஃபி

✍ வழமையிலுள்ள முறைப் படி மற்றவரின் குழந்தையை முழுமையாக தத்தெடுத்தல் கூடாது. அதாவது, அந்த குழந்தைக்கு எடுத்தவரின் சொத்திலிருந்து பங்கு என்று சொல்லுமளவுக்கு உரிமை கொடுத்து வளர்ப்பதை மார்க்கம் அனுமதிக்கவில்லை. மேலும், அந்தக் குழந்தை வாலிபமாகி விட்டால் வீட்டிலுள்ள ஆண், பெண்களுக்கு மத்தியில் கோஷா முறையைக் கடைபிடிப்பது மிக மிக அவசியமாகும். எனவே, குழந்தையில்லை என்ற காரணத்திற்காக மட்டும் இன்னொருவரின் குழந்தையை எடுத்து அதை தன் குழந்தை போன்று வளர்த்து, வாலிபமாக்கி, படிக்க வைத்து, திருமணம் செய்து கொடுத்து அதன் எல்லா தேவைகளையும் நிறைவுபடுத்தி கொடுப்பது தவறாகாது.

☛ சூரியன் மறைந்த பின்பு எத்தனை நிமிடங்கள் கழித்து மஃரிபு தொழுகையை தொழ வேண்டும்?

ஈரோட்டிலிருந்து
அப்துல் ஹக்கீம்

✍ குறைந்தபட்சம் 4 நிமிடங்களும், அதிகபட்சம் 8 நிமிடங்களும் கழிந்து விட்டால் போதுமானது. அதற்கு மேல் தாமதப்படுத்தக் கூடாது. 4 நிமிடங்களை விட குறைக்கவும் கூடாது.

ஜக்காத்

அல்-அமீன் எத்தீம் கானா

அல்-அமீன் நகர், கோ.புதூர், மதுரை-625007.

அஸ்ஸலாமு அலைக்கும்

அல்லாஹ்வின் அளப்பெரும் கருணையினால்...

நமது மதுரை அல்-அமீன் எத்தீம் கானா

60 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

உலகெங்கும் பணியாற்றி கொண்டிருக்கும் ஆயிரமாயிரம்

மாணவர்களே அதற்கு மகத்தான சாட்சி.

எத்தீம் பிள்ளைகளுக்கு முழுமையான தீன்கல்வி,

கல்லூரிப் படிப்பு வரை உலக கல்வி, உணவு, உடை, மருத்துவம்,

தங்கும் வசதி என அத்துனையும் இலவசமாக வழங்கி தாயன்புடன்

பராமரித்து பாதுகாத்து வரும் நமது அல்-அமீன் எத்தீம் கானாவிற்கு

உங்கள் ஜக்காத்தை பெருமளவில் வழங்கி

எத்தீம் பிள்ளைகளின் உயர்வுக்கு உதவிடுமாறு

அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் ஜக்காத்/சதக்கா போன்ற உதவிகளை கீழ்காணும்

வங்கி கணக்கிற்கு அனுப்பி எத்தீம் பிள்ளைகளின் வாழ்வை

மேம்படுத்த உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

OUR BANK DETAILS

Current A/c. No.435401010010013

IFSC Code : UBIN0803499

Union Bank of India,

South Masi Street, Madurai-1

இன்ஷா அல்லாஹ் வங்கியில் பணம் செலுத்தியதும் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு : **98420 21786 | 97894 89494**

☛ இறந்தவரின் வீட்டைப் பூட்டி விட்டால் மலக்குகள் வரமாட்டார்கள் என்று சொல் கிறார்களே. விளக்கம் தேவை.

கரூரிலிருந்து
முஜீபுர் ரஹ்மான்

✍ தங்குவதற்கு ஆளில்லை என்றால் வீட்டைப் பூட்டித்தான் ஆக வேண்டும். மலக்குமார் களின் வருகைக்காக வீட்டை திறந்து வைக்க வேண்டும் என்று எங்கும் சொல்லப்படவில்லை. நல்ல காரியங்கள் நடந்து கொண் டிருந்தால் நிச்சயம் மலக்குமார்கள் வருவார்கள். அவசியமில்லாத நிலையில் வீட்டைப் பூட்டி வைப்பது தவறாகாது.

☛ குற்றம் கண்டுபிடிப்பதிலும், பெருமையடிப்பதிலும் நம்மவர்கள் வீணான குழப்பத் திற்கும், சண்டை - சச்சரவிற்கும் ஆளாகிறார்கள். இவற்றிலிருந்து நிம்மதி பெறவும், சுமூக மாக இருக்கவும் இஸ்லாம் கூறும் அறிவுரைகள் என்ன?

விழுப்புரத்திலிருந்து
பத்ருதீன்

✍ ஒவ்வொரு முஸ்லிமும், தான் செய்ய வேண்டிய அல்லாஹ்வுடைய கடமைகளையும், அடியார் களுடைய கடமைகளையும் முறையாகச் செய்வதோடு, அடுத்தவர்களின் குறைகளைப் பார்க்காமல் தன்னுடைய குறைகளை ஆய்வு செய்து, தன்னுடைய அமல்களைச் சீர்திருத்தம் செய்தாலே இன்ஷா அல்லாஹ் இந்தச் சமுதாயத் திற்கு இடையில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் தீர்ந்து நிச்சயம் சுமூகமான நிலைகள் ஏற்படத் துவங்கிவிடும்.

☛ ஆல்கஹால் கலந்த ஸ்பிரே களை அடித்துக் கொண்டு தொழுகையில் ஈடுபடலாமா?

காயல்பட்டிணத்திலிருந்து
அஹமது தம்பி

✍ கூடாது.

☛ ஹள்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹள்ரத் மர்யம் (அலை) அவர்களின் வயிற்றில் இருந்த போது மர்யம் அவர்களின் சகோ தரர் தன் சகோதரியின் மீது வெறுப்படைந்து, அவரை கத்தியால் குத்த முயற்சி செய்தார். மர்யம் அவர்கள் அதை கவனிக்க வில்லை. அப்பொழுது வயிற்றுக் குள் இருந்த ஹள்ரத் ஈஸா (அலை) அவர்கள் உள்ளிருந்தே பேசியதாக ஒருவர் பயான் செய் தார். நாம் கேட்ட வரை வயிற்றிலி ருந்து வெளியே வந்ததற்குப் பின்பு தான் தொட்டில் குழந்தையாக இருந்தபோது ஹள்ரத் ஈஸா (அலை) அவர்கள் பேசினார்கள் என்றுதான் கேள்விப் பட்டிருக்கிறோம். எனவே, அவர் சொன்ன அந்த செய்தி சரிதானா?

அங்காடிமங்கலத்திலிருந்து
ஹபீப் முஹம்மது

✍ அவரின் தகவல் தவறானது. நீங்கள் கேள்விப்பட்டதுதான் உண்மையானது.

☛ கொடுங்கோலன் ஃபிர்அவ்னுக்கு குழந்தை இருந்ததாக நண்பர் ஒருவர் கூறுகிறார். சரிதானா?

நாமக்கல்லிலிருந்து
அப்துர் ரஹீம்

✍ சரியில்லை. அவன் தன் மனைவியைக் கூட நெருங்க முடியவில்லை.

☛ நமது நான்கு மத்ஹபுகளிலும் களாத் தொழுவது அனுமதிக்கப் பட்டதா? களா என்ற ஒன்றே இல்லை என்று சிலர் சொல்கிறார் கள். அது சரியா? மேலும் ஹஜ் ஜுடைய நாட்களில் லுஹர் நேரத் தில் அஸர் தொழுகையையும் இஷா வுடைய நேரத்தில் மஃரிப் தொழுகை யையும் சேர்த்து தொழப்படுகிறது. இந்த முறையை நமது ஊர்களி லும் மற்ற நாட்களில் தொழலாமா? அல்லது இந்த அனுமதி ஹஜ்ஜு நாட்களில் மட்டும் தானா?

புவனகிரியிலிருந்து
மைதீன் பாட்சா

✍ எல்லா மத்ஹபுகளின் படியும் நேரம் தவறிவிட்ட தொழுகை களை கண்டிப்பாக களாவுடைய நிய்யத்தோடு தொழுதே ஆக வேண்டும். தொழுகையை முற்றிலு மாக விடுவதற்கு ஷரீஅத்தில் எந்த நிலையிலும் நிச்சயமாக அனுமதி யில்லை. அடுத்து ஹஜ்ஜுடைய நாட்களில் அரபா, முஜ்தலிபாவில் மட்டும்தான் தாங்கள் கூறியது போன்று இரண்டு தொழுகைகளை ஒரு சேர தொழமுடியும். மற்ற நாட்களில் அல்லது அதே ஹஜ் ஜுடைய நாளில் உலகத்தின் மற்ற எந்த பகுதியிலும் ஹனபி மத்ஹபின்படி நிச்சயமாக அப்படி இரண்டு நேரத் தொழு கைகளை ஒன்று சேர்த்து தொழுவதற்கு அனுமதியில்லை.

☛ கணவன்-மனைவி இருவரும் ஹஜ்ஜுக்கு செல்ல நிய்யத் செய்து அதற்கான ஏற் பாடுகளை செய்துகொண்டி ருக்கும் பொழுது கணவர் இறந்து விட்டால் மனைவி ஹஜ்ஜு செய்ய வேண்டுமா? இல்லையா?

ஆந்திராவிலிருந்து
எம். அன்வர் பாஷா

✍ அவரை அழைத்துச் செல் வதற்கு தகுதியான மஹ்ரமான ஆண்கள் இருந்து இத்தாவு டைய காலமும் முடிந்துவிட்டால், ஹஜ் ஜுக்கு செல்ல வேண்டும். இல்லை யெனில் செல்வது கடமையல்ல.

☛ மவ்த்தானவர் மீது குர்பானி கொடுக்கலாமா? குர்பானி கொடுத் தால் மவ்த்தானவருக்கு நன்மை கிடைக்குமா? வருடாவருடம் என் தகப்பனார் மீது நாங்கள் குர்பானி கொடுத்து வருகிறோம். அதற்கு நன்மை உண்டா?

நாகப்பட்டிணத்திலிருந்து
அஹமது ஷரீப்

✍ ஆம். நிச்சயமாக அவர்களுக் காக கொடுக்கப்படக் கூடிய குர்பானிகளின் நன்மை அவர்களை சென்றடைந்தே தீரும். குர்பானி கொடுப்பவருக்கு அதன் நன்மை யிலிருந்து சற்றும் குறையாது.

நூல்: மிஃராஜ் (விண்ணுலகப் பயணம்)
ஆசிரியர் : சோதுகுடி ஹாஜி மு.முஹம்மது இஸ்மாயீல்,
M.Com, M.Ed, M.Phil. C.S.,
பக்கங்கள் : 92; விலை : ரூ.60/-
வெளியீடு : ரஹ்மா பப்ளிகேஷன்ஸ்,
16/23-D, பேராசிரியர் காலனி
பாட்சா நகர், காந்திஜி ரோடு,
புதூர், இளையான்குடி,
சிவகங்கை மாவட்டம்.
அலைபேசி : 9486671468

மிஃராஜ் பயணம் குறித்து கூறும்குர்ஆன் ஆயத்துகள், அரபி பைத்துகள் இந்நூலை அணி செய்கின்றன. மிஃராஜ் பயணத்திற்கு முதல் நாள் இரவே மலக்குகள் பூமிக்கு வருகை தந்து பயண அறிவிப்பை வெளிப்படுத்திய விதம் வியப்புக்குரியது. பைத்துல் முகத்தஸில் அனைத்து நபிமார்களும் இறுதித் தூதர் நபி (ஸல்) அவர்களுக்கு நிகழ்த்திய வரவேற்புரை நிரல்படுத்தப்பட்டுள்ளது. சித்ரத்துல் முன்தஹா மற்றும் ஹவ்ளுல் கவ்தர் பற்றிய வர்ணனைகள் வசீகரமானவை. ஹிஜாபுல் அக்பரில் நாயகத் திருமேனி (ஸல்) அவர்களும், ஹள்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களும் நடத்திய உரையாடல் உள்ளத்தை நெகிழ வைக்கிறது. ஒவ்வொரு நபிமார்களுக்கும் எத்தனை முறை வஹீ இறங்கியது என்பதைப் பற்றியும், அவர்களுக்கு சூட்டப்பட்ட சிறப்புப் பெயர்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. புனித இரவுகளில் செய்ய வேண்டிய அமல்களின் பட்டியல் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. அனைவரும் படித்து அதன் மூலம் பலன் பெற வேண்டிய நன்னூல்.

* * *

நூல் : அரபி ஆசான் (இரண்டாம் பாகம்)
ஆசிரியர் : மவ்லவீ ஹாஃபிழ் காரீ M.H.ஷஃபீ அஹ்மத் தாவூதி
பக்கங்கள் : 144; விலை : ரூ.50/-
கிடைக்குமிடம் : இமாம்,
ஷம்ஸ் பீரான் பள்ளிவாசல்,
திருச்சி – 8.
செல் : 8676107227

ஓரியண்டல் அரபிப்பள்ளிகளிலும், அரபி மொழியை பாடத் திட்டத்தில் வைத்துள்ள மெட்ரிக் பள்ளிகளிலும் ஆறு, ஏழு போன்ற சிறிய வகுப்புகளுக்கு கற்றுக் கொடுக்கப்படும் அரபி பாடநூலான அல்கிராஅத்துல் வாளிஹா எனும் அரபி நூலின் மொழிபெயர்ப்பும், ஒலி பெயர்ப்பும் தான் அரபி ஆசான் எனும் இந்நூலாகும். எனவே அரபி ஆசிரியர்கள் இந்நூலை வாங்கி தாங்கள் பயனடைவதோடு மாணவ, மாணவிகளுக்கும் வாங்கிக் கொடுத்து பயனடையச் செய்யலாம்.

* * *

ஆய்வு : பாவா

பெண்கள் சமுதாயத்தின் கண்கள்!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
(ஜம்பை ஜப்பார்)

"நிச்சயமாக முஸ்லிமான ஆண்களும், பெண்களும், மூ'மினான ஆண்களும், பெண்களும் என்று எட்டு வகைகளில் ஆண்களோடு பெண்களையும் சேர்த்து கவுரவப்படுத்தும் அல்லாஹ், அவர்களுக்கு மன்னிப்பையும், மிகப் பெரும் நற்கூலியையும் தயார் செய்துள்ளேன் என்று கூறுகிறான். ஆண்களுக்கு பெண்களிடம் மனஅமைதி கிடைக்கிறது என்றும் அல்லாஹ் கூறுகிறான்.

பொறுமையின் சிகரம் பெண்களே என்பதை ஹள்ரத் அய்யூப் நபி (அலை) அவர்களின் மனைவி ரஹீமா அவர்கள் நிரூபித்து சாதனை படைத்துள்ளார்கள்.

தாயின் பெருமையை நபி (ஸல்) அவர்கள் இப்படி வர்ணிக்கிறார்கள் : "தாயின் பாதத்தின் கீழ் சொர்க்கம் இருக்கிறது."
பெண்ணினத்தின் பெரும் பயனாய் பேரறிவின் நிலைகளனாய் கண்ணான பாத்திமுத்தை கண்டெடுத்த நாயகமே! என்பதில் பெண்ணினத்திற்கே பெருமை சேர்த்துத் தந்துள்ளார்கள் ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்கள்.
நல்ல முத்தே நங்கை முத்தே! இல்லறத்தின் இன்பமுத்தே! இனிய முத்தே! முத்தே பாத்திமா! என்று சொல்லும்போது பெண்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது.

"என் மனைவி எனக்கு வழிகாட்டியாயிருப்பதால் ஒரு முறை கூட நான் என் மனைவியை 'ச்சீ" என்று கூட சொன்னதில்லை" என்றார்கள் கலீபா ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள்.

நபிமணிக்கு உறுதுணையாயிருந்தவர்கள் அன்னை கதீஜா நாயகி.

நபிமார்களையும், வலிமார்களையும் பெற்றெடுத்தவர்கள் பெண்கள்தான்!

சுவனத்தில் தலைவியாக இருப்பவர்கள் ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்கள்.

"அன்னிஸா - பெண்கள்" என்று ஓர் அத்தியாயத்தை அல்குர்ஆனில் சொல்லிப் பெண்களை பெருமைப்படுத்தியுள்ளான் அல்லாஹ், பெண் என்ற வார்த்தை குர்ஆனில் 46 இடங்களில் இடம் பெற்றிருக்கிறது.

இவ்வளவு சிறப்புக்கள் பெற்றுள்ள பெண்களான

யுவதிகளுக்கு சில அவதிகளும் இருக்கத்தான் செய்கின்றன.

கணவன், பிள்ளைகள் கண வனைச் சார்ந்தவர்களுக்கெல் லாம் பணிவிடை செய்து பெயர் பெறுவது ஒரு சாதனைதான். பிரசவம்; இது ஒரு மறுபிறவி; ஹள்ரத் மர்யம் (அலை) அவர்கள் பிரசவ வேதனை தாங்காமல்

இதற்கு முன்பே நான் மரணித்து இருக்கக் கூடாதா என் று அ ல் ல ா ஹ் வி ட ம் முறையிட்டார்களே!

பெண்ணை விரும்பாத குடும் பத்தில் பெண் பிறந்து விட்டால் சொல்ல வேண்டியதேயில்லை.

அவதிப்படும் யுவதிகளுக்கு அல்லாஹ் சுவனம் வைத்திருக் கிறானே! இதுவே அவர்களுக்கு கிடைக்கும் பாக்கியம்.

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் அமர்ந்திருக்க, அவ் வழியே ஒரு பெண் போய்க் கொண்டிருந்தார். அவர் நடை வயோதிகப் பெண்மணி போல் இருந்தது. அ்பெண்மணி பாத்திமா நாயகி வீட்டுக்குள் போக, யாரோ என் மகளின் வீட்டுக்குள் போகி றாரே என்று நபி (ஸல்) அவர்கள் ஹள்ரத் பாத்திமா நாயகிவீட்டுக்குப் போக, அங்கே ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்கள் மட்டும்தான் இருந் தார்கள். "ஏம்மா! இப்போ ஒரு வயோதிகப் பெண் வந்தாரே எங்கே?" "இல்லை நாயகமே! நான் தான் வெளியிலிருந்து வந்தேன்" அப்படியா! வயோதிகப் பெண் போல் தெரிந்தது. அது நீதானா?" நபிமணியின் உள்ளத்தில் தங்கள் மகள் மீது தனியொரு மரியாதை யும், அன்பும் ஏற்பட்டது. பிறர் பார்வை தவறாக ஏற்பட நாம் காரணமாக அமைந்து விடக் கூடாது. இப்படி இருந்தால் யுவதி களுக்கு எந்த அவதியும் வராது.

மன்னர் கஜ்ரவியாவின் மகள் பாத்திமா ஹள்ரத் ஹஸன் பஸரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் தினமும் சென்று மார்க்களானம் கற்று வருவார். ஒரு நாள் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் "ஏம்மா கையில் மருதாணியா போட்டிருக்கிறாய்?" என்று கேட்டார்கள். திடுக்குற்ற பாத்திமா ஹள்ரத் என்கையைப் பார்த்திட்டீர்களா? அப்படியானால் இனிமே நான் உங்களிடம் கல்வி கற்க வரமாட்டேன்" என்று சொல்லி விட்டுப் போய் விட் டார்கள். மனவேதனைப்பட்ட ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், நான் எந்தத் தவறான எண்ணத் துடனும் பார்க்கலையே! என் பேத்தியைப் பார்ப்பது போல் தானே பார்த்தேன் ரஹ்மானே!

இனி நான் எந்தப் பெண் ணைப் பார்த்தாலும் அவர் என் கண்களுக்கு பெண்ணாகத் தெரியக்கூடாது என்று துஆ செய்தார்கள். அவர் மரணிக்கும் வரை எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அப்பெண் ஒரு

புனித ரமளானில் சுவனத்தை எடுத்து, நரகத்தை தூரமாக்குவோம்!

"உங்களில் ஒருவருக்கு அவரின் சுவனம் அவரின் செருப்பு வாரை விட மிக சமீபத்தில் இருக்கின்றது. நரகமும் அவ்வாறே! (மிக சமீபத்தில் இருக்கின்றது)" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஹள்ரத் இப்னு மஸ்ஊது (ரளி) அவர்கள் (புகாரி)

Successful indeed are the Believers

A.R.M

CEMENT KING

www.armsons.in

சிக்கனமான விலையில் சிமெண்ட், கம்பி வாங்கிட

தமிழகத்தின் I[st] 24 மணி நேர சிமெண்ட் கடை

A.R.M Sons

The Cement & Steel Market

வடக்கு ராஜ வீதி
புதுக்கோட்டை.
7373798900
7373798930
04322-221649

ஏர்போர்ட் ரோடு
திருச்சி.
7373798944
7373798942
armsonstrichy@gmail.com

ECR.
கோட்டைப்பட்டிணம்.
7373798911, 7373798912
04371-260260 armsonskpm@gmail.com

நகர் முழுவதும் 10 மூட்டைக்கும், மாவட்டம் முழுவதும் 50 மூட்டைக்கும் சிமெண்ட் இலவச டோர் டெலிவரி

மரமாக, மாடாகவே தெரிந்தார் என்பது வரலாறு.

பெண்கள் சமுதாயத்தின் கண்கள். கண்களை எப்படிப் பாது காப்போமோ அப்படி தங்களைப் பாதுகாத்து தீன் கொழுந்தாக வாழ்வோமானால் வீட்டிலும் அவதிப்பட வேண்டியதில்லை. வெளியிலும் அவதிப்பட வேண்டியதில்லை.

பெண்கள் பள்ளிவாசலுக்கு வருவதைக்கூட நபி (ஸல்) அவர்கள் தங்கள் இறுதிக் காலத்தில் விரும்பவில்லை.

ஹள்ரத் உம்முஹமீதா என்ற பெண்மணி நபிமணியிடத்தில் வந்து, "நாயகமே! நான் உங்கள் பின் நின்று தொழ விரும்பு கிறேன்" என்றார்கள். "நீ உன் வீட்டில் தொழுவதே சிறப்பு" என்று நபிமணி சொல்லியதை தர்கீப் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு பெண் வெளியில் சென் றால் தன்னை நன்றாக அலங் கரித்துக் கொள்ள ஷைத்தான் தூண்டுகிறான். எனவே, வெளி யில் நறுமணம் வீசக்கூடிய வாசனைப் பொருள்களை பெண்கள் பூசிக் கொள்ளக் கூடாது என்று மார்க்கம் தடை விதித்திருக்கிறது.

மார்க்கம் காட்டும் வழியைப் பின்பற்றினால் யாருக்கும் எந்த சேதாரமும் ஏற்படாது. அல்லாஹ் பாதுகாப்பானாக!

தமிழ்/ English நாளிதழ்களில் மற்றும்-
குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்ய...

Call-Whatsapp 86952 16016 CityAds

உங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும்?

எங்களிடம் கேளுங்கள்- உங்கள் இல்லம் வந்து சேரும்.

இஸ்லாமிய மற்றும் தமிழ் பதிப்பகங்களின் புத்தகங்கள்
தேவைகளுக்கு Call/Whatsapp: 98410 16016

CityAds Books www.cityadsbooks.com

இஸ்லாம் கூறும் ஜகாத் எனும் ஏழைவரி நலத்திட்டம்

மவ்லவீ ஹாஃபிழ் அ.சையது அலீ மஸ்லஹி பாழில் தேவ்பந்தீ

இஸ்லாமியப் பார்வையில் நிதியுதவி வழங்கல் திட்டம் இரண்டு. ஒன்று 'ஸதகா' எனும் தர்மநிதி! மற்றொன்று 'ஜகாத்' எனும் பொதுநிதி!

ரமளான் மாதம் வந்து விட்டாலே போதும், ஜகாத் எனும் பொருளாதாரக் கடமையும் முஸ்லிம்களுக்கு ஞாபகம் வந்து விடும். காரணம் ஏன்? ரமளான் நோன்பு கடமையான அதே ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் தான் ஏழைகளை வாழவைக்கும் நலத்திட்டமான ஜகாதும் கடமையாக்கப்பட்டது.

இது, இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்றாகவும், ஐம்பெரும் வழிபாடுகளில் ஒன்றாகவும் அமைந்திருக்கிறது. ஜகாதை கொடுக்காமலிருப்பது பெரும் பாவமாகவும், அதைக் கொடுக்க மறுப்பது இறை நிராகரிப்பாகவும் கருதப்படுகிறது.

இஸ்லாத்திற்காக உயிரையே கொடுக்கும் முஸ்லிம்கள் கூட ஜகாதை கொடுக்கத் தயங்குவதையும், பதுங்குவதையும் நாம் நிதர்சனமாகக் காணுகின்றோம். ஜகாத் கட்டாயக்கடமை என இஸ்லாம் கூறுகிறது.

"தொழுகையைக் கடை பிடியுங்கள், ஜகாதையும் [ஒழுங்காகக்] கொடுத்து வாருங்கள்".

- அல்குர்ஆன் 2:43

ஜகாத் இஸ்லாமியச் சின்னம்

அல்குர்ஆனில் சுமார் 82 இடங்களில் தொழுகையுடன் ஜகாதையும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தொழுகையையும், ஜகாதையும் நிறைவேற்றாதவர்களுக்கும், இஸ்லாத்திற்கும் எந்த ஒட்டும், உறவும் கிடையாது என்பதை இஸ்லாம் ஆணித்தரமாகப் பேசுகிறது.

"அவர்கள் தவ்பா செய்து, தொழுகையைக் கடைபிடித்து ஜகாதும் கொடுத்து வருவார்களானால், அவர்கள் உங்களுக்கு மார்க்கச் சகோதரர்களே"

- அல்குர்ஆன் 9:11

"நபி [ஸல்] அவர்கள் மரணித்து, அபூபக்ர் [ரளி] அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் அரபிகளில் சிலர் [ஜகாதை மறுத்ததன் மூலம்] இறைமறுப் பாளர்களாகி விட்டனர். அவர் களுடன் போர் தொடுக்க அபூபக்ர் [ரளி] தயாரானார்கள். உமர் [ரளி] "லாயிலாஹ இல்லல்லாஹ் கூறி யவர் தமது உயிரையும், உடைமையையும் என்னிடமிருந்து காத்துக் கொண்டார். தண்டனைக்குரிய குற்றம் புரிந்தவரைத் தவிர! அவரது விசாரணை அல்லாஹ் வசமே உள்ளது என நபி [ஸல்] அவர்கள் கூறியிருக்கும் போது, நீங்கள்

எவ்வாறு இந்த மக்களுடன் போர் புரிய முடியும்?" என்று கேட்டார்.

அபூபக்ர் (ரளி) அவர்கள் உமரை நோக்கி "அல்லாஹ்வின் மீது ஆணையாக! நபியிடம் வழங்கி வந்த ஓர் ஒட்டகக் குட்டியை இவர்கள் வழங்க மறுத்தால் கூட அதை மறுத்ததற்காக நான் இவர்களுடன் போர் செய்வேன்" என்றார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(புகாரி 1399, 1400)

ஜகாத் வசூலிப்பது இஸ்லாமிய அரசின் கடமை

"நபியே! அவர்களுடைய செல்வங்களிலிருந்து கட்டாய தர்மத்திற்கானதை எடுத்துக் கொண்டு, அதனால் அவர்களை உள்ளும், புறமும் தூய்மையாக்குவீராக! நிச்சயமாக உம்முடைய பிரார்த்தனை அவர்களுக்கு [சாந்தி] ஆறுதல் அளிக்கும் அல்லாஹ் யாவற்றையும் செவியுறுவோனாகவும், அறிபவனாகவும் இருக்கின்றான்"
- அல்குர்ஆன் (9 :103)

"நபி (ஸல்) அவர்கள் முஆத் (ரளி) அவர்களை யமன் தேசத்துக்கு (ஆளுநராக) அனுப்பினார்கள். அப்போது அவரிடம் 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை; நான் அல்லாஹ்வின் தூதர் என்ற உறுதி மொழியின் பால் அழைப்பீராக! இதற்கு அவர்கள் உடன்பட்டால் தினமும் ஐவேளைத் தொழுகையை இறைவன் கடமையாக்கியுள்ளான் என்பதை அவர்களுக்குக் கூறுவீராக! இதற்கும் அவர்கள் (மனமுவந்து) உடன்பட்டால், அவர்களில் செல்வந்தர்களிடம் (செல்வத்தை) பெற்று ஏழைகளுக்கு வழங்குவதற்காக அவர்களின் செல்வத்தில் இறைவன் ஜகாதை கடமையாக்கி உள்ளான் என்பதை அறிவிப்பீராக!' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்". (புகாரீ : 1395)

ஜகாத் கடமையாகி அதை வழங்கத் தகுதி பெற்றவர்கள் அவர்களாகவே மனமுவந்து அதை வழங்காத பட்சத்தில் இஸ்லாமிய அரசாக இருந்தால் ஒவ்வொரு செல்வந்தருக்கும் எவ்வளவு தொகை ஜகாத் கடமை என ஆராய்ந்து அவர்களிடமிருந்து ஜகாத் எனும் ஏழை வரியான பொது நிதியை, வசூலகர்களை அனுப்பி வைத்து, வசூல் செய்து, ஜகாத் நிதி பெறும் தகுதியுள்ளவர்களிடம் அதை ஒப்படைப்பது இஸ்லாமிய அரசின் கடமையாகும்.

ஜகாத் யார் மீது கடமை? அதன் தகுதிகள் என்ன?

1. இறை விசுவாசியாக இருக்க வேண்டும், 2. சுதந்திரப் புருஷராக இருக்க வேண்டும், 3. புத்தி சுவாதீனமுள்ளவராக இருக்க வேண்டும், 4. பருவ வயதை அடைந்திருக்க வேண்டும். 5. பொருளின் மீது அதிகாரம் படைத்திருக்க வேண்டும். 6. 87½ கிராம் தங்கமோ அல்லது 612 கிராம் வெள்ளியோ அல்லது இவற்றின் தொகையோ இருக்க

مدرسہ دارالعلوم شفیقیہ دھرمپوری

99420 31065
98651 74295

மத்ரஸா-யே-தாருல் உலூம் ஷபீஃகீயா
MADRASA-E-DARUL ULOOM SHAFEEQIYA

ESTD. 2010

3/559-G, NH-7, ABDUL AZEEZ NAGAR, MONAIYANKOTTAI (P.o.)
SALEM NEW BYE-PASS ROAD, **DHARMAPURI - 636 701.**

கண்ணியமிக்க இஸ்லாமியச் சகோதரர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்).....

தருமபுரி மாவட்டம் தருமபுரி NH-47 புதிய பைபாஸ் ரோட்டில் **மதரஸாயே – தாருல் உலூம் ஷபீக்கியா** என்ற பெயரில் ஹிப்ளு மதரஸா சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. இங்கு மார்க்கக் கல்வியுடன் உலகக்கல்வியும் கற்பிக்கப்படுகிறது. இங்கு படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் உணவு, இருப்பிடம், மருத்துவம் இலவசமாக செய்து தரப்படுகிறது. **இம்மதரஸா சிறப்பாக நடைபெற தங்களின் ஹதியா, ஜகாத், ஸதகாக்களைக் கொடுத்து உதவி செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

வல்ல ரஹ்மான் தங்கள் வியாபாரத்திலும், தொழில் துறையிலும், உங்கள் ஆயுள், ஆரோக்கியத்திலும், குடும்ப சந்தோஷத்திலும் பரக்கத் செய்தும், நோய் நொடியிலிருந்து காப்பாற்றியும், நலமுடனும், வளமுடனும் இருக்கச் செய்வானாக.

பேங்க் விபரம் :

SHAFEEQIYA ISLAMIC TRUST
STATE BANK OF INDIA A/c. 33605606624
IFSC : SBIN0000832 Branch : Dharmapuri

மாணவர்கள் சேர்க்கை அறிவிப்பு : இவ்வருடமும் நமது **மதரஸா தாருல் உலூம் ஷபீஃகீயாவில்** வருகின்ற மே 4ஆம் தேதி இன்ஷா அல்லாஹ் பழைய, புதிய மாணவர்கள் சேர்க்கப்படும்.

மேலும் மதரஸாவில் ❖ **நாஜிரா** (குர்ஆன் பார்த்து ஓதும் பிரிவு)
❖ **ஹிஃப்ழ்** (குர்ஆன் மனப்பாடம் செய்கின்ற பிரிவு)
❖ **தஜ்வீத்** (குர்ஆன் முறைப்படி ஓதுகின்ற பிரிவு)

அத்துடன் உலகக்கல்வி 5ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை தரமான ஆசிரியர்களைக் கொண்டும், தரமான உணவு மற்றும் தங்குமிடம் இம்மதரஸாவில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆகையால், இம்மதரஸாவில் தங்களுடைய பிள்ளைகளைச் சேர்த்து பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புக்கு : செல் : **9942031065 / 9865174295 / 9655772407**

வேண்டும், 7. இத்தகைய பொருளாதாரம் குறைவில்லாமல் ஒரு வருடம் முழுவதும் பரிபூரணமாக இருக்க வேண்டும். இத்தகைய ஏழு பண்புகளும் ஒருவரிடம் பரிபூரணமாக அமைந்து விட்டால் அவர் ஆண்டுக்கு ஒரு முறை கடமையான ஜகாதை கண்டிப்பாகக் கொடுத்தே ஆக வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது.

ஜகாத் என்பது வறுமை ஒழிப்புத் திட்டம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜகாதின் மூலமாக வறுமையை ஒழித்தார்கள் என்றால் அது மிகையாகாது. மேலும் ஜகாதின் வழியாக மாபெரும் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தினார்கள்.

பொருளாதாரம் செல்வந்தர்களிடம் மட்டுமே சுற்றி வராமல், ஏழைகளிடமும் செல்வச் சுழற்சியும், மறுமலர்ச்சியும் ஏற்பட 'ஜகாத்' எனும் ஏழை வரியான நலத்திட்டத்தையும், 'ஸதகா' எனும் தர்மநிதியையும் இஸ்லாம் செயல்படுத்தி, அது செல்வத்தைப் பரவலாக்கியது.

ஒரு தனி மனிதர் தான் சம்பாதிக்கும் பொருளாதாரம் யாவும் தனக்கே சொந்தம் என்ற தனியார்மயக் கொள்கை இஸ்லாத்தில் கிடையாது. தான் சம்பாதிக்கும் பொருளாதாரம் யாவும் அரசுக்கே சொந்தம் என்ற பொதுவுடமைக் கொள்கையும் இஸ்லாத்தில் கிடையாது.

உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல் போன்ற கொள்கைகளுக்கு அப்பாற்பட்டதுதான் இஸ்லாம். நடுநிலையான மார்க்கம்தான் இஸ்லாம்.

ஒருவர் தான் சம்பாதிக்கும் பொருளை தனக்கும் மிச்சப் படுத்தி வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதிலிருந்து நூற்றுக்கு இரண்டரை சதவீதத்தை 'ஜகாத்' எனும் கடமையான வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு செல வழித்தே ஆக வேண்டும் என்ற உத்தரவை இஸ்லாம் போடுகிறது.

சமுதாயத்தில் நலிந்தவர்களை வாழ வைக்கும் ஜகாத்

ஜகாத் வாங்கும் தகுதியுள்ளவர்களைப் பற்றி இஸ்லாம் கூறும் போது பின்வருமாறு கூறுகிறது.

"ஜகாத் எனும் நிதிகள் 1.வறியவர்கள், 2. ஏழைகள், 3. நிதியை வசூலிக்கும் ஊழியர்கள், 4. எவர்களுடைய இதயங்கள் (இஸ்லாத்தின் பால்) ஈர்க்கப்படுகின்றனவோ அத்தகையவர்கள், 5. அடிமைகளை விடுதலை செய்வதற்கும், 6.கடனாளிகள், 7.அல்லாஹ்வின் பாதையில் (அறப்போராட்டத்தில்) உள்ளவர்கள், 8. வழிப் போக்கர்கள் ஆகியோருக்கு உரியவை. இது அல்லாஹ் விதித்த கடமையாகும். அல்லாஹ் (யாவும்) அறிபவன்; மிக்கஞானமுள்ளவன்"

- அல்குர்ஆன் (9 : 60)

இஸ்லாம் மண்ணுக்கேற்ற மார்க்கம் மற்றும் அனைத்து சாராருக்கும் அது பொதுவானது என்பதை ஜகாத்தின் மூலம் நிரூபித்துக் காட்டுகிறது. ஜகாதின்

மூலம் ஏழை முஸ்லிம் களையும், நலிவடைந்த சகோதர சமுதாயத் தைச் சார்ந்தவர் களையும் இஸ்லாம் வாழ வைக் கிறது.

ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கூறுவதாவது : "நபி (ஸல்) அவர் கள் என்னைப் பார்த்து அலீயே! உம்மிடம் தங்க நாண யத்தில் இருபது தீனார்கள் இருந்து அவை ஓராண்டு பூர்த்தியாகி இருந்தால் அவற்றி லிருந்து அரை தீனாரை நீர் ஜகாத் கொடுக்க வேண்டும். ஓராண்டு பூர்த்தியாகாத பொருட் களில் ஜகாத் கிடையாது" எனக் கூறினார்கள். நூல் : அஹ்மது,

அபூதாவூது, பைஹகீ, இது ஒரு நல்ல வலுவான நபிமொழி என இமாம் புகாரீ (ரஹ்) கூறுகிறார்கள்.

"அலீயே! குதிரையிலும், அடிமையிலும் உமக்கு நான் மன் னிப்பு வழங்கிவிட்டேன். ஆனால், வெள்ளியில் ஜகாதைக் கொடுத்து விடுங்கள். நாற்பது வெள்ளி நாணயங்களுக்கு ஒரு வெள்ளி நாணயம் ஆகும். உம்மிடம் 199 வெள்ளிகள் இருந்தால் அது கடமையாகாது. 200 வெள்ளிகள் இருந்தால், அவற்றில் ஐந்து வெள்ளி கள் உம்மீது ஜகாத் கடமையாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல் : திர்மிதீ

தங்கம் மற்றும் வெள்ளியின் அளவு

87½ கிராம் தங்கம், 612 கிராம் வெள்ளி அல்லது காசு பணம் இருந்து, ஓராண்டு முழுவதும் குறைவில்லாமல் இருந்தால் இவற்றில் நாற்பதில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் நூற்றுக்கு இரண்டரை சதவீதம் ஜகாத் கடமையாகும்.

விளைபொருட்களில் ஜகாத்

அரிசி, கோதுமை, உளுந்து, பருப்பு, பயிர், மொச்சை, கொண்டைக் கடலை போன்ற விளைந்து, சீர்படுத்தி, சேமிக்கப் பட்டு, அன்றாட உணவுகளாகப் பயன்படுத்துகின்ற தானியங் கள் மீதும் ஜகாத் கடமை.

சேமிக்கப்படும் பழங்களான திராட்சை, பேரீச்சம்பழம் ஆகிய இருவகைப் பழங்கள் மீதும் ஜகாத் கடமையாகும்.

மற்ற கனிகள், காய்கறிகள், மளிகைப் பொருட்கள் அவை விளைபொருட்களாக இருந்தா லும் சரி! அவற்றின் மீது ஜகாத் கடமையாகாது.

நெல்போன்று தொலியுடன் சேமிக்கப்படும் தானியங்களின் குறைந்தபட்ச மகசூலும், திராட்சை, பேரீச்சம்பழங்களின் குறைந்த பட்ச மகசூலும் 1350 கிலோ, 1800 லிட்டர் ஆகும். உமியை நீக்கி சேமிக்கப்படும் குறைந்தபட்ச மகசூல் 675 கிலோ, 900 லிட்டர் ஆகும். இவற்றை விடக் குறைந்த தானியங்களுக்கு ஜகாத் கடமை இல்லை.

நீர்பாய்ச்சும் செலவின்றி மழைபோன்ற இயற்கை பாசனத் தால் விளையும் மகசூலில் பத் தில் ஒரு பகுதியும், நீர்பாய்ச்சும் செலவு இருந்தால் இருபதில் ஒரு பகுதியும் ஜகாத் கடமையாகும்.

"அவற்றை (விளை பொருட்களை) அறுவடை செய்யும் காலத்தில் அதற்குரிய (கடமையான) யாகத் (ஜகாத்)தைக் கொடுத்து விடுங்கள்". - அல்குர்ஆன் 6:141

ஒரே ஆண்டில் இரண்டு, மூன்று சாகுபடிகள் விளைந்தால் அவை அனைத்தையும் ஒரே அறுவடை மகசூலாகவே கணக்கிட்டு ஜகாத் கொடுக்க வேண்டும்.

தானியங்களுக்குரிய ஜகாத்தை ஒருமுறை செலுத்திய பின் பல்லாண்டுகள் அவற்றை சேமித்து வைத்தாலும், அவற்றுக்கு ஜகாத் கடமையில்லை.

வணிகப் பொருட்களில் ஜகாத்

"நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும், பூமியிலிருந்து நாம் உங்களுக்கு வெளிப்படுத்தித் தந்த (தானியங்கள், கனி வகைகள் போன்ற) வற்றிலிருந்தும் நல்லவற்றையே (தான தர்மங்களில்) செலவு செய்யுங்கள்".

- அல்குர்ஆன் 2:267

"வியாபாரப் பொருட்களுக்கு ஜகாத் கொடுக்க வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்"

நூல் : அபூதாவூது

வணிகப் பொருட்களுக்கு ஜகாத் எப்படி கொடுப்பது? ஆம்! ஓராண்டு செய்த வியாபாரத்தின் மூலம் 87½ கிராம் தங்கத்தின் நிகர லாபமோ அல்லது 612 கிராம் வெள்ளியின் நிகர லாபமோ கிடைத்து ஒரு வருடம் லாபம் பூரணமாக இருந்தால் நூற்றுக்கு இரண்டரை சதவீதம் ஜகாத் கொடுக்க வேண்டும்.

கால்நடைகளில் ஜகாத்

கால்நடைகள் என்றால் மூன்று உயிரினங்களைக் குறிக்கிறது. 1.ஒட்டகம், 2.மாடு, 3.ஆடு இம் மூன்று வகைகளிலும் இஸ்லாம் ஜகாத்தை கடமையாக்கியுள்ளது. முதலில் ஒட்டகத்தின் ஜகாத் நிலவரத்தைப் பார்ப்போம்.

ஒட்டகமும் ஜகாதும்

ஒருவரிடம் ஐந்து ஒட்டகங்கள் இருந்தால், அவற்றுக்கு ஒரு வயது நிரம்பிய செம்மறி ஆடு அல்லது இரண்டு வயதுள்ள வெள்ளாடு ஜகாத் கொடுக்க வேண்டும்.

பத்து ஒட்டகங்களுக்கு இரண்டு ஆடுகளும், பதினைந்துக்கு மூன்று ஆடுகளும், இருபதுக்கு நான்கு ஆடுகளும், இருபத்தைந்துக்கு ஒரு வயதுள்ள ஓர் ஒட்டகப் பெண் குட்டியோ அல்லது இரண்டு வயதுள்ள ஓர் ஒட்டக ஆண் குட்டியையோ ஜகாத் கொடுக்க வேண்டும்.

முப்பத்தாறு ஒட்டகங்களுக்கு இரண்டு வயதுள்ள ஓர் ஒட்டகப் பெண்குட்டியும், நாற்பத்தாறுக்கு மூன்று வயதுள்ள ஒரு பெண் ஒட்டகமும், அறுபத்தொன்றுக்கு நான்கு வயதுள்ள ஒரு பெண் ஒட்டகமும், எழுபத்தாறுக்கு இரண்டு வயதுள்ள இரு பெண் ஒட்டகங்களும், தொண்ணூற்றி ஒன்றுக்கு மூன்று வயதுள்ள இரு பெண் ஒட்டகங்களும், நூற்றி இருபத்

S.R.P.

9965170054
9788698607

சின்ன தோட்டம் விற்பனைக்கு

அழகர் கோவில் அருகில்...
தோட்டம், பிளாட்டுகள், நிலங்கள்

நத்தம் பகுதியில்...
மாமரம், தென்னை மரம்

மலைச்சாரல் பகுதியில்...
சின்ன தோட்டம், நிலம், பிளாட்

விற்பனைக்கு உள்ளது.

மற்றும் தோப்பு, நிலங்கள், பிளாட்
ஒரு சென்டு விலை சுமார் ரூ. 20 ஆயிரம் முதல்
இடங்களுக்கு ஏற்ற மாதிரி விலையில் உள்ளன.

தங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு நகர்ப் பகுதிகளிலும்,
புறநகர்ப் பகுதிகளிலும் பிளாட்டுகள் மற்றும் இடங்கள்

விற்பனைக்கு உள்ளன.

தொன்றுக்கு இரண்டு வயதுள்ள மூன்று பெண் ஒட்டகங்களும் ஜகாத் கொடுத்திட வேண்டும்.

இவற்றைவிட அதிகம் இருந்தால் அவற்றை நாற்பது நாற்பதாகப் பிரித்து, ஒவ்வொரு நாற்பதிற்கும் இரண்டு வயதுள்ள ஒரு பெண் ஒட்டகமும், ஐம்பது ஐம்பதாகப் பிரித்து ஒவ்வொரு ஐம்பதுக்கும் மூன்று வயதுள்ள ஒரு பெண் ஒட்டகமும் என்ற ரீதியில் இவ்வாறு கணக்கிட்டு ஜகாத் வழங்கிட வேண்டும்.

மாடுகளும், ஜகாத் வழிமுறைகளும்

ஒருவரிடம் முப்பது மாடுகள் இருந்தால், ஒரு வயதுள்ள ஒரு மாட்டுக் கன்றும், நாற்பதுக்கு இரண்டு வயதுள்ள ஒரு கன்றும், அறுபதுக்கு ஒரு வயதுள்ள இரண்டு கன்றுகளும் ஜகாத் கொடுக்க வேண்டும்.

இவற்றைவிட அதிகமாக இருப்பின் அவற்றை முப்பது முப்பதாகப் பிரித்து அல்லது நாற்பது நாற்பதாகப் பிரித்து ஒவ்வொரு முப்பதுக்கும் ஒரு வயதுள்ள ஒரு கன்றும், ஒவ்வொரு நாற்பதுக்கும் இரண்டு வயதுக் கன்று ஒன்றும் இவ்வாறாக கணக்கிட்டு ஜகாத் கொடுக்க வேண்டும்.

ஆடுகளும், அதன் ஜகாத் வழிமுறைகளும்

ஒருவரிடம் நாற்பது ஆடுகள் இருந்தால், ஒரு வயதுள்ள ஒரு செம்மறி ஆடு அல்லது இரண்டு வயதுள்ள ஒரு வெள்ளாடும், நூற்றி இருபத்தொன்றுக்கு இரண்டு ஆடுகளும், இருநூற்றி ஒன்றுக்கு மூன்று ஆடுகளும், நானூறுக்கு நான்கு ஆடுகளு மாக இவ்வாறு ஒவ்வொரு நூறுக்கும் ஓர் ஆடு வீதம் அதிகப்படுத்தி ஜகாத் கொடுக்க வேண்டும்.

ஓராண்டுக்கு ஒருமுறை கால் நடைகளுக்கு ஜகாத் வழங் கும் போது, அவ்வாண்டின் இடைப் பட்ட காலங்களில் பிறந்த குட்டி களுக்கும் அவற்றின் தாய் இருந் தாலும், இறந்தாலும் ஓராண்டு எனக் கணக்கிட வேண்டும்.

கால்நடைகளுக்கு ஜகாத் கொடுக்காததின் தண்டனை

"உலகில் ஒட்டகம் வளர்த் தவன் அதற்கான கடமையை நிறைவேற்றவில்லையாயின் அது மறுஉலகில் முன்பிருந்ததை விட நல்ல நிலையில் வந்து, தனது கால்களால் அவனை மிதிக்கும்.

மேலும் அதுபோலவே உல கில் ஆடு வளர்த்தவன் அதற்கான கடமையை நிறைவேற்றவில்லை யாயின் அது மறுமை நாளில் முன்பிருந்ததைவிட நல்ல நிலை யில் வந்து, தனது குளம்புகளால் அவனை மிதித்துத் தனது கொம்பு களால் அவனை முட்டும்.

மேலும் உங்களில் யாரும் மறுமை நாளில் கத்திக் கொண் டிருக்கும் ஆட்டைத் தமது பிடரி யில் சுமந்து கொண்டு வந்து, (அபயம் தேடிய வண்ணம்) முஹம்மதே! எனக் கூற அல்லாஹ்

விடம் உனக்காக எதையும் செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்று கூறும்படியான ஒரு நிலை ஏற்பட வேண்டாம்.

நிச்சயமாக (இது பற்றியெல் லாம் உங்களுக்கு) நான் அறிவித்து விட்டேன். மேலும் யாரும் (மறுமை நாளில்) குரலெழுப்பிக் கொண்டி ருக்கும் ஒட்டகத்தைத் தமது பிடரியில் சுமந்து கொண்டு வந்து முஹம்மதே! எனக் கூற அதற்கு நான் அல்லாஹ்விடம் உனக்காக எதையும் செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லும்படியான நிலைமை ஏற்பட வேண்டாம். (இது பற்றியெல்லாம் உங்களுக்கு) நான் அறிவித்து விட்டேன் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்".

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

புகாரீ 1402

ஜகாத் கொடுக்காததற்குத் தண்டனை

"இன்னும் பொன்னையும், வெள்ளியையும் சேகரித்து வைத் துக் கொண்டு அதனை அல்லாஹ் வுடைய பாதையில் செலவு செய் யாமல் இருக்கிறார்களோ அவர் களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு என்று (நபியே) நன் மாராயம் கூறுவீராக!

(நபியே!) அவர்களுக்கு அந் நாளை நினைவூட்டுவீராக! அந் நாளில் (அவர்கள் சேமித்து வைத்த செல்வத்தை) நரக நெருப்பிலிட்டுக் காய்ச்சி, அதைக் கொண்டு அவர் களுடைய நெற்றிகளிலும், விலாப் புறங்களிலும், முதுகுகளிலும் சூடுபோடப்படும். இது தான் நீங் கள் உங்களுக்காகச் சேமித்து வைத்தது. ஆகவே நீங்கள் சேமித்து வைத்ததைச் சுவைத்துப் பாருங்கள் என்று கூறப்படும்"

- அல்குர்ஆன் 9:34,35

"அல்லாஹ்தன் அருளினால் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் யார் உலோபித்தனம் செய்கிறார்களோ அது தமக்கு நல் லது என்று அவர்கள் நிச்சயமாக எண்ண வேண்டாம். அவ்வாறன்று! அது அவர்களுக்குத் தீங்குதான். அவர்கள் உலோபித் தனத்தால் சேர்த்து வைத்த (பொருட்கள்) எல்லாம் மறுமை யில் அவர்கள் கழுத்தில் மாலையாக போடப்படும்".

- அல்குர்ஆன் 3:180

அல்லாஹ் யாருக்கேனும் செல்வத்தைக் கொடுத்து, அவன் அதற்கான ஜகாதை நிறைவேற்ற வில்லையாயின் மறுமை நாளில் அச்செல்வம், கடுமையான நஞ்சுடைய பாம்பாக மாறும். அது அவனது கழுத்தில் சுற்றிக் கொண்டு தனது இருவிஷப் பற் களால் அவனது தாடையைக் கொத்திக் கொண்டே நான்தான் உனது செல்வம், நான்தான் உன் புதையல் என்று கூறும். நபி (ஸல்) அவர்கள் இதைக் கூறி விட்டு குர்ஆனிலுள்ள 3:180 வசனத்தை ஓதிக்காட்டினார்கள்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

புகாரி 1403

முனவ்வரா மகளிர் அறநிலையம்

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை-625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **54 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு '**ஆலிமா**' பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹ் தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு "**புதுச் சேர்க்கை**" நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

நிர்வாகக் குழுவினர்

★ '**ஆலிமா**' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.

எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு "MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST" என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.

முனவ்வரா மகளிர் அறநிலையம்

(மத்திய & மாநில அரசு அங்கீகாரம் பெற்றது)

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை-625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

கனிவான வேண்டுகோள்

மதுரை மாநகரில் 54 ஆண்டுகளாக அநாதை ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வி, அரசுப் படிப்பு, தையல் பயிற்சி, மருத்துவ உதவி, 3 வேளை உணவு, தங்குமிடம் யாவும் இலவசமாக வழங்கி ஏராளமான மாணவிகளுடன் வெகு சிறப்பாக எமது நிறுவனம் சேவை செய்து வருகின்றது. அல்ஹம்து லில்லாஹ்!

ஆகவே, தங்களின் நன்கொடை/ஜகாத்/சதகா உதவிகளை **"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"** என்ற பெயரில் **DD / செக் / M.O.** மூலமாக மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளின் வாழ்வை மேம்படுத்த உதவுமாறு அன்புடன் விழைகிறோம்.

ICICI Bank: A/c No.601601081642

MADURAI K.K.NAGAR BRANCH

MICR Code : 625229006 ★ IFS Code : ICIC0006016

இன்ஷா அல்லாஹ் வங்கியின் மூலம் பணம் அனுப்பி விட்டு தயவு செய்து தகவல் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

நிர்வாகக் குழுவினர்

ஜகாத் கொடுப்பவர்கள் ஏமாற்றும் நூதனவழி

இஸ்லாமிய அரசாங்கம் செயல்படாத நாடுகளிலும், மாநிலங்களிலும் ஜகாத் கடமையானவர்கள், ஜகாதை வசூலிப்பதற்கு யாருமே வரவில்லையே என நினைத்து அதைக் கொடுக்காமல் அலட்சியமாக இருந்து விட வேண்டாம்.

இஸ்லாமிய செல்வச்சீமான்களே! உங்களுக்கு உண்மையாகவே இறைபக்தியும், இறையச்சமும் இருக்குமேயானால், நீங்கள் தானாகவே மனமுவந்து, ஜகாத் நிதியைப் பெறத் தகுதியுள்ளவர்களைக் கண்டெடுத்து, புள்ளி விபரம் கணக்கெடுத்து நீங்கள் வழங்கும் ஜகாத் நிதியின் மூலம் அவர்களின் நிதி நெருக்கடியைப் போக்கி, உங்களைப் போன்றே அவர்களுக்கும் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

ஜகாத் சம்பந்தமாக முஸ்லிம்களிடையே அதிக விழிப்புணர்வும், புரிந்துணர்வும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் ஜகாத் நிதி வழங்கும் தகுதியுடையோரும், ஜகாத்நிதி வாங்கும் தகுதியுடையோரும், ஆகிய இருசாராரையும் சமுதாய ஆர்வலர்கள் ஒரு சர்வேஎடுத்து அந்த சர்வேயின் முடிவின்படி அவர்கள் தூரிதமாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்படுவார்களேயானால், நம் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களும், வறுமையில் வாடுபவர்களும் நிச்சயமாகப் பயனடைவார்கள்.

ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ஜகாத் கடமையாகிறது. ஆனால் அவரோ நான்கு, ஐந்து ஆயிரம் ரூபாய் மதிப்பிலான வேட்டி, சேலைகளை ஏழைகளுக்கு வழங்கி இவற்றுடன் கையில் ஒரு சில நூறுகளையும் கொடுத்து விட்டு, ஜகாதை வழங்கிவிட்டோம் என இறைவனை ஏமாற்றுகிறார்கள்.

கோடிக்கணக்கான ரூபாய்கள் ஜகாத் கடமையான மற்றும் சிலர், ஒரு சில லட்சங்களை மட்டும் ஜகாத் கொடுத்துவிட்டு, மீதிப் பணங்களை சுருட்டிக் கொள்கிறார்கள்.

ஜகாத்துடைய ஒரு பைசா அவர்களிடம் இருந்தாலும் கூட அதை அவர்கள் வைத்திருக்காமல், ஏழைகளிடம் ஒப்படைத்து விட வேண்டும். அது ஏழைகளின் பொருளாதாரமாகவும், வாழ்வாதாரமாகவும் உள்ளது.

இந்த நவீன ஏமாற்றுப் போர்வழிகள் ஜகாதைக் கணக்குப் பார்த்து கொடுக்கவில்லையாயின் அவர்களின் முழு பொருளாதாரத்திற்கும் அழிவும், நாசமும் ஏற்படும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது: "ஜகாத் நிதி (ஜகாத் அல்லாத இதர) பொருளாதாரத்துடன் கலந்து விடுமானால், அந்தப் பொருளாதாரம் அழிந்து

விடும் என நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன்".

(நூல் : அஹ்மது, பைஹகீ

ஒழுங்கான முறையில் மோசடி செய்யாமல் ஜகாதை முழுவதும் நிறைவேற்றினால் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.

"(மற்ற) மனிதர்களுடைய முதல்களுடன் சேர்ந்து (உங்கள் செல்வம்) பெருகும் பொருட்டு நீங்கள் வட்டிக்கு விடுவீர்களானால் அது அல்லாஹ்விடம் பெருகுவதில்லை. ஆனால் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி ஜகாதாக எதை நீங்கள் கொடுக்கிறீர்களோ அது அல்லாஹ்விடம் பெருகும். அவ்வாறு கொடுப்போர் தாம் (தம் நற்கூலியை) இரட்டிப்பாக்கிக் கொண்டவர்களாவார்கள்".

- அல்குர்ஆன் 30:39

ஜகாதை நிறைவேற்றினால் சுவனம் செல்லலாம்

"ஒரு கிராமவாசி நபி (ஸல்) அவர்களிடம் வந்து, நான் சுவர்க்கம் செல்வதற்கேற்ற ஒரு காரியத்தை எனக்குக் கூறுங்கள்" என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'நீர் அல்லாஹ்வை வணங்க வேண்டும், அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது, கடமையான தொழுகையையும், கடமையான ஜகாதையும் நிறைவேற்ற வேண்டும், ரமளானில் நோன்பு நோற்க வேண்டும்' என்றார்கள். அதற்கவர் 'என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மேல் ஆணையாக! இவற்றைவிட அதிகமாக நான் எதையும் செய்யமாட்டேன்' என்றார். அவர் திரும்பிச் சென்றதும் நபி (ஸல்) அவர்கள் 'சுவர்க்கவாசிகளில் ஒருவரைப் பார்க்க விரும்புவோர் இவரைப் பார்க்கட்டும்' என்றார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
புகாரீ 1397

ஜகாதை நிறைவேற்றாத கஞ்சர்களுக்கு மறுமை நாளில் கடுமையான வேதனை உண்டு! அவர்கள் சேமித்து வைத்த செல்வத்தை நரக நெருப்பில் காய்ச்சி அவர்களுக்கு சூடு போடப்படும். மேலும் ஜகாத் கொடுக்கப்படாத அச்செல்வங்களைக் கொடிய விஷமுள்ள பாம்புகளாக உருமாற்றியமைக்கப்பட்டு, பாம்புகளின் மாலைகள் அவர்களின் கழுத்துகளில் அணிவிக்கப்படும். அந்தப் பாம்புகள் அந்தக் கஞ்சர்களை கொத்திக் கொண்டேயிருக்கும்.

ரமளானில்தான் ஜகாத் கொடுக்க வேண்டும். அத்தகைய ரமளான் சென்று விட்டதே. இனி வரும் ரமளானில் நிறைவேற்றிக் கொள்ளலாம் என எண்ணி ஒவ்வோர் ஆண்டும் அசட்டையாக இருந்து விடாதீர்கள். ஆண்டுக்கொரு முறை ஜகாத் கொடுக்க வேண்டும் அது எந்த மாதமாக இருந்தாலும் பரவாயில்லை. ரமளானில் கொடுத்தால், நன்மைகள் பல மடங்கு கிடைக்கும். ரமளானில் நிறைவேற்றாதவர்கள் ஞாபகமாக

அதற்கடுத்து வரும் மாதங்களில் உங்களின் ஜகாத் தொகையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

இந்தக் காலத்தில் ஜகாதை நீங்கள் நிறைவேற்றவில்லை யென்றால் பிறகு எந்தக்காலத் தில் நிறைவேற்றப் போகிறீர்கள்?

இனி ஒரு காலம் வரும். அந்தக் காலத்தில் ஜகாத் கொடுப் பதற்கு ஆட்கள் இருப்பார்கள். அதை வாங்குவதற்கு எந்த நாதி யும் இருக்காது. அப்படிப் பட்ட காலம் வரும் முன்பே, நமக்குக் கடமையான ஜகாத் நிதிகளைக் கணக்கிட்டு, குறைவில்லாமல் முழுமையாகக் கொடுப்போம்! உறுதிமொழி ஏற்போம்!

"தர்மம் செய்யுங்கள்! ஏனெனில் உங்களிடையே ஒரு காலம் வரும். அப்போது ஒருவன் தனது தர்மப் பொருளை எடுத்துக் கொண்டு அலைவான். அதைப் பெறுவதற்கு யாருமே இருக்க மாட்டார்கள். அப்போது ஒருவன், நேற்றே இதை நீ கொண்டு வந்திருந்தாலாவது நான் வாங்கியிருப்பேன். இன்றோ அது எனக்குத் தேவையில்லையே! என்றும் கூறுவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்".

அறிவிப்பாளர் : ஹாரிஸா பின் வஹ்ப் (ரளி) அவர்கள் புகாரீ 1411

"உங்களிடையே செல்வம் பெருகிக் கொழிக்காதவரை உலக அழிவு நாள் ஏற்படாது. எந்தளவுக் கெனில் அந்த நாளில் பொருளுடை யவன் தனது தர்மத்தை யார் தான் வாங்கப் போகிறார் என்று கவலை கொள்வான். மேலும் யாரிடமாவது அதைக் கொடுக்க முனைந்தால் அவன் எனக்குத் தேவையில்லை என்று கூறுவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்".

அறிவிப்பாளர் : ஹுர்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (புகாரீ 1412)

செல்வந்தர்களே! பணக்காரர் களே! லட்சாதிபதிகளே! கோடீஸ் வரர்களே! தொழிலதிபர்களே! வியாபாரிகளே! உண்மை இறை விசுவாசிகளே! உங்களுடைய செல் வத்திலிருந்து, இல்லை இல்லை! அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய அருட் செல்வங்களிலிருந்து எவ் வளவு ஜகாத் நிதி கடமையோ அவ் வளவு நிதியைத் தகுதி உடையவர் களுக்கு கொண்டு போய்ச் சேர்த்து நம் சமுதாயத்திலும், சகோதர சமு தாயத்திலும் உள்ள வறுமையை ஒழிப்போம்! வளமான வாழ்வா தாரத்தை நாம் ஏற்படுத்திக் கொடுப்போம்!

உள்ளங்களை உற்றுநோக்குபவன்

"அல்லாஹ், உங்கள் தோற்றங்களையோ உங்கள் செல்வங் களையோ பார்ப்பதில்லை. மாறாக, உங்களுடைய உள்ளங்களையும், செயல்களையுமே அவன் பார்க்கிறான்." (ஸஹீஹ் முஸ்லிம் 5012)

பெருநாள் யாருக்கு?

மவ்லவீ ஹாஃபிழ் எஸ்.ஃபக்கீர் முஹம்மது ஜலாலீ

அரங்கம் நிறைந்த கூட்டம். அங்கு நடந்த பேச்சுப் போட்டியின் நிறைவு நாள். பரிசு வாங்க வந்தவர்கள், அவர்களைப் பெருமையுடன் அழைத்து வந்தவர்கள் என ஆரவாரம். கலந்து கொண்ட போட்டியாளர்கள் மனதுள் போட்டி நடந்த நாட்களுக்கு போய் வருகிறார்கள். எத்தனை பேரின் பேச்சைக் கேட்டோம்? எத்தனைகுறிப்புகள் எடுத்தோம்? எத்தனை புத்தகங்களைப் புரட்டினோம்? குவார்ட்டர் ஃபைனல், செமி ஃபைனல் எனக் கடந்து ஃபைனல் வந்து, எல்லாருமே நாம்தான் ஜெயித்தோம் என BP-யோடு காத்திருக்கும் அந்த நேரம்.

இதோ! போட்டி ஏற்பாட்டாளர் கையில் அறிவிப்பு அட்டையுடன் வந்து விட்டார். குண்டூசி விழுந்தால் கூட சப்தம் கேட்குமளவுக்கு அமைதி. அவர் பேசுகிறார், 'அன்பர்களே! நாம் நடத்திய இந்தப் பேச்சுப் போட்டியின் முடிவுகளை இப்போது அறிவிக்கிறேன். கிட்டத்தட்ட ஒரு மாதம் பல இடங்களில், பல மேடைகளில் நடந்த இப் போட்டியில் கலந்து கொண்டோர், பார்வையாளர்கள் என அனைவருக்கும் பரிசு வழங்க முடிவு செய்துள்ளோம்.

கொஞ்சம் கற்பனை செய்யுங்கள். அப்படிப் பேசிய அறிவிப்பாளர், ஒரு அடி ஒரே ஒரு அடி எட்டுத்திக்கில் எங்காவது அசைய முடியுமா? சட்டினியாகி விட மாட்டாரா? அல்லது கேவலமான வார்த்தைகளால் மறக்க முடியாத அளவு திட்டித் தீர்த்து விட மாட்டீர்களா?

நோன்பில் மிகப்பெரிய ஆன்மிகப் போட்டி நடக்கிறது. அல்லாஹ் அறிவித்த அந்த ஆன்மிகப் போட்டி ஒரு மாதம் நடக்கிறது. ரமளான் பிறை கண்டதும் நூற்றுக்கு எண்பது சதவிகிதம் உற்சாகமடைந்து நான் முந்தி, நீ முந்தி எனப் பெயர் கொடுக்க அல்லாஹ்வின் பள்ளிவாசலை நோக்கி நடக்கிறார்கள்.

தொடர்ந்து அம்மாதம் முழுவதும் எம்மாதத்திலும் இல்லாதவாறு அதிகப்படியான அமல்களில் பூரிப்படைகிறது. நான் முந்தி, நீ முந்தி என ஒருவர் அடுத்தவருக்குப் போட்டியாக அமல்களில் திளைக்கின்றனர். அம்மாதத்தின் பரிசான அல்லாஹ்வின் வேதத்தை அகமகிழ்ந்து ஓதுகின்றனர். சுருக்கமாக, பள்ளி

வாசல்களெல்லாம் அமல்கள் மேளா நடைபெறும் இடங்களா கின்றன.

நோன்பினால் உச்சி முதல் உள்ளங்கால் வரை உடல் வழக்கமாகச் செய்யும் வரை முறையற்ற செயல்களிலிருந்து விலகி நிற்கின்றன. ஆயிரம் மாத அமல்களைத் தரும் இரவு ஏங்கி, எதிர்பார்த்து எண்ணற்ற நன்மை களால் கடக்கிறது. இவ்வளவும் கடந்து அல்லாஹ்வின் புன்சிரிப் பில் ஆர்வமாய் எதிர்கொள்ளும் ஈதுல் ஃபித்ரில் ரமளானின் அடையாளமே இல்லாதவனும், பகலில் புகை ஊதித் தள்ளியவ னும் கூட புதுத்துணி மட்டும் உடுத்தி நின்றால்...

நமக்கே சரியாய்ப்படுகிறதா? வெளிப்படையாய் இதைச் சொன்னால் இமாமுக்கு வேலை யில்லை. நிர்வாகத்துக்கு நெருக்கடி. ஆனால் வாக்கிங் போவதாகப் பொய் சொல்லி வாசலிலேயே உட்கார்ந்து விட்டு, தண்ணீரை மேலே வோவை போல் தெளித்துக் கொண்டு வருபவரை நீங்கள் சம்மதிப்பீர்களா? பெயர்கள் மட்டுமே பெருநாள் கொண் டாட தகுதியா? பிரியாணிதான் பெருநாளின் அடையாளமா?

கொஞ்சூண்டு சிந்தியுங்கள். நான், படிக்கும் உங்களை சொல்ல வில்லை. நீங்கள் ரமளானை தவமாகக் கடந்திருப்பீர்கள். உங்கள் அனைவருக்கும் ஈதுல் ஃபித்ர் வாழ்த்துக்கள்!

ஈத் முபாரக்!

"பாவத்திலிருந்து தவ்பா செய்தவன், அறவே பாவமற்றவனைப் போன்று ஆகிவிடுகிறான்." என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு மஸ்ஊது (ரளி) அவர்கள் (நூல் : இப்னுமாஜா)

பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை-1.

04373-254354; 253339; 99444 54354

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்...!

மவ்லவி எஸ்.என்.ஆர்.ஷவ்கத் அலீ மஸ்லஹி

குர்ஆன் என்ற அரபுச் சொல் லிற்கு ஓதப்பட்டது, ஓதிக் கொண்டிருப்பது, ஓதப்படுவது என முக்காலப் பொருள் உண்டு. அதாவது எக்காலமும் ஓதுதலுக் குரியது இந்தக் குர்ஆன்தான் என்பதை அந்தச் சொல் சொல் லாமல் சொல்லிக் காட்டுகிறது. குர்ஆன் என்பது ஏதோ டெல்லி யிலும், மும்பையிலும் அச்சடிக்கப் பட்ட ஒரு நூலல்ல... அது ஆற்றல் மிக்க அல்லாஹ்விடமிருந்து ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர் கள் மூலம் நபி (ஸல்) அவர் களுக்கு அருளப்பட்ட ஒரு திரு மறை வேதம் தான் இந்தக் குர்ஆன். இதனால் தான் இதற்கு "கலா முல்லாஹ் - அல்லாஹ்வின் அருளுரை" என்று பெயர். அதுவும் இந்தத் திருகுர்ஆன் புனிதமான ரமளான் மாதத்தில் தான் அருளப் பெற்றது என்பதும் கூடுதல் சிறப்பு.

"இது இறைவேதம் இதில் சந் தேகம் என்பதே இல்லை" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள் கிறது குர்ஆன்! எனவே குர்ஆன் கூறும் விஷயங்களில் நாம் சற்றும் சந்தேகம் கொள்வது கூடாது, அப் படிச் சந்தேகிப்பது என்பது அல்லாஹ் வைச் சந்தேகிப் பது போன்றதாகும். இதனால்தான் குர்ஆன் முதன் முத லில் தன்னை "லா ரய்ப ஃபீஹி சந்தேகமற்றது" என்று அறிமுகம் செய்து கொள்கிறது. இதன் எதிர் நிலை தான் ஈமான் என்பது. அதா வது அல்லாஹ், ரசூல் சொன்ன வற்றை அப்படியேஏற்று அவற்றில் சற்றும் பிறழ்வுகளில்லாமல் நடப் பதற்குத் தான் "ஈமான் விசுவாசம்" என்று சொல்லப்படும்.

அப்படி விசுவாசம் கொண்டவர் களைத் தான் "முஃமின் விசுவாசி" என்று நாம் அழைக்கின்றோம்.

இந்தக் குர்ஆனில் அப்படி என்ன தான் இருக்கிறது என்று கேட்டால் "ஃபீஹி திக்ருகும்... இதில் உங்களைப் பற்றித்தான் கூறப்பட்டுள்ளது" என்று குர்ஆன் கூறுகிறது. அப்படியானால் அந்தக் குர்ஆனில் நம்மைப் பற்றி அப்படி என்ன சொல்லப் பட்டிருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்க வேண் டாமா என்ன? "குர்ஆனை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா... அவர்களது உள்ளங்களில் பூட்டு கள் போடப்பட்டுள்ளனவா...?" என்று வினாத் தொடுக்கும் தொன் மறை வசனமும் இங்கு நாம் கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

சிந்தனை செய் மனமே என்று சொல்லி குர்ஆன் நம்மை சிந்திக்கக் கற்றுக் கொடுக்கிறது. இன்றைய உலகம் நவீன மயமாக மின்னொளி வீசுவதற்கு மூல காரணம் இந்த மனிதனின் சிந்தனை தான் என்றால் அது மிகையல்ல...! அதுவும் அவன் குர்ஆனைப் பற்றி, குர்ஆன்

கூறியவற்றைப் பற்றி, குர்ஆனில் உள்ளவற்றைப் பற்றி சிந்திக்கச் சிந்திக்க அவன் பேராற்றல் மிக்க வனாக மிளிர்கிறான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

குர்ஆனிலுள்ள ஒவ்வொரு சொற்களும் மிகுந்த கவனத்திற் குரியவை. ஆய்வு செய்யத்தக்கவை. இப்பூமியிலுள்ள மரங்களை எழுது கோல்களாக்கி, ஏழு கடல்களை மைத்துளிகளாக மாற்றினாலும் குர் ஆனின் கருத்துக்கள் தீராநதியாய் வந்து கொண்டேயிருக்கும் என நாயன் மறைக்குர்ஆன் (18:109, 31:27) கூறுகிறது. எனவே குர் ஆனின் கடல் போன்ற கருத்துக் களில் எப்போதும் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் "குர்ஆன் பலரை வழிகெடுக்கவும் செய்யும்" என குர்ஆன் தன்னைப் பற்றி கூறவும் தவறவில்லை. அதா வது அதன் கருத்துக்களை யாரா வது தவறாக விளங்கிக் கொண் டால் அவர்களை நிச்சயம் வழி கெடுக்கும்என்பதுதான் அதற்குரிய அர்த்தமாகும். ஆகவே தான் குர்ஆனை ஓதும்போது கவனித்து ஓதுவதைப் போல் குர்ஆனை விளங்கும் போதும் நன்கு கருத் தூன்றி கவனித்து விளங்கவும் வேண்டும். இல்லையெனில் இந்தக் குர்ஆன் நம்மை நரகில் கொண்டு போய் தள்ளிவிடவும் செய்யும். "எத்தனையோ பேர் குர்ஆனை ஓதுகிறார்கள். ஆனால் அவாகள் தங்களைத்தாங்களே சபித்துக் கொள்கிறார்கள்..." என்று நபி (ஸல்) அவர்கள் சொன் னது இந்த அர்த்தத்தில் தான். எனவே எப்போதும் நாம் குர்ஆன் விஷயத்தில் ரொம்பவும் கவனமா கவும், உஷாராகவும் இருக்கவேண்டும்.

இதனால்தான் என்னவோ அல்லாஹ் இப்படிக் கூறிக் காட்டு கின்றான் : நபியே குர்ஆன் ஓதப் பட்டால் அது எப்படி ஓதப் பட்டதோ அப்படியே பின்பற்றுங் கள்...!(75:18) என்று. இன்றைக்கு நாம் நமது குர்ஆனை எப்படி ஓதுகிறோம்... எப்படி விளங்குகி றோம்... எப்படி கடைபிடிக்கிறோம்... அதை எப்படி பரப்புகிறோம்..? என்பதெல்லாம் தான் நம்முன் எழுந்து நிற்கிற கேள்விகள்.

"உங்கள் குர்ஆனை தலை யணையாக்காதீர்..!" என்ற ஏந்தல் நபியின் எச்சரிக்கை என்றென்றைக் கும் நாம் எண்ணிப் பார்க்க வேண் டிய ஒன்று. அதாவது தேவைக்கு மட்டும் தலையணையைப் பயன் படுத்துவதைப் போல் குர்ஆனை பயன்படுத்தாதீர்! உறையிலிட்டு வைப்பதைப் போல் உறையி லிட்டு வைக்காதீர்! தாறுமாறாகப் பயன்படுத்துவதைப் போல் பயன்படுத்தாதீர்! தனி மரியாதை செய்யாததைப் போல் மரியாதை செய்யாமலிருக்காதீர்...!

மணமக்களுக்கு பயன் படுத்துவதைப் போல் மணவிழா வில் மட்டும் குர்ஆனைப் பயன் படுத்தாதீர்...! என்று இந்த உவமைக்குள் பல்வேறு வகை யான அர்த்தங்கள் உருவாகிக் கொண்டேயிருக்கும். நாம் தான் நமக்கான குர்ஆனை நமக்காக,

இராஜகிரி

மதரஸாயே ஹிதாயத்துன் நிஸ்வான்

(பொது மற்றும் அரபி மகளிர் மேல்நிலைப்பள்ளி)

அன்பான வேண்டுகோள்

அஸ்ஸலாமு அலைக்கும், கடந்த 50 ஆண்டுகளாக அரபி மற்றும் பொது கல்வியில் முஸ்லிம் மாணவிகளுக்கு ஹிஜாப் பேணுதல் உணவு தங்குமிட வசதியுடன் மார்க்க கல்வி உலக கல்வி அளித்து வரும் நிறுவனம் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை கொண்டு கல்வி கற்பித்து வருவதுடன் இதுவரை 800க்கு மேற்பட்ட ஆலிமாக்களை உருவாக்கியுள்ளோம். பொது தேர்வில் 100% தேர்ச்சியினை தொடர்ந்து பெற்று வருகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மதரஸா சிறப்பாக செயல்பட ஏற்பட்டுள்ள பொருளாதார பற்றாக் குறைகளை ஈடு செய்யவும், ஒளு செய்யும் இடம், உணவு கூடம், கழிவறை வசதியினை விரிவுபடுத்தவும் மற்றும் கல்வி துறையின் நெறிமுறைகளின்படி சில மேம்பாடு வசதியினை செய்வதற்கும், ஏழை மாணவிகளின் உணவு மற்றும் பள்ளிக் கட்டணத்திற்கும் சமுதாயத்தினரின் பொருளாதார உதவியினை எதிர்பார்க்கின்றோம். சமுதாய சகோதரர்கள் ரமலான் மற்றும் இதர காலங்களிலும் தங்களின் (ஸதகா, ஜகாத், ஹதியா) நன்கொடையினை வழங்கி மதரஸாவின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கோருகின்றோம்.

அல்லாஹ் மார்க்கத்திற்காக தாங்கள் உதவும் எல்லா வகை பங்களிப்பையும் அமல்களிலும் பொருந்தி கொள்வானாக. ஈருலக வாழ்க்கையையும் மேன்மையாக்கி வைப்பானாக ஆமீன்.

OUR BANK DETAILS

Name	**MADARSA YE HIDAYATHUN NISWAN**	
Bank Name	**Indian Overseas Bank**	
Branch	**Rajagiri - (0555) Branch**	**IFSC Code IOBA0000555**
ஜகாத் நிதி	**A/c No : 055502000006666**	
ஸதகா, ஸதகத்துல் ஜாரியா, மாணவர்களின் பள்ளிக்கட்டணம், உணவுக் கட்டணம்.		**A/c No : 055501000002661**

மதரஸாயே ஹிதாயத்துன் நிஸ்வான்

(பொது அரபி மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் பிரைமரி பள்ளி)

ராஜகிரி P.O - 614207, தஞ்சாவூர் மாவட்டம்,

04374-250711 / 9944886757.

நாளை மறுமைக்காக பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில் கைசேதம் நமக் குத் தான் என்பது நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் : "என்னை சரியான முறையில் பயன்படுத்திக் கொண் டான் அல்லது பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று நோன்பும், குர்ஆனும் ஒரு வக்கீலைப் போல் நாளை மறுமையில் வாதாடும்".

எனவேதான், சொல்கிறோம்! குர்ஆனை அதுவும் ரமளான் மாதத் தில் குர்ஆனை நாம் மிகவும் சரி யாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சாதாரண தினங்களில் ஓதும் குர்ஆனை விட ரமளான் காலங்களில் ஓதும் குர்ஆனுக்கு சுமார் எழுபது மடங்கு கூடுதலான நன்மைகள் உள்ளன. எனவே ரமளான் நாட்களை நாம் சற்றும் வீணாக்கிவிடக் கூடாது. குறைந்த பட்சம் தினமும் ஒரு ஜுஸ்உ என்று ஓதினால் கூட ஒரே மாதத்தில் ஒரு முழுக் குர்ஆனை முடித்து விடலாம்.

ஓதுவதற்காக குர்ஆனை நாம் இலகுவாக ஆக்கி வைத்திருக் கிறோம். அதைஓதுவோர் உண்டா...? என்று அல்லாஹ் அறைகூவல் விடுப்பது நம் செவிகளில் என்றைக் காவது ஓங்கி ஒலித்ததுண்டா? குர்ஆனை ஓதுவதற்கும், அதை மனப்பாடம் செய்வதற்கும் இலகு வானது, இலேசானது என்று குர்ஆனே கூறிவிட்ட பிறகு அதை நாம் ஓதாமல் இருப்பது எந்த வகை யில் நியாயம்? இது நிதானமாக சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. எனவே இனியேனும் நாம் குர்ஆனை ஓதுவதில் அதை மனப்பாடம் செய்வதில் அதீத அக்கறை காட்ட வேண்டும்.

"எவர் நமது பாதையில் முயற்சி செய்கிறாரோ அவருக்கு நாம் நமது பாதைகளில் வழி காட்டுவோம்" என்று அருள் மறைக் குர்ஆன் கூறு வதும் கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

இதனால் தான் இன்னொரு இறைவசனம் நம்மை இப்படி எச்சரிக்கை செய்கிறது.

"எவன் என்னுடைய உபதேசத் தைப் புறக்கணிக்கிறானோ, நிச் சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும். மேலும், நாம் அவனை கியாம நாளில் குரு டனாகவே எழுப்புவோம்" என்று கூறினான். (அப்போது அவன்) "என் இறைவனே! நான் பார்வையுடைய வனாக இருந்தேனே! என்னை ஏன் குருடனாக எழுப்பினாய்" என்று கூறுவான். (அதற்கு இறைவன்) "இவ்விதம் தான் இருக்கும், நம் முடைய வசனங்கள் உன்னிடம் வந் தன. அவற்றை நீ மறந்து விட்டாய், அவ்வாறே இன்றைய தினம் நீயும் மறக்கப்பட்டு விட்டாய்" என்று கூறு வான். ஆகவே, எவன் தன் இறை வனுடைய வசனங்களின் மேல் நம்பிக்கை கொள்ளாமல், வரம்பு மீறி நடக்கின்றானோ அவனுக்கு இவ் வாறுதான் நாம் கூலி கொடுப்போம். மேலும் மறுமையின் வேதனை மிக வும் கடினமானதும், நிலையானது மாகும். - அல்குர்ஆன் 20 :124-127

வாருங்கள்.. இறைமறையை ஓதிடுவோம்... இனிதே அமல் செய்திடுவோம்...!

"ஸஆதிகள்" பேரவையின் சார்பாக விருது வழங்கும் விழா!

மதுரை J.M.S. அரபு கல்லூரி ஸஆதிகள் பேரவையின் சார்பாக, மதுரை மாவட்டத்தில் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாக இமாம்களாக, அரபு கல்லூரிப் பேராசிரியர்களாக மற்றும் சமூக சேவகர்களாக ஒரே இடத்தில் பணிசெய்து கொண்டிருக்கின்ற ஆலிம்களுக்கு விருது வழங்கும் விழா மதுரை மினாநூர்தீன் பள்ளி வாசலில் கடந்த 01.02.2023 புதன் கிழமை நடைபெற்றது. விழாவில் ஸஆதிகள் பேரவையின் தலைவர் மவ்லவீ எம்.முஹம்மது ஷுஜா ஸஆதி பாஜில் மன்பயீ தலைமை தாங்கினார். J.M.S. அரபு கல்லூரியின் நிர்வாகிகள், ஸஆதி ஆலிம்கள் முன்னிலை வகித்தனர்.

மதுரை அரசு டவுன் காஜி மவ்லானா மவ்லவீ **ஏ.காஜா முயீனுத்தீன்** ஹள்ரத், "குர்ஆனின் குரல்" மாத இதழ் பொறுப்பாசிரியர் மவ்லானா முஃப்தீஹாஃபிழ் **எம்.முஹம்மது இஸ்மாயீல்** ஹள்ரத் மற்றும் மூத்த ஆலிம்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பேரவையின் செயலாளர் மவ்லவீ எம்.ஜமீலுத்தீன் ஸஆதி வரவேற்புரை நிகழ்த்தினார். பேரவையின் துணைச் செயலாளர் மவ்லவீ எம்.முஹம்மது அப்துல்லாஹ் ஸஆதி பாஜில் மன்பயீ பேரவையின் நோக்கங்கள் குறித்து உரையாற்றினார்.

மதுரை ஜே.எம்.எஸ் அரபு கல்லூரி தலைவர் மவ்லானா அல்ஹாஜ் **எஸ்.ஸபூர் முஹ்யித்தீன்** ஹள்ரத் அவர்களும், கல்லூரியின் முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா **எம்.முஹிப்புல்லாஹ்** ஹள்ரத் அவர்களும் விருதுகள் மற்றும் அன்பளிப்புகள் வழங்கி கவுரவித்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபையின் மாநிலத் தலைவர் மவ்லானா அல்ஹாஜ் **P.A. காஜா முயீனுத்தீன்** ஹள்ரத் சிறப்புரையாற்றினார்கள். பேரவையின் பொருளாளர் மவ்லானா எஸ்.நைனார் முஹம்மது ஸஆதி பாஜில் மன்பயீ நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

இஸ்லாமோஃபோபியாவிற்கு எதிராகச் சிறப்பு ஆலோசகர்!

கனடா நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வெறுப்புப் பரப்புரைகளை முடிவுக்குக் கொண்டு வர கனடா அரசாங்கம் ANTI ISLAMOPHOBIA ADVISOR எனும் சிறப்புப் பதவியை உருவாக்கியுள்ளது.

இஸ்லாத்திற்கு எதிரான பரப்புரை, நபி (ஸல்) அவர்களைக் குறித்த இழிவான விமர்சனங்கள்,

திருக்குர்ஆன் பிரதிகளை அவமரியாதை செய்தல், முஸ்லிம்கள் மீதான தனி மனிதத் தாக்குதல்கள் ஆங்காங்கே தொடர்ந்துவரும் நிலையில் வெறுப்புப் பரப்புரைகளைக் களைய ஆலோசனை வழங்குவதற்கு அமீரா எல்கவாஃபி எனும் 45 வயதுப் பெண்மணியை நியமித்ததன் மூலம் மேற்குலகுக்குக் கனடா புதிய செய்தியை கூறியுள்ளது.

இஸ்லாமோஃபோபியாவுக்கு எதிராகச் சிறப்பு ஆலோசகரை நியமனம் செய்தது குறித்து கருத்துத் தெரிவித்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ "அனைத்து சமூகத்தவரும் ஒற்றுமையுடன் வாழ்வது நாட்டின் வளர்ச்சிக்கு மிகப் பெரும் வலிமை சேர்க்கும். ஆனால் சில இடங்களில் முஸ்லிம்கள் வெறுப்புப் பரப்புரைகளுக்கு ஆளாகி வருகின்றனர். வலதுசாரி தீவிர சிந்தனையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்புப் பரப்புரை, இனவாதம், இனப்பாகுபாடு, மதச்சகிப்பின்மை ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டு வருவது ஒரு ஜனநாயக அரசின் கடமை" என்று கூறியுள்ளார்.

வழக்கறிஞரான அமீரா எல்கவாஃபி மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதோடு பத்திரிகைகளில் தொடர்ந்து விழிப்புணர்வுக் கட்டுரைகளையும் எழுதிவருபவர். கனடா முஸ்லிம் தேசிய கவுன்சில் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு வரும் அமீராவை, இஸ்லாமோஃபோபியாவுக்கு எதிரான சிறப்பு ஆலோசகராக நியமித்ததோடு செயல்திட்டங்களை முன் னெடுக்க 5.6 மில்லியன் டாலர் நிதியும் ஒதுக்கீடு செய்துள்ளார் கனடா பிரதமர்.

தங்கள் நாட்டில் சிறுபான்மையினர் தொடர்ந்து தாக்கப்படும் போது மௌனமாக வேடிக்கை பார்க்கும் ஆட்சியாளர்களுக்கு மத்தியில் கனடா பிரதமரின் இந்த முயற்சி பாராட்டுக்குரியது.

மாணவச் சொற்பயிற்சி மன்றத்தின் 37 ஆம் ஆண்டு நிறைவு விழா!

மதுரை J.M.S. அரபு கல்லூரி "நத்துவதுஸ் ஸஆதா" மாணவ சொற்பயிற்சி மன்றத்தின் 37 ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த 23.02.2023 வியாழன் அன்று J.M.S. அரபு கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரியின் தலைவர் மவ்லானா அல்ஹாஜ் **எஸ்.ஸபூர் முஹ்யித்தீன்** ஹள்ரத் தலைமை தாங்கினார். மதரஸாவின் நிர்வாகப் பெருமக்கள், பேராசிரியப் பெருந்தகைகள், ஸஆதி ஆலிம்கள் முன்னிலை வகித்தனர்.

மாணவ மன்றத்தின் சார்பாக பேச்சுப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஐந்து மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். நிகழ்ச்சியில் மூத்த உலமா பெருமக்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவில் கலந்து கொண்ட உலமாபெருமக்களுக்கும், ஸஆதி ஆலிம்களுக்கும்

Hazrath
Khadheejah
Products

பிரியாணிக்கென்றே ஸ்பெஷலாய் **கதீஜா நெய்**

ஏற்றுமதி தரம் உடைய டீ & காபி வகைகள்

ஸ்டாண்டர்ட் டீ ❖ ஏலக்காய் டீ ❖ இஞ்சி டீ
மசாலா டீ ❖ சாக்லேட் டீ
அராபிகா இன்ஸ்டண்ட் காபி

வாகைமரத்து செக்கில் தயாரிக்கப்பட்ட
- ❖ **கடலை எண்ணை**
- ❖ **நல்லெண்ணெய்**
- ❖ **தேங்காய் எண்ணெய்**

சுவையானது
இயற்கையானது

Cold Process &
Wood Pressing

மோர் & தயிர்
MIX
வெஜிடேபிள்
வத்தல் வகைகள்

முந்திரி பருப்பில்
6 வகைகள்

மலைத்தேன்

வாழைப்பழ சிப்ஸ்
5 வகைகள்
தேங்காய் எண்ணெய்யில் தயாரிக்கப்பட்டது

Floor Wash &
Dish Wash Chemicals

சொந்த தேவைக்கும் விற்பனைக்கும் **Door Delivery** செய்யப்படும்.

வியாபார விசாரணைகள் வரவேற்கிறோம்

M.K.ஷேக் அப்துல் காதர் & சன்

கதீஜா புரோடக்ட்ஸ்

ஒட்டன்சத்திரம் - 624 619, திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
84389 40649, 98421 37649, 73975 78649
Email : khadheejahproducts@gmail.com

பொன்னாடை போர்த்தி கவுரவிக் கப்பட்டது. மதரஸாவின் பேராசிரி யர்களுக்கும் மாணவர்களுக்கும், ஊழியர் களுக்கும் பரிசு வழங்கப் பட்டது. மதரஸாவின் தலைவர் நிறைவுதுஆ ஓதினார்கள்.

விண் தொடும் சாதனையாளர் சானியா!

மருதாணி போட்டுச் சிவந்த வளைக்கரங்கள் போர் விமானங் களை இயக்கப் போகிறது.

புனே தேசிய பாதுகாப்பு அகா டமியில் பயிற்சிக்குப்பின் பணியில் சேரும்போது இந்தியாவின் முதல் முஸ்லிம் பெண் போர் விமானி, உத்தரப்பிரதேச மாநில அளவில் முதல் பெண் போர் விமானி எனும் பெருமையும், சிறப்பும் சானியா மிர்ஸாவுக்குக் கிடைக்கும்.

உத்தரப்பிரதேசம் மர்சாபூர் மாவட்டத்தில் உள்ள குக்கிராமங் களில் ஒன்றான ஜஸோஸ்வார் பகுதியைச் சேர்ந்த ஏழை டி.வி மெக்கானிக் ஷாஹித் அலீயின் மகள் சானியா மிர்ஸா.

சொந்த ஊரிலுள்ள கிராமப்புறப் பள்ளியில் ஹிந்தி மீடியத்தில் பயின்ற சானியா மிர்ஸா +2 தேர் வில் மாவட்ட அளவில் முதல் மதிப் பெண்களுடன் தேர்ச்சி பெற்றார்.

சிறு வயதிலேயே விமானம் இயக்க வேண்டும் எனும் மகளின் எண்ணத்தை நிறைவேற்ற விரும்பிய ஷாஹித் அலீ ஏவி யேஷன் பயிற்சி மையத்திற்கு மகளை அனுப்பிப்படிக்கவைத்தார்.

இந்திய விமானப்படைக்கு விமானிகளை நியமிக்க நடை பெற்ற தேர்வில் கலந்து கொண்டு தேர்வு எழுதிய சானியா மிர்ஸா முதல் முயற்சியில் தோல்வியைத் தழுவினார். பின்னர் 2022ஆம் ஆண்டு மீண்டும் தேர்வெழுதி 149வது தரத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

19 பெண்கள் உட்பட 400 பேர் விமானப்படைக்கு தேசிய அளவில் தேர்வு செய்யப்பட்டனர். குறிப்பாக போர் விமானங்களை இயக்கத் தகுதி பெற்ற இரண்டு பெண்களில் ஒருவர் சானியா மிர்ஸா என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

மதுரை J.M.S. அரபு கல்லூரியில் பட்டமளிப்பு விழா!

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அளப்பெரும் பேரருளாலும், எங் களின் உஸ்தாதுமார்கள், ஷைகு மார்கள், சமுதாய வழி காட்டிகளின் துஆ பரக்கத்தாலும் **குர்ஆனின் குரல் நிறுவனர்களில் ஒருவரும், மதுரை J.M.S. அரபு கல்லூரி மற்றும் M.I.W.S .பைத்துல் மால் நிறுவனருமான "அஸ்அதுல் மில்லத்" அல்லாமா அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹள்ரத் கிப்லா** (ரஹ்) அவர்களால் உருவாக்கப் பட்ட மதுரை J.M.S. அரபு கல்லூரி யின் **பட்டமளிப்பு விழா** கடந்த 12.03.2023 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியள வில் மதுரை J.M.S. அரபுக் கல்லூரி வளாகத்திலுள்ள

மர்கசுல் உலூம் அல்-இஸ்லாமியா அரபு கல்லூரி

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

அல்ஹம்துலில்லாஹ்! நமது கல்லூரி சேலத்தின் ஊட்டி என்னும் ஏற்காடு மலையடிவாரத்தில் அமைதியான இடத்தில் அமைந்துள்ளது. கல்வி கற்றுக்கொள்ள இயற்கையான இதமான சூழல் உள்ளது.

எங்கள் மதரஸாவில் மாணவர்களுக்கு ஹிஃப்ழு & கிராஅத் திறன்மிகு பேராசிரியர்களால் மிகச் சிறந்த முறையில் போதிக்கப்படுகிறது. மாணவர்களுக்கு தரமான உணவும், உறைவிடமும், மருத்துவ வசதியும், இன்னும் மற்ற தேவையான வசதிகளும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

நமது கல்லூரி இன்ஷா அல்லாஹ் வரும் ஷவ்வால் பிறை 13 (04.05.2023) வியாழன் திறக்கப்பட உள்ளதால் மதரஸாவில் சேர விருப்பமுள்ளவர்கள் உடனடியாக தபால் மூலம் தகவல் தெரிவிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

காரீ அப்ரார் அஹ்மத் காஸிமி
முதல்வர் : **மர்கசுல் உலூம் அல்-இஸ்லாமியா அரபு கல்லூரி,**
ஏற்காடு மெயின் ரோடு, K.N.பட்டி, சேலம் – 636008.
செல் : **9362102418; 9842707866**

செல் : **94889 12808** **97919 05074**

தீராத நாள்பட்டவலிகள், மூட்டு இணைப்புகளில் வலி, வீக்கம், மூட்டுபிடிப்பு, நரம்பு பிடிப்பு, தசைபிடிப்பு, ஜவ்வு விலகுதல், முகவாதம், பக்கவாதம், இடுப்பு வலி, தோள்பட்டை வலி, கழுத்து வலி, முதுகுதண்டு வலி ஒரே நாளில் கேரளா முறை வர்மா மசாஜ் சிகிச்சையில் நிரந்தரமாக குணப்படுத்தப்படும்.

35 வருடங்களாக மருத்துவ சேவையில்

டாக்டர். **M.முகமது மீரான்** MD (AM)

அரசு அங்கீகாரம் பெற்ற யூனானி மூலிகை மருத்துவர்

தன்வந்திரி மெடிக்கல், செந்துறை ரோடு, நத்தம் - 624 401.
திண்டுக்கல் மாவட்டம்.

தினசரி பார்க்கும் நேரம் : காலை 10 to 1 மாலை 5 to 8

"அஸ்அதுல் மில்லத்" ஹள்ரத் (ரஹ்) அவர்களின் நினைவரங்கத்தில் மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிக்கு J.M.S. அரபு கல்லூரி & M.I.W.S . பைத்துல்மாலின் தலைவர் தலைமை வகிக்க,

அதன் நிர்வாகக் குழு உறுப்பினர்களும், தமிழகத்தின் முக்கிய பிரமுகர்களும், சமுதாய முன்னோடிகளும் முன்னிலை வகித்தனர்.

முதுகுளத்தூர் பெரிய பள்ளிவாசலின் தலைமை இமாம் மவ்லானா **பஷீர் சேட் ஹள்ரத்,** கும்பகோணம் "சீமாட்டி" அதிபர் அல்ஹாஜ்**ஜியாவுத்தீன்,** மதுரை தெற்கு மாவட்ட முஸ்லிம் லீக் தலைவர் மவ்லானா P.K.N.**அப்துல் காதிர்** ஹள்ரத் மற்றும் சமுதாய முன்னோடிகள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

J.M.S. அரபு கல்லூரியில் கல்வி பயின்று தேர்ச்சி பெற்ற ஏழு மாணவர்களுக்கு **"ஸஆதி" ஸனதையும்,** அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்த மாணவருக்கு **"ஹாஃபிழ்" ஸனதையும்** கல்லூரியின் தலைவர் மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் **எஸ்.ஸபூர் முஹ்யித்தீன் ஹள்ரத்** அவர்கள் வழங்கினார்கள்.

சென்னை அடையாறு அல்ஹுதா அரபு கல்லூரி முதல்வர் மவ்லானா அல்ஹாஃபிழ் டாக்டர் **M.சதீதுத்தீன் பாகவி ஹள்ரத்** அவர்கள் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார்கள்.

மதுரை மாவட்ட, மாநகர, வட்டார உலமாபெருமக்கள், ஜமாஅத் நிர்வாகிகள், ஜமாஅத்தார்கள் மற்றும் பட்டம் பெறும் மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

வல்ல ரஹ்மான் இந்த அரபு கல்லூரியின் சேவைகள் அனைத்தையும் கபூல் செய்தருள்வானாக.

"தீன்குறள்" நூல் வெளியீட்டு விழா!

"தீன்குறள்" நூல் வெளியீட்டு விழா சென்னை எக்மோரில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, உமறுப்புலவர் வாரிசுகள் இலக்கிய அறக்கட்டளையின் தலைவரும், "பைஸ் மஹால்" உரிமையாளருமான ருமைசுதீன் தலைமை தாங்கினார். வரவேற்புரையை அப்துல்ஹமீது நிகழ்த்தினார்.

தமிழ்நாடு வக்ஃபுவாரியத் தலைவர் அப்துல் ரஹ்மான் வாழ்த்துரை வழங்கி, தீன்குறள் நூலை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். புதுப்பேட்டை தலைமை இமாம் நூலின் சிறப்பினை எடுத்துக் கூறினார்.

ஏற்புரையை நூலாசிரியர் "தத்துவக் கவிஞர்" இ.பத்ருத்தீன் ஆற்றினார்.

துபாயில் ஹிந்த் சிட்டி!

ஒன்றிணைந்த இந்தியாவை முகலாய மன்னர்கள் ஆட்சி செய்த போது உருவாக்கிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரங்கள், முகலாயக் கட்டிடக் கலைக்குச் சான்றாக விளங்கும் பிரமாண்டமான நினை

வுச் சின்னங்கள் ஒவ்வொன்றின் பெயரையும் ஒன்றிய பாஜக அரசு நீக்கம் செய்து வரும் நிலையில் ஐக்கிய அரபு அமீரகத்தில் ஒரு பிராந்தியத்திற்கு "ஹிந்த் சிட்டி" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

துபாயின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான அல் குத்ரா பாலைவனம், தமாக் மலையோரத்தை இணைக்கும் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியான அல் மின்ஹாத் பிராந்தியம் "ஹிந்த் சிட்டி" என்றழைக்கப்படும் என அமீரகத் துணை அதிபரும், துபாய் ஆட்சியருமான ஷேக் முஹம்மத் பின் ராஷித் அல் மக்தூம் அறிவித்துள்ளார்.

அமீரகத்தின் மன்னர் குடும்பத்தின் வாரிசுகள், பிரபலமான தொழிலதிபர்கள் வசிக்கும் மிக முக்கியமான குடியிருப்புப் பகுதிகளை உள்ளடக்கிய 83.9 கி.மீ பரப்பளவுள்ள அல் மின்ஹாத் பிராந்தியம் எமிரேட்ஸ் ரோடு, அல் அய்ன் ரோடு ஜுபல் அலீ ரோடுகள் இணையும் பகுதியில் அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகும்.

வரும் நாட்களில் குடியிருப்புகள் அதிகரிக்கும்போது ஹிந்த் சிட்டி 1, ஹிந்த் சிட்டி 2, ஹிந்த் சிட்டி 3, ஹிந்த் சிட்டி 4 என்று விரிவாக்கம் செய்யப்படும் என்றும் கூறியுள்ள துபாய் ஆட்சியர் ஷேக் முஹம்மது பின் ராஷித் அல் மக்தூமின் அறிவிப்பு போற்றுதலுக்குரியது.

செய்தி :
பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்

உங்கள் படைப்புகள் புத்தகமாக வேண்டுமா?

தரமான அச்சில் நேர்த்தியான புத்தகங்கள்

80 பக்கங்கள்

200 பிரதிகள்

தாள் உள்பட

ரூ. 8000/- மட்டுமே!

DTP கட்டணம் தனி

No ISBN charge

நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ்

43, யூனிகார்ன் காம்ப்ளக்ஸ்,
அரவிந்த் கண் மருத்துவமனை அருகில்,
மதுரை - 625 020.

Ph:0452-4396667, 98430 08113
E-Mail: newsmanbooks@gmail.com

Reg No : 25/13

ஜனாப் அப்துற் ரஹ்மான் ஆதரவற்றோர் மற்றும் முதியோர் இல்லம்

Run by: Attheen Educational and Charitable Trust

குறிஞ்சி நகர், மேலமெஞ்ஞானபுரம். தென்காசி - 627814.

சமுதாயப் பெரியோர்களே ! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்.....

வயோதிகத்தின் காரணத்தால் ஆதரவற்ற நிலையிலுள்ள நமது இஸ்லாமிய முதியவர்கள் மாற்று மத மடங்களில் தஞ்சமடைந்து தமது ஈமானை இழக்கக்கூடிய பேராபத்தில் இருக்கிறார்கள். அவர்களின் ஈமானையும், இஸ்லாத்தையும் பாதுகாக்கும் விதமாக இருபாலருக்கு மாகக் கடந்த 2017–ம் ஆண்டு முதல் தென்காசி மாவட்டம் மேலமெஞ் ஞானபுரத்தில் வாடகைக் கட்டிடத்தில் **அத்தீன் கல்வி மற்றும் சமூகத் தொண்டு நிறுவனத்தின் மூலம்** (Reg 25/13), இயங்கி வரும் **ஜனாப் அப்துற் ரஹ்மான் ஆதரவற்றோர் மற்றும் முதியோர் இல்லம்** தற்போது தென்காசி மாவட்டம் வீரசிகாமணி என்ற ஊரில் புதிதாக இடம் வாங்கப்பட்டு கட்டிடம் கட்டும் முயற்சி நடைபெற்று வருகிறது. தென்காசி வட்டார ஜமாஅத்துல் உலமா சபையின் ஆதரவு பெற்ற மேற்கண்ட இல்லத்திற்கு உங்கள் ஜகாத், ஸதகாக்களை தாராளமாகத் தந்து இஸ்லாமிய ஆதரவற்றோர் மற்றும் முதியோர்களின் ஈமானைப் பாதுகாக்க உதவுவீர்களாக.

இப்படிக்கு : மவ்லவீ **M.S.முஹம்மது நூஹ்** காஷிஃபீ தேவ்பந்தீ

தொடர்புக்கு : 9994838798

குறிப்பு : நீங்கள் தரும் சதகா ஜகாதுகளுக்கு **80 G** சட்டப்படி வரி விலக்கு உண்டு.

CSR NO : 00046960 மேலும் பார்க்க : www.attheen.online

வங்கி விபரம் : – KARUR VYSYA BANK

ATTHEEN EDUCATIONAL AND CHARITABLE TRUST

வங்கி கணக்கு எண் : A/C No. **1273115000003674**

IFSC – KVBL0001273 Branch – Tenkasi

உணவு, மருத்துவம், ஊழியர்களின் சம்பளங்கள், மின் கட்டணம், மராமத்துப் பணிகள், அலுவலகச் செலவினங்கள் இன்னும் பல செலவுகள் முதியோர் ஒருவருக்கு மாதம் ரூ.5,000/– வீதம் 8 நபருக்கு 40,000/– வரை செலவாகிறது.

புனிதமிக்க ஈமானியப்பணி தொய்வின்றி தொடர **தங்களது ஜகாத், ஸதகா, தானதர்மங்களை நன்கொடையாகவும், மாதம்/வருடச் சந்தாக்களாகவும் வழங்குவீர்கள்** என்று பெரிதும் ஆதரவு வைக்கின்றோம்.

இஸ்லாம் பற்றி மன்னர் 3வது சார்லஸ்!

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

இங்கிலாந்து மன்னர் 3வது சார்லஸ், மன்னர் பதவிக்கு வருவதற்கு முன்பாக பலமுறை, இஸ்லாம், முஸ்லிம்கள், அவர்களது சத்திய நெறி, வரலாற்று நிகழ்வுகள் ஆகியன பற்றி உரையாற்றியுள்ளார்.

திருகுர்ஆனை நன்கு அறியும் பொருட்டு அரபி மொழியைக் கற்க முற்பட்டதோடு, இஸ்லாம் மற்றும் அதன் வரலாறு பற்றி நீண்டகாலமாக பேசி வந்துள்ளார்.

தமது அன்னை 2வது எலிசபெத் மகாராணியின் இறப்பிற்குப் பிறகு, இங்கிலாந்து நாட்டின் மன்னராக ஆக்கப்பட்டு, அந்நாட்டின் சர்ச் (Church of England)சின் புதிய தலைமைப் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளார்.

மன்னர் 3வதுசார்லஸ், புறச்சூழல் மாசு, பருவநிலை மாற்றம் ஆகியன பற்றி நீண்ட காலமாகப் பேசி வந்துள்ளதோடு, இவை பற்றிய இஸ்லாமியக் கருத்துக்களையும் எடுத்துக்காட்டத் தவறவில்லை.

ஒரு புனித சிந்தனை : இஸ்லாம் மற்றும் மேற்கத்திய உலகம் - இவற்றிற்கிடையே உறவுகளைத் தோற்றுவித்தல் (A Sense of the Sacred : Building Bridges between Islam and the West) என்ற தலைப்பில் கி.பி.1996-ம் ஆண்டு உரையாற்றினார். அவ்வுரையில் இவ் விதம் குறிப்பிட்டார். "இயற்கை ஒழுங்கு பற்றிய இஸ்லாமியக் கருத்துக்களை அறிந்து, உணர்ந்து அவற்றைச் சிலாகிப்பது, மேலை நாட்டவர்களான நமக்குப் பேருதவியாக அமையும். மனிதன் மற்றும் அவனின் சுற்றுப்புறம் சீர்பெற, வழிகாட்ட, நடைமுறையில் உதவி செய்யும்".

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இஸ்லாமியக் கல்வி மையம் (Oxford Centre for Islamic Studies) செயல்பட்டு வருகிறது. கி.பி. 1993 முதல், மன்னர் அதன் போஷகராக இருந்து வருகிறார். கி.பி. 2010-ல் அங்கு ஆற்றிய உரையில் மேலே குறிப்பிட்டது பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்.

"இஸ்லாமிய நெறியின் அடிப் படைக்கூறு (Core)களிலிருந்து நான் அறிந்த வரை, "இயற்கையின் பேரளவிற்கு ஓர் அளவு உள்ளது" என்பதேயாகும். இதனை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

இந்த அளவு இறைவனால் நிர்ணயிக்கப்பட்டதாகும். இதில் கருத்து வேறுபாடில்லை. குர்ஆனிலிருந்து நான் விளங்கிய வரை, "இந்த அளவை முஸ்லிம்கள் மீறக் கூடாது என அல்லாஹ் கட்டளை

யிட்டுள்ளான்" என்பதாகும்.

"மனித குலத்திற்குக் கிடைக்கக் கூடிய திரட்டப்பட்ட ஞானமும், ஆன்மிக அறிவும் பொதிந்த, மிக குயர்ந்த செல்வக் குவியல்களி லொன்றை இஸ்லாம் பெற்றுள்ளது" என்று, பிறகு குறிப்பிட்டார்.

இக்கருத்து, மேற்குலக மக் களின் பொருள் மோகம் (Materialism) என்ற திரையால் மறைக்கப்பட் டுள்ளது என்றும் மன்னர் கூறினார்.

இந்த நெருடலான உண்மை என்னவென்றால், இப்பூமிக் கோளத்தில் வதியும் மக்கள், மற்ற பிற படைப்புகளுடன் நல்ல ஒரு காரணத்திற்காக பூமியைப் பகிர்ந்து கொள்கின்றனர் என்பதா கும். அதாவது, நம்மைச் சுற்றி, சிக்க லான முறையில் சமநிலைப்படுத்தப் பட்டுள்ள பூமியை, அனைத்து மக் களோடு, பகிர்ந்து கொள்ளாமல், மேலை நாட்டவர்களான நாம் மட்டுமே வாழ முடியாது என்பதாம்!

இஸ்லாம் இக்கருத்தை எப்பொழுதுமே கற்பித்து வரு கிறது. இதனைப் புறக்கணிப்பது படைப்புகளுடன், மனித குலம் கொண்டுள்ள ஒப்பந்தத்தை நாமாக முறிப்பதேயாகும்.

பல நூற்றாண்டுகளாக காணப் படும் நகர்ப்புற இஸ்லாமியத் திட் டங்கள், ஏற்பாடுகள் மற்றும் 1200 ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்பெயின் நாட்டில் நீர்ப்பாசன அமைப்புகள் ஆகியவற்றை உதாரணங்களாகக் காட்டி, நபி (ஸல்) அவர்களின் போதனைகள் "குறுகிய காலப் பொருளாதாரத் தேவை"க்காக, நீண்ட காலப் பயன்பாட்டுக்குக் கிடைக்கக் கூடிய சேமிப்பு இருப்பு களை நிர்வகிக்க எப்படி உதவுகின் றன என்பதைக் குறிப்பிட்டார்.

உண்மையில், மூன்றாவது சார் லஸ் அவர்களின் குளொசெஸ் டர் பகுதியிலுள்ள அரண்மனை வளா கத்தில் காணப்படும் பூந்தோட்டம், குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் தூண்டுதலே காரணமாகும்.

கி.பி.2006-ம் ஆண்டு, எகிப்து நாட்டிலுள்ள பழமையான பல் கலைக் கழகத்திற்கு வருகை தந்த மன்னர் மூன்றாம் சார்லஸ் அவர் கள், முந்திய ஆண்டில் டென்மார்க் நாட்டில் வெளியிடப்பட்ட, நபி (ஸல்) அவர்களைப் பற்றிய கேலிச் சித்திரத்தை குறைகண்டு தமது உரையில் மறுத்துரைத்தார்.

"நாகரீகச் சமுதாயம் என்பதன் அடையாளம், சிறுபான்மையின ருக்கும், தனக்குத் தெரிந்திராதவர் களுக்கும் காட்டும் மரியாதையே யாகும்" என்று குறிப்பிட்ட மன்னர், டேனிஷ் கேலிச்சித்திரம் வெளி யிடப்பட்டதால் அண்மையில் வெடித்த கோரமான சச்சரவும், கோப மும், மற்றவர்களுக்கு பெருமதிப் புள்ளதாகவும், புனிதமானதாகவும் உள்ளவற்றிற்குரிய மரியாதையை யும், கண்ணியத்தையும் உரிய முறையில் காட்டத் தவறுவதால் ஏற்பட்ட அபாயத் தைத்தான் காட்டுகிறது என்றும் கூறினார்.

மேற்குலகினரிடம், இஸ்லாம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் பற்றி விவாதத்தில் பங்கு கொள்வது, மன்னருக்கு இது முதல் தடவையல்ல.

தொலைபேசி : 04554-275289 ஈத் முபாரக்! செல் : 94861 49928

முஹம்மதிய்யா எத்தீம்கானா

அனாதை இல்லம்

16B/11, கம்பம் மெட்டு ரோடு, **கம்பம்-625 516.**
தேனி மாவட்டம்.

அன்பான வேண்டுகோள்!

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்.....!

மர்ஹூம் அல்ஹாஜ் **C.A.முஹம்மது இப்ராஹீம்** (ரஹ்) M.A.,B.L., (அட்வகேட், சென்னை) அவர்களால் **முஹம்மதிய்யா எத்தீம்கானா** நிறுவப்பட்டு இறையருளால் 47 ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இங்கு அனாதை ஏழை மாணவர்களுக்கு உணவு, உறைவிடம், மருத்துவம், ஆடைகள், பள்ளிக் கட்டணம் மற்றும் எல்லா செலவுகளையும் நிர்வாகம் செய்து வருகிறது.

மேற்படி செலவுகளுக்கு உங்களுடைய ஜகாத், ஸதகாகளை கொடுத்து உதவி ஏழை அனாதை மாணவர்களை ஆதரித்து அல்லாஹ்விடம் சிறப்பான நற்கூலியை பெற அன்புடன் வேண்டுகிறோம்.

DD அல்லது செக் **"MUHAMMADIYA ORPHANAGE"** என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

வங்கி மூலம் செலுத்தும் விபரம் :

INDIAN OVERSEAS BANK
Cumbum Branch
A/c No. **017601000003546**
IFSC : **IOBA 0000176**

இப்படிக்கு,
M.முஹம்மத் ஹாலித்
செயலாளர் :
முஹம்மதிய்யா எத்தீம்கானா, கம்பம்.

குறிப்பு : எத்தீம்கானாவிற்கு வசூல் செய்ய எவரையும் நியமிக்கவில்லை.

சல்மான் ருஷ்தி என்பவர் எழுதிய ஒரு தரமற்ற நூலான 'சாத் தான்ய வரிகள்' (Satanic Verses) வெளியிடப் பட்டபோது, ஈரான் அதிபர் ஆய துல்லாஹ் கோமேனி அவர்கள், நூலாசிரியர், இஸ்லாத்தை இழிவு செய்த காரணத்தால் கி.பி.1989-ல் அவருக்கு மரண தண்டனை அறிவித்து பத்வா வழங்கினர்.

கி.பி.2014-ல் மார்டின் அமிஸ் என்ற நூலாசிரியர், வானிட்டி ஃபேர் (Vanity Fair) என்ற மாத இதழில், இளவரசர் சார்லஸ் அவர் களுடன் விவாதித்ததைப் பற்றி எழுதினார். காரணம் இளவரசர், ஃபத்வாவை ஆதரித்ததேயாகும். அப்பொழுது, 'எவரொருவர், மற்றவர்கள் கொண் டுள்ள ஆழ்ந்த நம்பிக்கைகளை இழித்துரைப்பதை ஆதரிக்க முடியாது' என்றார் இளவரசர்.

கி.பி.1993 அக்டோபர் மாதம் நிகழ்த்திய ஓர் உரையில் மன்னர் மூன்றாவது சார்லஸ் அவர்கள் மேற்குலகத்தினர், இஸ்லாத்தை நன்கு விளங்கிக் கொள்ள வேண் டும் என வற்புறுத்திக் கூறினார்.

"மேற்கு நாட்டினர், இஸ்லாமிய நெறியை நன்கு அறிந்து கொள்ளா மல், அறியாமையில் மூழ்கியுள்ள னர். இம்மக்கள், தங்களது கலாச் சாரமும், நாகரீகமும், இஸ்லாத்திற்கு வழங்க வேண்டிய கடனைப் பற்றியும் அறியாது, அறியாமை யில் திளைக்கின்றனர். இதற்குக் காரணம், நாம் பெற்றுக் கொண்ட வரலாறு சுருக்கப்பட்டதேயாகும்".

இவ்வுரை, சுமார் 30 ஆண்டு களுக்கு முன், இஸ்லாமியக் கல்வி கற்றல் மையம் (Centre for Islamic Studies) அமைந்துள்ள ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் இளவரசர் சார்லஸ் அவர்கள் நிகழ்த்தியதாகும். இளவரசர் மேலும் தொடர்ந்தார்.

நம்மையும், நம்மைச் சுற்றியுள்ள உலகம் பற்றியும், கொண் டுள்ள வாழ்வு உண்மை, அறிவு ஆகியவற் றின் தன்மை குறித்துப் பேசும் மெய்ப்பொருள் (Meta Physics) மற்றும் ஒன்றிணைந்த வரலாறு ஆகியவற்றை இஸ்லாம் பாதுகாத்து வைத்துள்ளது. விஞ்ஞானப்புரட்சி யைத் தொடர்ந்து, மேற்குலகு, இவற்றைத் தொலைத்து விட்டது.

இஸ்லாத்தை, தீவிரவாதத் துடன் இணைத்துப் பார்ப்பதைக் கைவிடுமாறும் அறிவுறுத்தினார்.

ஏதோ ஒரு வகையில், தீவிரவாதம் என்பது முஸ்லிம்களின் தனித் துவம் (Hallmark) அவர்களின் சாரம் (Essence) அல்லது பண்பு அல்லது கூறு என்ற நம்பிக்கை தூண்டப் படுவதைத் தவிர்க்க வேண்டும்.

பெரும்பாலான முஸ்லிம் கள் இறையச்சம் (Piety) மிக்கவர்கள் அரசியலிலும் நடுநிலை வகிப்பவர் களாவர். அவர்களது நெறியும், அனைத்திலும் நடுநிலையைப் பேணுமாறு அறிவுறுத்துகிறது. நபி (ஸல்) அவர்கள் எப்பொழுதும் தீவிரவாதத்தை வெறுப்போடு, அது பற்றி அச்சமும் கொண்டிருந்தனர்.

இலண்டன் நகரில், இஸ் லாமியப் பொருளாதார அமைப்பில் கி.பி.2013-ல் நிகழ்த்திய உரையில், மூன்றாவது சார்லஸ் மன்னர் அவர் கள் இஸ்லாமிய நிதி (Islamic

Finance) அமைப்பின் மூலம், உலக நிதிச் சந்தைகள் (Global Finance Markets) பெற்றுக் கொள்ளும் நன்மைகள் ஏராளம் என்று தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

வாணிபம் மற்றும் நிதி அமைப்புகளில் ஏற்படக்கூடிய முழுமையான தீயவிளைவுகளைச் சமாளிப்பதற்குரிய நேர்மையான மற்றும் நியாயமான வழிமுறைகளை இயற்கையான நேர்மை பொதிந்த இஸ்லாமியப் பொருளாதார அமைப்பின் மூலம் தேடுவது நிச்சயமாக ஒரு நல்ல முயற்சியே யாகும் என்று தமது கருத்தை வெளியிட்டார். இஸ்லாமிய வணிகத்தில், 'முஷாரகா', 'முதாரபாஹ்' என்ற வார்த்தைகளைக் கூறி, அவற்றின் சிறப்பை எடுத்துரைத்தார்.

முஷாரகா : வியாபாரத்திற் காகக் கடன் கொடுத்து உதவியவர், கடன் வாங்கியவருக்கு நஷ்டம் ஏற்படும்போது, அதை இருவரும் பகிர்ந்து கொள்ளுதல்.

முதாரபாஹ் : வியாபாரத்தில் ஏற்படும் இலாபத்தை இருவரும் பங்கிடுதலாகும்.

பொதுவாக, வாணிபத்தில் நஷ்டம் ஏற்படுவதை, கடன் பெற்றவர் மேல், விரைந்து ஏற்றி விடுவதும், இலாபம் ஏற்படும்போது, கடன் வாங்கியவரே அதை வைத்துக் கொள்வதுமே வழக்கத்தில் உள்ளது.

மன்னர் மூன்றாவது சார்லஸ் அவர்கள், வட்டி - ரிபா (Riba - usury) என்பது பற்றிக் குறிப்பிட்டார். இயற்கை மூலாதாரங்களை எல்

மிக வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

தீன்குறள்

தத்துவக் கவிஞரும், பாவரசுமான **இ.பதுருத்தீன்** எழுதிய திருக்குறளுக்கு நிகரான **தீன்குறள் நூல்!**

இஸ்லாமிய மணங் கமழும் அரிய நூலின் விலை : ரூபாய் **200/-**

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் **கே.எம்.காதர் மொகிதீன்,** கவிக்கோ **அப்துல் ரகுமான்** முதலானோர் மதிப்புரை செய்த அரிய நூல்! இது இரண்டாம் பதிப்பு.

நூலைப் பெற விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

தளபதி தாரிக் பதிப்பகம்

65/1131, வ.உ.சி.நகர், 14ஆம் குறுக்குத் தெரு, தண்டையார்பேட்டை, **சென்னை** – 600 081.

அலைபேசி: 9444272269

லோரும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்வதைக் குறிப்பிடும்போது, வட்டியை, இஸ்லாம் தடை செய்துள்ளதை நினைவு கூர்ந்தார்.

இப்பொழுதுள்ள பொருளாதார அமைப்பிற்கு, திருக்குர்ஆன் முற்றிலுமாகத் தடை செய்துள்ள ரிபா-கடும் வட்டியை பொருத்திப் பார்த்தால் வருங்காலத் தலைமுறையினருக்கு நாம் பூமியின் இயற்கை வளங்களைச் சுரண்டி விட்டதால் ஏற்படுத்தியுள்ள கடன், ஒரு வட்டியேயாகும். இது ஏற்புடையதல்ல என்றார்.

ஆகவே, "நிதி மற்றும் வணிக அமைப்புகள், இஸ்லாமியக் கொள்கைகள் காட்டும்வழிகாட்டலைத் தழுவிக் கொண்டால், நேர்மையான வழிமுறைக்கு உதவும். இதன் மூலம் சமநிலையை எட்ட முடியும்" என்றும்மன்னர் வழிகாட்டினார்.

கலை, கல்வி மற்றும் விஞ்ஞானம் முதலியவற்றுக்கு, முஸ்லிம்களின் மிகச் சிறந்த பங்களிப்புகளை மன்னர் அடிக்கடி நினைவு கூர்வது குறிப்பிடத்தக்கது.

"இஸ்லாமிய அறிஞர்களுக்கு, மேற்குலக மக்களாகிய நாம் பெரிதும் கடன்பட்டுள்ளோம். ஏனெனில், ஐரோப்பாவின் இருண்ட காலங்களின் போது, மிகச் சிறந்த அறிவுப் பொக்கிஷங்களை உயிரோட்டமுள்ளதாக அவர்கள் ஆக்கி வைத்திருந்தனர்" என்று கி.பி.2006-ல் கெய்ரோ நகரின் அல் அஸ்ஹர் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய உரையில் இளவரசர் சார்லஸ் எடுத்துரைத்தார்.

கி.பி.2003-ல், லிஸ்டர்ஸைர் பகுதியிலுள்ள மார்க்ஃபீல்ட் உயர் கல்விக் கழகத்தில் உரையாற்றும்போது, கணிதத் துறைக்கு முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பை மன்னர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய மறுமலர்ச்சி (Europeah Renaissance)க்கு, இஸ்லாமும், முஸ்லிம்களும் வழங்கிய பங்களிப்புகளைச் சந்தேகிக்கும் எவரும் ரோம எண்களைப் பயன்படுத்தி ஒரு சிறிய கணக்குப் போட்டுப் பார்க்கவும்!

அரபு எண்களையும், சைபர் (Zero) எண்ணையும் பயன்படுத்த வழிகாட்டிய முஸ்லிம் கணித மேதைகளுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்"

கி.பி.1993-ல் நிகழ்த்திய உரையில், முஸ்லிம் நாடுகளில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள், மேற்கு நாடுகளுக்கு முன்பாகவே வழங்கப்பட்டு விட்டது என்று மன்னர் குறிப்பிட்டார்.

துருக்கி, எகிப்து, சிரியா போன்ற நாடுகளில், பெண்களுக்கு ஓட்டுரிமை ஐரோப்பிய நாடுகள் பின்பு செய்ததுபோல, முன்பாகவே வழங்கப்பட்டு விட்டது. இந்நாடுகளில், பெண்களுக்குச் சமமான ஊதியம் வழங்கப்படுகிறது. சமூகப் பணிகளில் முழுவதுமாகப் பங்கேற்கின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

நன்றி : What the New British Monarch said about Islam and Muslims. ரேடியன்ஸ் வியூஸ் வீக்லி, செப்டம்பர் - 25, அக்டோபர் - 1 2022.

விரைவாக இஸ்லாம் பரவுவதில் வான்மறை குர்ஆனின் பங்கு!

அஷ்ஷைக் **முஹம்மது முஹ்யித்தீன்** மதனீ,
சவூதி அரசின் (துபை) இஸ்லாமிய மேனாள் பிரதிநிதி, மதுரை

மிக்க எளிமையாகவும், மக்களுக்குச் சொல்ல வந்த தன் கருத்துக்களை சுற்றி வளைக் காமலும் நேரடியாக திருகுர்ஆன் கூறுவது அதன் தனிச் சிறப் பாகும். மானுட சிந்தனையைத் தட்டி எழுப்பி, மனிதனின் அன்றாட வாழ்க்கை நடப்பிலிருந்தே அவ னுக்குப் பல படிப்பினைகளைக் கற்பிக்கத் துணிவது அதன் தனி சொல் வழியாகும். பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு சமூகங்களில் தோன்றி, ஏகத் துவமும் எழிலார்ந்த மனிதப் புனித பண்புகளையும் போதித்து, சீர் திருத்தப்புரட்சிசெய்திட்ட இறைத் தூதர்களின் வரலாற்று நிகழ்ச்சி களையும், அவர்களுக்கு அருளப் பட்ட இறைவாக்குகள் பற்றியும் எழுச்சியோடு இதயங்களுக்கு ஒப்பற்ற உணர்ச்சியூட்டும் வண்ணம் பல்வேறு பரவலான கோணங்களில் எடுத்தியம்பு கின்றது, இறைமறை குர்ஆன்!

இவ்வுலகில் மனுக்குலம் தோன்றிய காலந்தொடங்கி, இறுதி நாள் வரையுள்ள உண்மை நிகழ்வுகளை கண்முன் காட்சி களாக சித்தரித்துக் காட்டுகின்றது கண்ணியமிக்க குர்ஆன்!

வரலாறு கூறும் ஆயிரம் வசனங்களையும், வாக்குறுதி வழங்கும் ஆயிரம் வசனங்களை யும், அச்சமூட்டி எச்சரிக்கும் ஆயிரம் வசனங்களையும், நன்மையை ஏவும் ஆயிரம் வசனங்களையும், தீமையை விலக்கும் ஆயிரம் வசனங்களை யும், உவமை கூறும் ஆயிரம் வசனங்களையும், 'ஹலால்' - ஆகுமானவற்றை விளக்கும் இரு நூற்றி ஐம்பது வசனங்களையும், 'ஹராம்'-தடுக்கப்பட்டவற்றைத் தெரிவிக்கும் இருநூற்றி ஐம்பது வசனங்களையும், இறை துதி கொண்ட ஒரு நூறு வசனங்களை யும் உள்ளடக்கிய உயர்தனித் திரு மறையாக விளங்குகிறது. உல கிலுள்ள எல்லா நூல்களும் (இப் போது இருப்பவை அனைத்தும்) எழுதப்பட்டவையாக இருக்கும் நிலையில் இந்த திருகுர்ஆன் மாத்திரமே அருளப்பட்ட திருநூலா கவும் திகழ்கின்றது தன்னிகரற்று!

மனிதன் படைக்கப்பட்ட விதத்தை விவரிக்கிறது, மட்டற்ற இயற்கையின் மாபெரும் ஆற்றலை ஆராயத்தூண்டுகிறது. கடந்த கால சமூகங்களின் சரித்திரத்தைச் சொல்கிறது,

நிகழ்கால அமலுக்குரிய தெளிவான தேர்ந்த சட்டங்களைப் பதிவு செய்கிறது!

அழிந்துபோன சமுதாய அவலநிலையைக் கண்டு, படிப்பினை பெற்று திருந்திடுமாறு அறிவுறுத்துகின்றது!

அழியாத நிலை வாழ்வுக்குரிய நல்வழியைச் சொல்கிறது!

இவையாவையும் இதயங்களை ஈர்க்கும் இனிய நாதமாக, கவியோ, வசனமோ அல்லாத மூன்றாவது முதல் தர, முத்தான வேதபோதமாக, இனிய ஓசை நயத்துடன் ஒலிக்கின்றது; ஒளிறைக் கொள்கையை இம்மியளவும் பிசகல் இன்றி, ஓங்கி முழக்குகின்றது!

மனிதனுக்கும், மாபெரியோன் இறைவனுக்கும் உரிய உறவு முறையை விவரிக்கிறது.

இயற்கை நிலை பற்றி துல்லியமாகக்கூறி அதனை ஆய்வு செய்யக் கூறியதோடு, ஆண்டவனின் திருவேதமாகிய தன்னையே ஆராய்ந்து பார்க்குமாறு கூறுகின்ற ஒரே திருநூலாகத் திகழ்கின்றது!

விஞ்ஞான அறிவு வளர்ச்சியின் வித்தாகத் திகழ்கின்றது!

பூமி சுழல்வதைச் சொல்கிறது!

மழைபொழியும் முறையை விளக்குகிறது.

கதிரவனும் நிலவும் கடுகளவும் மீறலின்றி, கோளங்கள் யாவும் தத்தமது வரையறைப் பாதைகளில் பிசகாது சரியாகச் சுழல்வதைச் சொல்கிறது.

படைப்பினங்கள் யாவும் நீரால் படைக்கப்பட்டன என்றும், மாபெரும் வெடிப்பு மூலம் இப்பிரபஞ்சம் தோன்றியதாக உறுதிபட உரைக்கிறது.

தாவரங்கள், மனிதர்கள், தரணியோர் அறியாத ஊர்வன, பறப்பன உள்ளிட்ட அனைத்தையும் மற்றும் மனுக்குலம் அறியாத வற்றையும் இறைவன் ஜோடி ஜோடியாகப் படைத்துள்ளதாக மாபெரும் வியப்புக்குரிய தகவலைத் தெரிவிக்கிறது.

கால்நடைகளின் கூட்டு வாழ்க்கை முறை பற்றி, விலங்கியலைப் பற்றி, தேனீக்களின் வாழ்வு பற்றி - தாயின் கருவறையில் (குழந்தை)சேயின் படிப்படியான வளர்ச்சி பற்றி உலகிலேயே முதன் முதலாகப் பேசி, மருத்துவ மாமேதைகளையே பிரமித்து மூக்கில் விரல் வைக்கச் செய்த அதிசய அற்புத திருமறையாக மிளிர்கிறது!

அல்லாஹ்தஆலாவைத் தவிர அனைத்தும் அழியக் கூடியவையே! என்று ஆணித் தரமாகத் தெரிவிக்கிறது.

இத்தகைய எண்ணிலடங்கா இணையற்ற பல காரணங்கள் தாம், இஸ்லாம் இப்புவியில் விரைவாகப் பரவிடத் தூண்டியவை!

இதற்கு வான்மறை குர்ஆனின் பங்கு மகத்தானவை! தூண் போன்றவை!

ஈகை பெருநாள் வாழ்த்துக்கள்!

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி
மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்
(நூல் : திர்மிதி)

என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...

சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

கும்பகோணம் - திருவாரூர்

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.
T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in
T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

மதரஸா-யே-இம்தாதியா, மேல்விஷாரம்

அல்ஹம்துலில்லாஹ்! 2010-ம் ஆண்டு மக்தப் ஆக தொடங்கிய நமது நிறுவனம் படிப்படியாக வளர்ச்சி அடைந்து தற்போது நாழிரா, ஹி.ப்ழு, ஜும்ரா மற்றும் கிராஅத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

மதரஸாவில் 100 மாணவர்கள் 120 மாணவிகள் ஓதி வருகின்றனர். இதில் (35 மாணவர்கள் (ம) 10 மாணவிகள் பார்வையற்றவர்கள்)

சுமார் 17 மாணவர்கள் 10-ம் வகுப்பு மற்றும் 12 மாணவர்கள் கல்லூரிப் பட்டப்படிப்பு முடித்துள்ளனர்.

ரஸ்முல் கத் அடிப்படையில் பிரைலி குர்ஆனை தயார் செய்து இந்தியா மற்றும் சர்வதேச அளவில் சுமார் 700 பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு பிரதி பிரைலி குர்ஆன் தயாராவதில் ரூ.2000/- செலவாகிறது.

மதரஸாவில் 16 ஆசிரியர்கள் மற்றும் 5 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மதரஸாவிற்காக சொந்த இடமோ கட்டிடமோ இல்லை. தற்காலிகக் கட்டிடத்தில்தான் (SHEET HALL) செயல்பட்டு வருகிறது. எனவே மாணவர்களுக்கு மழை, வெயில், குளிருக்கான போதிய வசதிகள் இல்லை.

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையாலும், மக்களின் நன்கொடையைக் கொண்டும் மாணவ, மாணவிகளின் அடிப்படைத் தேவைகள் (கல்வி, விடுதி, உணவு, உடை, மருத்துவம், பயணம், பள்ளி மற்றும் கல்லூரிக் கட்டணம்) அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றது.

கனிவான வேண்டுகோள்: மதரஸாவின் வருடாந்திர, மாதாந்திர, வாராந்திர மற்றும் தினசரிச் செலவுகளில் தங்களின் (நன்கொடை, ஸதகா, ஜகாத், ஸதகாதுல் ஜாரியாவை) கொண்டு பங்கெடுத்துக் கொள்ளவும். ஜஸாக்கல்லாஹு கைரா.

மதரஸாவின் கல்விப் பிரிவுகளின் முழு விளக்கம்

பிரிவுகள்	மாணவர்கள்	மாணவிகள்	பார்வை அற்றவர்கள்	மொத்தம்
நாழிரா	30	20	10	50
ஹிப்ழு	42	72	35	114
ஜும்ரா	28	08	18	36
கிராஅத்	28	மக்தப் 20	18	20
10th	27	89	13	116
12th	08	-	03	08
கல்லூரி	12	-	02	12

செலவினங்கள்

ஒரு மாணவனின் மாதாந்திரச் செலவு	5,000
நிறுவனத்தின் மாதாந்திரச் செலவு	5,00,000
ஒரு மாணவனின் வருடாந்திரச் செலவு	60,000
நிறுவனத்தின் வருடாந்திரச் செலவு	60,00,000
மதரஸாவின் கடன்	27,00,000

மொத்தம் 220

பட்டம் பெற்றவர்கள்

மொத்த ஹாஃபிழ்கள்	27
மொத்த உலமாக்கள்	12
மொத்த ஹாபிழாக்கள்	81

G Pay
Google pay or PhonePe: 9952120340 (IMDADIYA EDU)

Scan and pay with any BHIM UPI app

A/C Name : IMDADIYA EDUCATIONAL & CHARITABLE TRUST

STATE BANK OF INDIA
CURRENT ACCOUNT NO : 35612371063
Melvisharam Branch Code : 3783
IFSC : SBIN0003783

INDIAN BANK
CURRENT ACCOUNT NO : 6288904753
Melvisharam Branch Code : 1312
IFSC : IDIB000M139

اَلْمَدْرَسَةُ الْإِمْدَادِيَّةُ لِلْمَكْفُوْفِيْنَ بِمِيْلْ وِشَارَمْ تَمِلْ نَادُوْ اَلْهِنْدْ

MADRASA-E-IMDADIYA FOR THE BLIND

Run By : Imdadiya Educational & Charitable Trust

Registered under section 12AA of the Income Tax Act,1961 as per
Regd no. CIT (Exemption),Chennai/12AA/2020-21/A/11499

539,Anna Salai, Melvisharam, Ranipet Dist (T.N) - 632509
E-mail : imdadiya.wes@gmail.com Web : imdadiyaforblind.org
Contact : +91-9952120340 Telephone : 04172 268500

Regd. No:59/2014
Estd: 1431-H/2010

எல்லாம் வல்ல அல்லாஹ் தஆலாவின் அளப்பெரும் பேருளால்.....

புனிதமிகு ரமளான் மாதத்தில்

மதுரை M.I.W.S.பைத்துல்மாலுக்கு வாரி வழங்குங்கள்!

இந்தியாவிலேயே கடந்த 39 ஆண்டுகளில் 967 ஏழைக்குமர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து வாழ்வளித்துள்ள

மதுரை M.I.W.S.பைத்துல்மாலுக்கு

நிகழும் பொன்னான புனிதமிகு ரமளானில் நீங்களும், உங்களின் அருமை நண்பர்கள், உற்றார் - உறவினர்கள் மூலமாகவும் ஜகாத், ஸதகா நிதிகளிலிருந்து உதவிக்கரம் நீட்டி ஏழைக்குமர்களின் கண்ணீரைத் துடைக்க முன்வாருங்கள்.

முடிந்தால்_ ஏழைக்குமர் ஒருவரின் திருமணத்தையே இன்ஷா அல்லாஹ்

உங்கள் செலவில் நடத்தி முடித்திட ரூ. 75,000/-ஐ

அள்ளி வழங்குங்கள்!

இன்ஷா அல்லாஹ் வரும் 07.05.2023 ஞாயிற்றுக்கிழமை 12 குமர்களுக்கு திருமணம் நடைபெறவுள்ளது.

தங்களின் மேலான உதவிகளை "AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST BAITHUL MAL" எனும் பெயரில் மதுரை கனரா வங்கி கருப்பாயூரணி பிராஞ்சின் (Br. Code :5663) எங்கள் கணக்கு எண் : 1009101028635 (I.F.S.C. Code:CNRB0005663) எனும் கணக்கிற்கு எந்த வங்கியிலிருந்தும் பணமாக Transfer செய்து விட்டு, கீழ்கண்ட மொபைல் எண்களுக்கு Whatsapp அல்லது S.M.S. மூலம் தெரிவிக்கலாம். மணியார்டர் மூலமும் எங்களின் கீழ்கண்ட முகவரிக்கு தொகைகளை அனுப்பலாம்.

M.I.W.S. BAITHULMAL

J.M.S. Arabic College Campus, Jaamiyaa Nagar,
Sivagangai Highway Road, MADURAI - 20.
9994148480, 9486017570 miws_baithulmal@rediffmail.com

எண்பத்து மூன்று ஆண்டுகளும் நான்கு மாதங்களும்!

மவ்லவீ **வி.அப்துல் ரஷீத்** ஃபாஸில் ஜாமியா நிஸாமியா
எம்.ஏ., பி.டிஹெச்.,

அல்லாஹ் திருமறையை முதன் முதலாக ரமளான் மாதத்தில் ஓர் இரவில் இறக்கி வைத்ததாக கூறி அந்த இரவின் மகத்துவத்தை பற்றியும் நமக்கு விளக்குகின்றான்.

"நிச்சயமாக இதனை மிக்க பாக்கியமுள்ள ("லைலத்துல் கத்ரு" என்ற) ஓர் இரவில் (முதல் முறையாக) இறக்கி வைத்து, நிச்சயமாக நாம் (இதன் மூலம்) அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றோம்"

- அல்குர்ஆன் (44 : 3)

நிச்சயமாக நாம் இந்தக் குர்ஆனை (மிக்க கண்ணிய முள்ள) லைலத்துல் கத்ர் என்னும் ஓர் இரவில் (முதலாவதாக) இறக்கி வைத்தோம். (நபியே!) அந்த கண்ணியமுள்ள இரவின் மகிமையை நீங்கள் அறிவீர்களா? கண்ணிய முள்ள அந்த இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும். அதில் மலக்குகளும், ஜிப்ரயீலும், தங்கள் இறைவனின் கட்டளையின் பேரில் (நமக்கு வேண்டிய) எல்லா காரியங்களுடன் இறங்குகின்றனர். ஈடேற்றம் உண்டாகுக! (அவ்விரவின்) இச்சிறப்பு விடியற் காலை உதயமாகும் வரை (நீடிக்கிறது).

- அல்குர்ஆன் (97 : 1 - 5)

லைலத்துல் கத்ர் எனும் இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும் என்று அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான். ஒரு ஆண்டுக்கு 12 மாதங்கள். அப்படியானால் திரு மறையில் சொல்லப்படும் ஆயிரம் மாதங்கள் என்பது எண்பத்து மூன்று ஆண்டுகளும் நான்கு மாதங்களாகும்! ஆகவே ஒரு லைலத்துல் கத்ர் இரவில் நின்று அல்லாஹ்வை தொழுதால் அது எண்பத்து மூன்று ஆண்டுகளும் நான்கு மாதங்களுக்கு மேலாக அல்லாஹ்வை தொழுததற்கு சமம் ஆகும்.

நமக்கும் முந்தைய சந்ததியினர் நம்மை விட நீண்ட காலம் இந்த உலகத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். உதாரணமாக நூஹ் (அலை) அவர்கள் 950 ஆண்டுகள் வாழ்ந்த தாக திருமறை கூறுகின்றது.

"மேலும்; திடனாக நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் அனுப்பினோம்; ஆக, அவர்கள் மத்தியில் அவர் ஐம்பது குறைய ஆயிரம் ஆண்டுகள் தங்கியிருந்தார்;" - அல்குர்ஆன் (29 : 14)

ஹள்ரத் ஆதம் (அலை) அவர்கள் 930 ஆண்டுகள் வாழ்ந்த தாகவும், ஹள்ரத் நூஹ் (அலை) அவர்கள் 950 ஆண்டுகள் வாழ்ந்ததாகவும் தெளராத் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. முந்தைய சந்ததியினர் நீண்ட காலம் வாழ்ந்த தனால், அல்லாஹ்வை நீண்ட காலம்

வணங்கி இவர்களால் அபரிமித மான நன்மைகளை பெற முடிந்தது.

ஆனால் இன்றைய சந்ததியினர் நூறு ஆண்டுகள் வாழ்வதே பெரிய விஷயமாக இருப்பதால், அல்லாஹ்வை நீண்ட காலம் வணங்குவதற்கு அவகாசம் இல்லை. ஆதலால், ஒவ்வொரு லைலத்துல் கத்ர் இரவிலும் நாம் அல்லாஹ்வை வழிபட்டால் நாம் எண்பத்து மூன்று ஆண்டுகளும் நான்கு மாதங்களுக்கு மேலாக அல்லாஹ்வை வழிபட்ட நன்மைகள் நமக்கு கிடைக்கும். ஏனென்றால் ஒவ்வொரு லைலத்துல் கத்ர் இரவும் ஆயிரம் மாதங்களுக்கு மேலானதாகும்.

ஒருவர் தன்னுடைய ஆயுள் காலத்தில் முப்பது லைலத்துல் கத்ர் இரவுகளை சந்தித்து அந்த முப்பது இரவுகளில் அல்லாஹ்வை வணங்கியிருப்பாரானால் அவர் ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு மேலாக அல்லாஹ்வை வணங்கியதற்கு சமம் என்றே சொல்லலாம். எனவே லைலத்துல் கத்ர் இரவில் அல்லாஹ்வை வணங்குவதின் சிறப்பு என்ன என்று இப்போது நாம் புரிந்து கொள்கிறோம்.

லைலத்துல் கத்ர் இரவில் நின்று அல்லாஹ்வை வணங்குவதால் நமக்கு கிடைக்கும் மிக பெரிய சன்மானம் என்னவென்றால், நம்முடைய முந்தைய குற்றங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னித்து விடுகிறான். இதை நபி (ஸல்) அவர்கள் நமக்கு எடுத்துரைக்கிறார்கள்.

"நம்பிக்கை கொண்டவராகவும் நன்மையை எதிர்பார்த்த வராகவும் லைலத்துல் கத்ர் எனும் புனித இரவில் நின்று வணங்குகிறவரின் முந்தைய குற்றங்கள் மன்னிக்கப் படும் என்று இறைத் தூதர் நபி [ஸல்] அவர்கள் கூறி னார்கள் என ஹஸ்ரத் அபூஹுரைரா [ரளி] அவர்கள் அறிவித்தார்கள்".

ஸஹீஹ் புகாரி 35

லைலத்துல் கத்ர் எனும் புனித இரவில் நின்று நாம் அல்லாஹ்வை வணங்கினால் அவன் நம்முடைய முந்தைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்து விடுவான். ஏனென்றால் அவன் நம் பாவங்களை மன்னிக்கும் கிருபை உள்ளவன். இதை அல்லாஹ் நமக்கு திருமறையில் அறிவுறுத்துகிறான்.

"நிச்சயமாக, அல்லாஹ் தன் அடியார்களின் மன்னிப்புக் கோரு தலை அங்கீகரிக்கின்றான் என் பதையும், தானங்களை அவனே எடுத்துக் கொள்கிறான் என்பதை யும், நிச்சயமாக அல்லாஹ் பாவங் களை மன்னித்துக் கிருபை செய் பவன் என்பதையும் அவர்கள் அறியவில்லையா?"

- அல்குர்ஆன் (9 : 104)

மேலும் அல்லாஹ்விடம் மன்னிப்பை வேண்டுங்கள். அவன் மன்னிப்பை வழங்கக் கூடியவன் என்று நூஹ் (அலை) அவர்களும் தங்களுடைய சமூகத்தினரிடம் கூறினார்கள்.

மேலும், "நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங் கள்; நிச்சய மாக அவன் மிகவும் மன்னிப்பவன்" என்று கூறினேன்.

- அல்குர்ஆன் (71 : 10)

الجامعة محسن العلوم

அல்ஜாமிஆ முஹ்ஸினுல் உலூம் அரபிக் கல்லூரி

ஆயிஷா ஜும்ஆ மஸ்ஜித் (ANH டிரஸ்ட்)

எண் : 15, சரஸ்வதி நகர், சீலப்பாடி விரிவாக்கம்,
திண்டுக்கல் - 624005. செல் : 9840071800

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

இருவழிக் கல்வி 2023 – 2024

பேரன்புடையீர் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

நமது மதரஸாவில் ஹிஃப்ளு வகுப்பு மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகின்றது. உங்கள் அன்புச் செல்வங்கள் அருள் மறையை முறைப்படி மனனம் செய்திட (100% ஸுன்னத் வல்ஜமாஅத் அகீதா முறைப்படி) அன்புடன் அழைக்கின்றோம்.

இம்மதரஸாவில் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள், ஏழைகள், பெற்றோரை இழந்த மற்றும் ஆதரவற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் சிறப்புப் பாடத்திட்டத்தையும் அறிமுகம் செய்துள்ளோம்.

தகுதி : 5ஆம் வகுப்பு முடித்த குர்ஆன் ஓதத் தெரிந்த அல்லது ஓதத் தெரியாத மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

பாடத்திட்டங்கள் :

1. **தர்தீல்...** (முறைப்படி பார்த்து ஓதுதல்);
2. **தஜ்வீது...** (ஓதும் முறையை தெரிந்து ஓதுதல்);
3. **தஹ்ஃபீழ்...** (மனனம் செய்தல்);
4. **முதஷாபிஹாத்...** (முன்பின் வரும் வசனங்களை முறைப்படி தெரிந்து கொள்ளல்);
5. **முகம்மிலாத்...** (பரிபூரணமாக பூர்த்தி செய்தல்).

தினமும் நான்கு பாடங்கள் :

1. பார்த்து ஓதும் பாடம்;
2. பார்க்காமல் ஓதும் பாடம்;
3. ஜுஸ்வு (ஸபக்) பாடம்;
4. பழைய பாடம்....

மார்க்கச் சட்டங்கள் & ஒழுக்க முறை :

(100% ஸுன்னத் வல்ஜமாஅத் அகீதா முறைப்படி)
வாரம் ஒரு முறை நடத்தப்படும்.... இன்ஷா அல்லாஹ்!

தொடர்புகளுக்கு : கம்பம் மவ்லவீ **J.S.ஜுபைர் அஹ்மது** ரஹ்மானீ,
முதல்வர் : **மதரஸா அல்-ஜாமிஆ முஹ்ஸினுல் உலூம்,**
சீலப்பாடி விரிவாக்கம், திண்டுக்கல்.
அலைபேசி : 9042867543, 7373071800

ஆகவே லைலத்துல் கத்ர் எனும் இந்த மிக சிறப்பான இரவில் நாம் அல்லாஹ்வை வணங்கி நம்முடைய முந்தைய பாவங்கள் அனைத்திற்கும் மன்னிப்பை வேண்டி அவனிடம் நாம் இறைஞ்ச வேண்டும்.

இந்த ரமளான் மாதத்தில் லைலத்துல் கத்ர் இரவு எப்போது வரும் என்பதை மாதத்தின் இறுதிப் பத்து ஒற்றைப்படை இரவுகளில் தேடி கொள்ளுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'ரமளானின் கடைசிப் பத்து நாள்களில் உள்ள ஒற்றைப்படை இரவுகளில் லைலத்துல் கத்ரைத் தேடுங்கள்!' அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் ஸஹீஹ் (புகாரி 2017)

ஒற்றைப்படை என்பதில் மிக பெரிய தாத்பரியம் இருக்கிறது. அல்லாஹ் ஒற்றைப்படையையே விரும்புகிறான். ஏனெனில் அவன் தனித்தவன். இணை துணை யில்லாதவன். அவன் ஒற்றை யானவன். இந்த தாத்பரியத்தை நமக்கு நபி (ஸல்) அவர்கள் நமக்கு எடுத்துரைக்கிறார்கள்.

"அல்லாஹ் ஒற்றையானவன். ஒற்றைப்படையையே அவன் விரும்பு கிறான்" என்று இறைத் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் ஸஹீஹ் புகாரி 6410

ஆகவே இந்த தாத்பரியத்தின் அடிப்படையில் தான் மகத்துவ மான லைலத்துல் கத்ர் இரவை அல்லாஹ் ஒற்றைப்படை இரவில் அமைத்திருக்கிறான் என்றே கருத தோன்றுகிறது.

மேலும் ரமளானின் கடைசிப் பத்து நாட்களான இருபத்தொன்றா வது இரவில், இருபத்து மூன்றாவது இரவில், இருபத்து ஐந்தாவது இரவில் லைலத்துல் கத்ரை தேடுமாறு நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'ரமளானின் கடைசிப் பத்து நாள்களில் லைலத்துல் கத்ரை தேடுங்கள்! லைலத்துல் கத்ரை இருபத்தொன்றாவது இரவில், இருபத்து மூன்றாவது இரவில், இருபத்து ஐந்தாவது இரவில் தேடுங்கள்!' அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் ஸஹீஹ் புகாரி 2021

இது மட்டும் இல்லாமல் இருபத்தொன்பதாவது இரவிலோ இருபத்து மூன்றாவது இரவிலோ லைலத்துல் கதர் இரவு உள்ளது என்றும் நபி (ஸல்) அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'லைலத்துல் கத்ர் இரவு கடைசிப்பத்து நாள்களில் உள்ளது; அது இருபத்தொன்பதாவது

AL-BASHARATH
HAJ & UMRAH SERVICE

MARCH MONTH UMRAH-2023

First 5 DAYS Ramalan in MAKKAH (23, 24, 25, 26, 27)

Travel Date : 13/03/2023

Return Date : 27/03/2023

Rs :99,000/-

HOLY RAMALAN UMRAH TRIP-2023

Package type	Deperture Date	Day	Return Date	Day	Period
Full Ramalan	23-03-2023	Thursday	23-04-2023	Sunday	30 days
First 15 Days	23-03-2023	Thursday	06-04-2023	Thursday	15 days
Last 15 Days	06-03-2023	Thursday	23-04-2023	Sunday	15 days

Full Ramalan	First 15 Days	Last 15 Days
180,000	125,000	150,000

Holy HAJJ Trip - 2023 Booking On Going. **Rs : 575,000/-**

Al basharath lalpet

Alhaj O.M. Mohamed Suhaibu

Al basharath Tours & Travels

LALPET OFFICE : 1, Quaid-E-Millath Street (opp: Mubarack Masjid), Lalpet - 608 303

CHENNAI OFFICE : 37/77 Angappan Naicken Street, Mannady Chennai - 600 001

9994254304, 9566992919

இரவிலோ இருபத்து மூன்றாவது இரவிலோ உள்ளது!'.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்
(ஸஹீஹ் புகாரி 2022)

லைலத்துல் கத்ர் இரவை பற்றிவிளக்கம்அளிக்கும்வகையில் மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறியதாவது.

ஹள்ரத்உபாதாஇப்னுஸாமித் (ரளி) அவர்கள் அறிவித்தார்கள்.

"லைலத்துல் கத்ர் பற்றி எங்களுக்கு அறிவிப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் புறப்பட்டார்கள். அப்போது இரண்டு முஸ்லிம் கள் சச்சரவு செய்து கொண்டிருந் தனர். நபி (ஸல்) அவர்கள், 'லைலத்துல் கத்ரை உங்களுக்கு அறிவிப்பதற் காக நான் புறப் பட்டேன்; அப்போது இன்னாரும் இன்னாரும் சச்சரவு செய்து கொண்டிருந்தனர். எனவே, அது (பற்றிய விளக்கம்) நீக்கப் பட்டு விட்டது! அது உங்களுக்கு நன்மையாக இருக்கலாம்! எனவே, அதை இருபத்தொன்பதாம் இரவி லும், இருபத்தேழாம் இரவிலும், இரு பத்தைந்தாம் இரவிலும் தேடுங் கள்!' எனக் கூறினார்கள்".

(ஸஹீஹ் புகாரி 2023)

'லைலத்துல் கத்ர்' இரவை பற்றி ஹள்ரத் பிலால் (ரளி) அவர்கள் ஸுனாபிஹீ (ரஹ்) அவர்களுக்கு தெரிவித்த விவரமும் இருக்கிறது.

அபுல்கைர் மர்ஸத் இப்னு அப்தில்லாஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : நான் 'லைலத் துல் கத்ர் (குர்ஆன் அருளப்பட்ட ரம ளான் மாதத்தின் கண்ணியமிக்க இரவு) பற்றி நீங்கள் (மதீனாவில்) ஏதேனும் செவியுற்றீர்களா?' என்று ஸுனாபிஹி அவர்களிடம் கேட்க, அவர், 'ஆம், நபி (ஸல்) அவர்களின் (பள்ளிவாசலின்) தொழுகை அழைப்பாளரான பிலால் (ரளி), 'அது (ரமளான் மாதத்தின்) கடைசிப் பத்து நாள்களில் ஏழாவது இரவில் கிடைக்கும் என்று எனக்குத் தெரி வித்தார்கள்' என்று பதிலளித்தார் கள். ஸஹீஹ் புகாரி 4470

ஸஹாபா பெருமக்களும் 'லைலத்துல் கத்ர்' இரவை பற்றி கனவு கண்டு அதை நபி (ஸல்) அவர்களுக்கு தெரிவித்திருக் கிறார்கள்.

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவித்தார்கள்.

"நபித் தோழர்கள் லைலத் துல் கத்ர் இரவு இருபத்தி ஏழாம் இரவு என்று கனவு கண்டு நபி (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'உங் கள் கனவைப் போல் கனவு கண் டேன். அது கடைசிப் பத்து நாள்களில் தான் அமைந்துள்ளது. லைலத் துல் கத்ர் இரவை அடைய முயல்கிறவர் கடைசிப் பத்தில் தேடட்டும்' என்று கூறினார்கள்".

ஸஹீஹ் புகாரி 1156, 1157 & 1158

லைலத்துல் கத்ர் இரவின் அடை யாளம் என்ன என்பதையும் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக் களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

Regn No. 13/2015

مركز افشاء الاسلام للدعوة والعلوم الدينيات

Estd on. 2010

IFSHAVUL ISLAM TRUST A CENTRE FOR INVITING DHAWAH & EDUCATION

(Recognized by Sunnathwal Jamaath)

நீங்கள் கொடுப்பது உதவி அல்ல; முதலீடாகும்!

கண்ணியமிக்க இஸ்லாத்தின் பொறுப்பாளர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

அறிமுகம்: மனித வாழ்வையே ஊனப்படுத்துகின்ற உயர்வு, தாழ்வு, அறியாமை, வறுமை, சாதிக்கொடுமை, தீண்டாமை இதுபோன்ற நோய்களுக்கெல்லாம் நிரந்தரத் தீர்வாகவும், மாமருந்தாகவும் இருப்பது இஸ்லாம் மார்க்கம் மட்டுமே. இத்தகைய இஸ்லாத்தை இனிய, எளிய முறையில் மதம் மாறிப் போனவர்களிடமும், மாற்று மதத்தவர்களிடமும் எடுத்துக்கூறி விருப்பத்துடன் ஏற்க முன்வருபவர்களை இஸ்லாத்தில் இணைத்து வைக்கின்ற பணியைச் செய்வதற்காகவே கடந்த 15 வருடங்களாக நமது **இஃப்ஷாவுல் இஸ்லாம் மத்ரஸா** செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பங்களிப்புடன் எங்கள் பணிகளில்...

- இதுவரை இஸ்லாத்தை ஏற்றவர்கள் 500 நபர்கள்.
- அஃபிடவிட் 450 நபர்களுக்கு எடுத்துத் தரப்பட்டுள்ளது.
- கத்னா 370 நபர்களுக்குச் செய்து வைக்கப்பட்டுள்ளது.
- 40 நாட்கள் தீனியாத் வகுப்புகளில் 150 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- 250 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளது.
- 175 அரசு கெஜட்டில் பெயர் மாற்றம் செய்து தரப்பட்டுள்ளது.

இப்பணிகள் யாவும் நிரந்தர வருமானங்களும், சந்தாக்களுமின்றி பொருளாதார நெருக்கடியுடன் நடந்து வருகிறது. எனவே இதனை கவனத்தில் கொண்டு தங்களின் ஜகாத், ஸதகா, சந்தா, அன்பளிப்பு மற்றும் நன்கொடைகள் ஆகியவற்றை இம்மத்ரஸாவின் சேவைகளில் முதலீடு செய்தும், மேலான ஆலோசனைகளை வழங்கியும் வல்ல அல்லாஹ்விடம் மாபெரும் கூலியையும், மகத்தான மன்னிப்பையும் நாம் அனைவரும் பெறுவோமாக!

வங்கி கணக்கு விபரம்

IFSHAVUL ISLAM TRUST

Bank: STATE BANK OF INDIA

A/C No. 34989729173

IFSC Code: SBIN0007482

5/6, ANSARI NAGAR, 1st STREET, MAHABOOBPALAYAM, MADURAI-625016. Tamil Nadu, South India.

Website: www.ifshavulislam.org Email: ifshavulislammadrasa@gmail.com

Cell: 97861 42660, 70106 26736

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது :

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் "லைலத்துல் கத்ர்" இரவு பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அவர்கள், "உனைத் தட்டின் பாதித் துண்டைப் போன்று நிலா தோன்றும் இரவே (லைலத்துல் கத்ர்) ஆகும் என்பதை உங்களில் நினைவில் கொள்பவர் யார்?" என்று கூறினார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் : 2177

லைலத்துல் கத்ர் இரவு வரும் அன்றைய நாள் காலையில் சூரியன் சுடரின்றி உதிக்கும் என்று இன்னொரு அடையாளத்தையும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹள்ரத் ஸிர்ரு பின் ஹுபைஷ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் உபை பின் கஅப் (ரளி) அவர்களிடம், "தங்கள் சகோதரர் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் வருடம் முழுவதும் (இரவில்) நின்று வழிபடுபவர் லைலத்துல் கத்ர் இரவை அடைந்துகொள்வார்" என்று கூறுகிறாரே? என்று கேட்டேன். அதற்கு உபை (ரளி) அவர்கள், "இப்னுமஸ்ஊதுக்கு அல்லாஹ் அருள்புரிவானாக! மக்கள் (மற்ற நாட்களில் வழிபாடுகளில் ஈடுபடாமல்) அதை நம்பிக்கையோடு இருந்து விடக் கூடாது என அவர்கள் கருதினார்கள் (போலும்)! லைலத்துல் கத்ர் இரவு ரமளான் மாதத்தின் கடைசிப் பத்தில் இருபத்தேழாவது இரவுதான் என்பதை இப்னு மஸ்ஊத் அறிந்தே உள்ளார்கள்" என்று பதிலளித்தார்கள். பிறகு "அல்லாஹ் நாடினால்" என்று கூறாமல் "அது (ரமளானின்) இருபத்தேழாவது இரவே ஆகும்" என்று சத்தியமிட்டுச் சொன்னார்கள். நான், "அபுல் முன்திரே! எதை வைத்து அவ்வாறு கூறுகிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு நபி உபை (ரளி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் "அன்றைய நாளில் (காலையில்) சூரியன் சுடரின்றி உதிக்கும்" என்று கூறினார்கள். அந்த அடையாளத்தின் மூலமே (அறிந்துகொண்டேன்) என்றார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் : 2175

ரமளான் கடைசி பத்து நாட்களில் நபி (ஸல்) அவர்கள் இல்லறத் தொடர்பை நிறுத்திக் கொண்டு இறை வழிபாட்டில் தீவிரமாக ஈடுபடுவார்கள்.

தங்களின் துணைவியரையும் குடும்பத்தாரையும் விழிக்கச் செய்து இறை வணக்கத்தில் ஈடுபட வைப்பார்கள்.

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவித்தார்கள்.

"(ரமளானின் கடைசிப்) பத்து நாள்கள் வந்துவிட்டால் நபி (ஸல்) அவர்கள் இல்லறத் தொடர்பை நிறுத்திக் கொள்வார்கள்; இரவை (அல்லாஹ்வைத் தொழுது) உயிர்ப்பிப்பார்கள்; (இறைவனை வணங்குவதற்காகத்) தம் குடும்பத்தினரை எழுப்பிவிடுவார்கள்!"

ஸஹீஹ் புகாரி 2024

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது.

"[ரமளான் மாதத்தின்] இறுதிப்பத்து [நாட்கள்] துவங்கி விட்டால், அல்லாஹ்வின் தூதர் நபி [ஸல்] அவர்கள் [வணக்க வழி பாட்டின் மூலம்] இரவுகளுக்கு உயிரூட்டுவார்கள்; [வழிபாட்டில் ஈடுபடுவதற்காக] தம் துணைவி யரையும் விழிக்கச் செய்வார்கள்; [வழக்கத்தை விட அதிகமாக வழி பாட்டில்] அதிகக் கவனம் செலுத்து வார்கள்; தமது கீழாடையை இறுக்கிக் கட்டிக் கொள்வார்கள்".

ஸஹீஹ் முஸ்லிம் : 2184

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது.

"அல்லாஹ்வின் தூதர் [ஸல்] அவர்கள் [வணக்க வழிபாடுகளில்] மற்ற நாட்களில் காட்டாத [அதிக] ஈடுபாட்டை, [ரமளானின்] இறுதிப் பத்து நாட்களில் காட்டுவார்கள்".

ஸஹீஹ் முஸ்லிம் : 2185

ஆகவே நாமும் ரமளான் மாத இறுதி பத்து நாட்களில் இறை வணக்கத்தில் அதிக படியாக ஈடு படுவது மட்டும் அல்லாமல் நம் துணைவியாரை யும் மற்றும் நம் குடும்பத்தாரையும் இரவில் விழிக்கச் செய்து இறை வணக்கத் தில் ஈடுபட வைக்க வேண்டும். இதனால் அந்த மகத்தான இரவின் புனிதமான பாக்கியம் நமக்கும் நம் குடும்பத்தார் அனைவருக்கும் கிடைக்கும்.

அல்லாஹ்வுக்காக ஓர் வேண்டுகோள்!

அல்லாஹ்வின் பேரருளால் புதுக்கோட்டை காமராஜபுரம் "**மஸ்ஜிதே முஹம்மது இப்ராஹீம்**" ஜும்ஆ பள்ளிவாசல் கட்டிட விரிவாக்க பணிகள் மிக வேகமாக நடந்து வருகின்றன. தங்களின் நல்ல பணங்காசுகளும் அந்தக் கட்டிடத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில் இந்த வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படுகிறது. **வாருங்கள்! விரைந்து உங்களின் உதவிகளைத் தாருங்கள்.** அல்லாஹ் தனது உயர்ந்த சொர்க்கத்தை உங்களுக்கு தருவதற்கு காத்திருக்கிறான்.

இப்படிக்கு : **நிர்வாகிகள், "மஸ்ஜித் முஹம்மது இப்ராஹீம்" ஜும்ஆ பள்ளிவாசல்,** காமராஜபுரம் ஒன்பதாவது தெரு, **புதுக்கோட்டை -622 001.**

வங்கி விபரம் : "JUMMA MAZJID KAMARAJAPURAM"
Current Account No : **510101005523881**
UNION BANK OF INDIA IFSC Code : **UBIN0911241**
Micr Code: **622026008** Branch : **PUDUKKOTTAI.**

தலைவர் : ஹாஜி **அப்துல்லாஹ்** - 9715265709
செயலாளர் : ஹாஜி **ஏ.ஆர். முஹம்மது மீரா** - 9443346313
பொருளாளர் : ஜனாப் **பி.எஸ்.எம். முஹம்மது அப்துல்லாஹ்** - 9486265728

இந்த துஆகளை புனித லைலத்துல் கத்ர் இரவில் அதிகமாக ஓதுங்கள்

اَللّٰهُمَّ اِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّىْ ۔

அல்லாஹும்ம இன்னக்க அஃபுவ்வுன் துஹிப்புல் அஃப்வஃபஃபு அன்னீ.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்
நூல் : அல் அத்கார் (பக்கம் : 553), மிஷ்காத், அஹ்மத், திர்மிதீ, இப்னுமாஜா

اَللّٰهُمَّ اِنِّىْ اَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ وَالْمُعَافَاةَ فِى الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ ۔

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)கல் அஃப்வ வல் ஆஃபிய(த்)த வல் முஆஃபாத பித்தீனி வத் துன்யா வல் ஆகிர(த்)தி.

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ اَسْتَغْفِرُ اللّٰهَ اَسْأَلُكَ الْجَنَّةَ وَاَعُوْذُ بِكَ مِنَ النَّارِ

அஷ்ஹது அன்(ல்) லாஇலாஹ இல்லல்லாஹு அஸ்தஃபிருல்லாஹ அஸ்அலு(க்)கல் ஜன்ன(த்)த வ அஊது பி(க்)க மினன் னாரி

اَللّٰهُمَّ اَجِرْنَا مِنَ النَّارِ يَا مُجِيْرُ يَا مُجِيْرُ يَا مُجِيْرُ ۔

அல்லாஹும்ம அஜிர்னா மினன் னாரி யா முஜீரு யா முஜீரு யா முஜீர்.

இஃதிகாஃப் மார்க்கச் சட்டங்கள்

சுன்னத்தான இஃதிகாஃப்

புனித ரமளான் திங்கள் கடைசி பத்து நாட்களில் இஃதிகாஃப் இருப்பது சுன்னத்து, நபி வழியாகும். இருபதாவது நாள் முடியும்போது, சூரியன் மறைந்ததிலிருந்து இதன் நேரம் தொடங்குகிறது. பெருநாள் பிறை பார்க்கப்படும் வரை இதன் நேரம் நீடிக்கிறது.

புனித ரமளான் இறுதிப் பத்தில் மேற்கொள்ளப்படும் இந்த இஃதிகாஃப் சுன்னத்து முஅக்கதா ஆகும். எனினும் ஓர் ஊரிலோ, மஹல்லாவிலோ ஒரு நபர் இஃதிகாஃப் இருந்து விட்டால், மஹல்லா மக்கள் அனைவருடைய தரப்பிலிருந்தும் சுன்னத்து நிறைவேறிவிடும். எல்லா மஹல்லாவிலிருந்தும் ஒருவர் கூட இஃதிகாஃப் இருக்கவில்லையானால், எல்லா மஹல்லாவாசிகளும் சுன்னத்தை விட்ட குற்றத்திற்கு ஆளாகுவர். (ஷாமி)

மஹல்லாவாசிகளின் பொறுப்பு

அந்த மஹல்லாவில் யாரும் இஃதிகாஃபில் உட்காருகிறார்களா இல்லையா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது மஹல்லாவாசிகள் ஒவ்வொரு வர் மீதும் கடமையாகும் என்று இதிலிருந்து தெரிகிறது. அப்படி யாருமே உட்காருவதாகத் தெரியவில்லையானல், எவரையேனும் உட்கார வைக்க முயற்சிக்க வேண்டும். மஹல்லாவாசிகள் எவரும் ஏதேனும் காரணத்தினால் தமது பள்ளியில் இஃதிகாஃபில் அமர முடியாத நிலை இருப்பின், வேறு மஹல்லாவிலிருந்தேனும் ஒருவராவது அமர முயற்சி மேற்கொள்ள வேண்டும். வேறு மஹல்லாவாசி இங்கே அமர்ந்தாலும் இந்த மஹல்லாவாசிகளின் சுன்னத்து இன்ஷா அல்லாஹ் நிறைவேறி விடும்.

- பதாவா- தாருல் உலூம் தேவ்பந்த 6: 512

இஃதிகாஃபுடைய முக்கிய நிபந்தனை என்னவென்றால், இஃதிகாஃப் இருப்பவர் இஃதிகாஃபுடைய காலத்தில் பள்ளியின் எல்லையிலேயே இருக்க வேண்டும். ஏதேனும் அவசியத் தேவையை (அதன் விளக்கம் பின்னால் வரும்) முன்னிட்டுத் தவிர, ஒரு வினாடி கூட பள்ளியின் எல்லைக்கு வெளியே செல்லலாகாது. அவ்வாறு சென்றால் இஃதிகாஃப் முறிந்து விடும்.

மஸ்ஜிதின் எல்லை

பெரும்பாலோர் மஸ்ஜிதின் எல்லை எது என்பது பற்றி அறியாத காரணத்தினால், இஃதிகாஃபை வீணாக்கிக் கொள்கின்றனர். எனவே, பள்ளியின் எல்லை எது என்பது பற்றி நன்கு அறிந்து கொள்க. பொதுவான வழக்கில்

பள்ளியின் காம்பவுண்டு முழுவதையும் மஸ்ஜிது என்ற வரைவுக்குள் வர வேண்டியதில்லை, மாறாக, வக்பு செய்தவர் எந்தப் பகுதியை மஸ்ஜிது என முடிவு செய்த வக்பு செய்தாரோ அந்தப் பகுதியே சட்டப்படி மஸ்ஜிதாகும்.

அதாவது பூமியின் எந்தப் பகுதியிலும் தொழலாம் என்பது வேறு விஷயம், மஸ்ஜிதின் தேவைகளுக்காக வக்பு செய்யப்படுவது வேறு விஷயம். பள்ளியைக் கட்டக் கூடியவர் எந்தப் பகுதியை மஸ்ஜிது என முடிவு செய்கிறாரோ அந்தப் பகுதியே சட்டப்படி மஸ்ஜிதாகக் கருதப்படும். அந்தப் பகுதியில் தொழுவதைத் தவிர வேறு எந்த நோக்கமும் இருக்காது. எனினும், அநேகமாக எல்லா பள்ளிவாசல்களிலும் சில இடங்கள் உண்டு. அந்த இடங்களை சட்டப்படி மஸ்ஜிது என்று கூறமுடியாது. ஆயினும், பள்ளியின் அவசியத் தேவைகளுக்காக வேண்டி அவை வக்பாயிருக்கும். ஒளு செய்வதற்கான நீர்த்தொட்டி, கழிப்பிடம் ஜனாஸா தொழுகைக்கான தனியிடம், இமாம் அறை மற்றும் அடக்கஸ்தலம் போன்ற இடங்களை உதாரணத்திற்குக் கூறலாம்.

இந்த இடங்களுக்கு மஸ்ஜிதின் விதிமுறைகள் பொருந்தாது. இதனால்தான் இவ்விடங்களில் குளிக்க வேண்டிய கடமையுள்ளோர் (ஜனாபத்) கூட செல்வது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அசல் மஸ்ஜிதில் இவர்கள் பிரவேசிப்பது விலக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய அவசியத் தேவைகளுக்காகக் கட்டப்பட்டுள்ள இடங்களில் தேவையின்றி இஃதிகாஃபில் இருப்பவர் செல்லலாகாது. அவ்வாறு தேவையே இல்லாமல் ஒரு நிமிட நேரம் இவ்விடங்களுக்கு அவர் சென்று விடுவாரேயானால், அவரது இஃதிகாஃப் முறிந்து விடும்.

சில பள்ளிகளில் இந்த அவசியத் தேவைகளுக்கான இடம் மஸ்ஜிதை விட்டுப் பிரிந்து தனியாக இருக்கும். அந்த இடத்தை அறிந்து கொள்வதில் சிரமம் இருக்காது. இன்னும் சில இடங்களில் இந்தப் பகுதி மஸ்ஜிதோடு இணைந்திருக்கும், அதனை அனைவராலும் பிரித்தறிய முடியாது. பள்ளியைக் கட்டியவர் பார்த்து இது மஸ்ஜிது அல்ல என்று கூறுகிற வரை அந்த இடத்தைப் பற்றிய முடிவைத் தெரிந்து கொள்ள முடியாது.

ஆகவே ஒரு பள்ளியில் ஒருவர் இஃதிகாஃப் இருக்க நாடினால், முதல் வேலையாக பள்ளியை நிறுவியர் அல்லது பள்ளியின் முத்தவல்லியிடம் மஸ்ஜிதுடைய சரியான எல்லையைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். பள்ளி நிர்வாகமும் மஸ்ஜிதின் எல்லையைத் தெளிவாகவும், துல்லியமாகவும் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் மஸ்ஜிதின் எல்லையை விவரிக்கும் வகையில் வரைபடம் மாட்டி வைப்பது மிகவும் நன்று அல்லது குறைந்தபட்சம் 20-வது நாள் இஃதிகாஃப் இருப்பவர்கள் கூடும்

பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மானிர்ரஹீம்
எல்லாப் புகழும் இறைவனுக்கே!

இஸ்லாமிய மணமகன், மணமகள் தகவல் மையம்

35 வயதுக்கு மேற்பட்ட மணமகன், மணமகள் தகவல்களை பதிவிடவும், தகவல்களை தெரிந்து கொள்ளவும் இந்த சேவை துவங்கப்பட்டுள்ளது

35plusnikkah

35 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் சுய விவரக் குறிப்புடன் 35plusnikkah@gmail.com என்ற மெயிலில் பதிவு செய்யவும்.

மணமகன் – மணமகள் தரப்பினர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

உங்களின் மெயில் வந்தவுடன் உங்கள் பகுதி ஜமாஅத்தை விசாரித்தபின் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளப்படும்.

பதிவு செய்ய கட்டணம் இல்லை.

தொடர்புக்கு :

35plusnikkah@gmail.com

http://www.35plusnikkah.com

8148463579

தவறான தகவல்களுடனும், தவறான நோக்கத்துடனும் பதிவிட வேண்டாம். உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

போது அவர்களுக்கு மஸ்ஜிது எல்லையை விளக்கிச் சொல்லிவிட வேண்டும். எல்லையை அறிந்த பிறகு அவசியத் தேவைகளுக்கின்றி அந்த எல்லையைக் கடந்து செல்வதிலிருந்து இஃதி காஃப் இருப்பவர் தவிர்ந்து கொள்ள வேண்டும். இல்லை யேல் இஃதிகாஃப் முறிந்துவிடும்.

அவசியத் தேவைகளுக்காக வெளியேறுதல்

மார்க்கச் சட்டப்படி அவசியத் தேவைகள் என எவை நிர்ணயிக்கப் பட்டுள்ளனவோ அவற்றுக் காக மஸ்ஜிதின் எல்லையை விட்டு வெளியேறலாம். அவ்வாறு வெளி யேறுவதால் இஃதிகாஃப் பாதிக்கப் படாது அந்த தேவைகள் யாவை?

1.மலம், ஜலம் கழிக்க.

2.பள்ளிக்குள்ளே குளிக்க முடி யாத நிலையில் குளிக்கும் நிலை ஏற்படும்போது.

3.பள்ளிக்குள்ளேயே ஒளு செய்ய வசதியில்லாத நிலை யில், ஒளு செய்வதற்காக.

4.உணவு கொண்டு வருவ தற்கு ஒருவரும் இல்லாத நிலையில் உணவுக்காக.

5.முஅத்தின் பாங்கு சொல் வதற்காக வெளியேற வேண்டிய நிலையில்.

6. இஃதிகாஃப்இருக்கும்பள்ளி யில் ஜும்ஆ நடைபெறாத போது ஜும்ஆவிற்காக.

7. பள்ளி இடிந்து விழும் நிலை யில் இருக்கும்போது, வேறு பள்ளிக்குச் செல்வதற்காக.

இந்த அவசியத் தேவை களைத் தவிர மற்ற நோக்கத் திற்காக இஃதிகாஃப் இருப்பவர் மஸ்ஜிதை விட்டு வெளியேறக் கூடாது. இனி இந்த தேவைகள் பற்றிய சில முக்கியமான விளக்கங்களைப் பார்ப்போம்.

காலைக் கடன்

1.காலைக்கடன்களான சிறுநீர், மலம் கழிப்பதற்காகப் பள்ளியின் எல்லையை விட்டு வெளியே செல்லலாம். சிறுநீர் கழிப்பதற்காக அருகில் உள்ள இடத்திற்குச் சென்று வரலாம். பள்ளியோடு ஒட்டி கழிப்பிடம் இருப்பின், அங்கேயே தேவை களைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். வெளியிடத்திற்கு செல்வது சரியல்ல எனினும். எவ ருக்கேனும் தன் வீட்டில் தவிர வேறு இடங்களில் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என் றாலோ அல்லது வேறு இடங் களில் சிரமம் ஏற்படும் என்றாலோ அவர் இதற்காக வீட்டிற்குச் செல் வது கூடும். இந்த நிர்ப்பந்தம் இல்லாதவர்கள் பள்ளியின் கழிப் பிடத்தையே பயன்படுத்த வேண் டும், மீறினால் அவருடைய இஃதி காஃப் முறிந்து விடும் என்பது சில அறிஞர்களின் கருத்தாகும்.

2.பள்ளிகழிப்பிடவசதிஇல்லை அல்லது இருந்தும் அதைப் பயன் படுத்துவதில் சிரமம் என்றால் வீட்டிற்குச் செல்லலாம், வீடு எவ் வளவுதூரத்தில்இருப்பினும்சரியே.

3. ஒருவருக்கு இரண்டு வீடு கள் இருப்பின், பக்கத்தில் உள்ள

மதரஸா-யே- நிஸ்வான் ஆயிஷா (ரளி) தக்வா இஸ்லாமியக் கல்வி அறக்கட்டளை

(இந்திய அறக்கட்டளை சட்டம் 1882-ன் கீழ் பதிவு செய்யப்பட்டது) பதிவு எண் 131/2014

No.15, அப்துல் ரஹ்மான் தெரு, கோரிப்பாளையம், மதுரை – 625002.

செல் : 9710240534; 9344816871

தக்வா அறக்கட்டளைக்கு உதவிக்கரம் நீட்டுவீர்!

கண்ணியமான நல்லடியார்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

அல்லாஹ்வின் தனிப்பெரும் கிருபையைக் கொண்டு 19 வருடங்களாக **பெண்கள் ஆலிமா மதரஸா** நடந்து வருகிறது. இதுவரை 95 மாணவிகள் ஆலிமாவாக உருவாக்கப்பட்டுள்ளார்கள்.

- **எமது தக்வா அறக்கட்டளை மூலம் இலவசமாக தையற்கல்வி கற்பிக்கப்படுகிறது.**
- **எமது அறக்கட்டளை மூலம் ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி செய்து வருகிறோம்.**
- **ஏழை மக்களுக்கு ரமளான் மாதத்தில் உணவு, உடை வழங்கி வருகிறோம்.**
- **எமது அறக்கட்டளை மூலம் சிறுமி, சிறார்களுக்கு தீனிய்யாத் அரபி கற்பிக்கப்படுகிறது.**

இன்ஷா அல்லாஹ் இனிவரும் வருடங்களில் கம்ப்யூட்டர் போன்ற தொழிற்கல்வி ஆரம்பிக்க முயற்சிக்கப்படுகிறது. ஏழை மாணவிகள், ஏழை மக்கள் உயர்வுக்கு நீங்கள் வழங்கும் நன்கொடையே மூலதனம். உங்கள் நன்கொடையை **THAQUA ISLAMIC EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு DD/செக் மூலம் மேலே கூறிய முகவரிக்கு அனுப்பி புனித ரமளான் மாதத்தில் உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எமது அறக்கட்டளை வருமானவரி மூலம் 80 (G) சான்றிதழ் பெற்றுள்ளது. எனவே நன்கொடை வழங்குபவர்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்படும். எமது 80 (G) பதிவு எண் : AACTT4674KF20211

OUR BANK A/C DETAILS : Name of the Bank : **Union Bank of India**

Branch : Narimedu, Madurai – 625002.

A/C No.: **552502010008149** IFSC Code : **UBIN0555258**

இன்ஷா அல்லாஹ் பேங்கில் பணம் செலுத்தியதும் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். எமது அறக்கட்டளை சார்பாக வசூல் செய்ய எப்போதும் யாரையும் நியமிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வீட்டிற்கே அவர் செல்ல வேண்டும். அவர் தூரத்தில் உள்ள வீட்டிற்குச் சென்றால் சிலரது கருத்துப்படி இஃதிகாஃப் முறிந்து விடும். (ஷாமி ஆலம்கீரி)

4. பள்ளியின் கழிப்பிடம் காலியாக இல்லாதபோது எதிர் பார்த்து நிற்பது கூடும். எனினும், தேவை முடிந்தவுடன் ஒரு வினாடி கூட நிற்பது கூடாது.

5. கழிப்பிடத்திற்குச் செல் லும் போதோ சென்று திரும்பும் போதோ வழியில் ஸலாம் சொல்வதும், ஸலாத்திற்குப் பதிலளிப்பதும் அவசியமான சுருக்கமான விஷயங்களைப் பேசுவதும் கூடும். ஆனால், அதற்காக நின்று தாமதித்துக் கொண்டிருக்கலாகாது.

6. கழிப்பிடத்திற்குச செல்கையில் அங்கிருந்து திரும்புகையில் வேக வேகமாக நடக்க வேண்டும் என்பது அவசியமல்ல; மெல்ல நடக்கலாம் (ஆலம்கீரி)

7. காலைக் கடனை நிறை வேற்றச் செல்லும்போது, யாரும் நிறுத்தினால் அவருடன் நின்று பேசிக் கொண்டிருக்கலாகாது. மாறாக, நடந்து கொண்டேதான் இஃதிகாஃபில் இருப்பதாகவும் நின்று பேசிக் கொண்டிருக்க இயலாது என்றும் தெளிவுபடுத்தி விட வேண்டும். எவரேனும் நிறுத்தினார்கள் என்று சிறிது நேரம் நின்று கொண்டிருந்தாலும், இஃதிகாஃப் முறிந்து விடும். கடன்காரர் நிறுத்திப் பேசினால் அவசியத்தை முன்னிட்டு அது கூடும் என்பதே சரியான கருத்தாகும். (மப்ஸூத் ஸர்கஸி)

8. கழிப்பிடம் செல்லும் போது பீடி, சிகரெட் குடிப்பதற்காக என்று தாமதிப்பது கூடாது.

9. காலைக் கடனை நிறை வேற்ற வீட்டுக்குப் போன இடத்தில் அப்படியே ஒளு செய்வதுகூடும்.

முஃதகிபின் குளியல்

முஃதகிப் (இஃதிகாஃபில் இருப்பவர்) 'ஜனாபத்' என்னும் கட்டாய குளியலுக்காக பள்ளியை விட்டு வெளியே செல்லலாம். அதிலேயும் கூட பள்ளியிலேயே குளிக்க வசதி யிருப்பின் வெளியே செல்லலாகாது. பள்ளியில் வசதியில்லை அல்லது பள்ளியில் குளிப்பது மிகவும் கஷ்டம் என்றிருப்பின் ஜனாபத் குளியலுக்காக வெளியில் செல்வது கூடும். (பதஹுல் கதீர்)

ஜனாபத் என்னும் கட்டாயக் குளியலுக்காக தவிர, வேறு குளியலுக்காகப் பள்ளியை விட்டு வெளியே போவது கூடாது. ஜும்ஆவின் குளியல் அல்லது குளிர்ச்சிக்காகக் குளிப்பது என்ற நோக்கத்திற்காகப் பள்ளியை விட்டு வெளியேறினால் இஃதிகாஃப் முறிந்து விடும். இத்தகைய குளியல்களை பள்ளியிலேயே பள்ளியின் ஓர் ஓரத்திலேயே முடித்துக் கொள்ளலாம்.

முஃதகிபின் ஒளு

1. மஸ்ஜிதின் எல்லைக் குள்ளேயே ஒளு செய்யவும். அந்த தண்ணீர் பள்ளிக்கு வெளியே செல்லவும் வசதி செய்யப்பட்டி

ஈகை பெருநாள் வாழ்த்துக்கள்!

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!!

NIZAM DARBAR

NIZAM BETELNUT

நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

S.A.சபியுல்லா & கோ

தபால் பெட்டி எண் : 14,

புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

ருப்பின் அவ்வாறே செய்ய வேண்டும். அப்போது பள்ளியின் எல்லைக்கு வெளியே ஒளுவுக்காக செல்லல் கூடாது.

2. பள்ளியின் எல்லைக்குள் ஒளு செய்ய வசதி இல்லை என்றாலோ, பள்ளியை ஒட்டி நீர் தொட்டி இல்லை என்றாலோ அருகிலுள்ள ஏதேனும் இடத்திற்குச் சென்று ஒளு செய்து விட்டு வரலாம் (ஷாமி) ஃபர்ளான தொழுகைக்கும், நஃபில் தொழுகைக்காகவும் இது பொருந்தும்.

3. ஒளு செய்வதற்காக வெளியே செல்வது அனுமதிக்கப்பட்டுள்ள சமயங்களில் ஒளுவுடன் மிஸ்வாக் செய்தல், சோப்பால் உறுப்புகளைக் கழுவுதல் ஆகியன கூடும். இருப்பினும், ஒளு முடிந்தவுடன் ஒரு வினாடி கூட தாமதிக்காமல் பள்ளிக்குத் திரும்பி விட வேண்டும். அந்த இடத்திலோ வழியிலோ தாமதிப்பது கூடாது.

உணவுத் தேவை

இஃதிகாஃபில் இருப்பவருக்காக உணவு, நீர் கொண்டு வர யாரும் ஆள் இருந்தால் அவர் உணவுத் தேவைக்காக என்று பள்ளியை விட்டு வெளியில் செல்வது கூடாது. ஆள் வசதி இல்லாத போது உணவு கொண்டு வருவதற்காக இஃதிகாஃபில் இருப்பவரே வெளியே போகலாம் (பஹ்ரு ராயிக்) எனினும் உணவை பள்ளிக்குக் கொண்டு வந்தே சாப்பிட வேண்டும்.

(கிஃபாயதுல் முப்தி)

இஃதிகாஃப் முறிவு

கீழ்க்கண்ட செயல்களால் இஃதிகாஃப் முறிந்துவிடும்.

1. மேலே கூறப்பட்ட அவசியத் தேவைகளுக்காகத் தவிர மற்ற நோக்கங்களுக்காகப் பள்ளியின் எல்லைக்கு வெளியே செல்வது, அது ஒரு நிமிடமாக இருந்தாலும் இஃதிகாஃப் முறிந்து விடும். (ஹிதாயா)

2. அவசியத் தேவைகளுக்காகப் பள்ளியின் எல்லைக்கு வெளியே சென்றார் எனினும் தேவை முடிந்த பின் ஒரு விநாடி வெளியே தாமதித்தாலும் அவருடைய இஃதிகாஃப் முறிந்துவிடும்.

3. வேலையின்றி பள்ளிக்கு வெளியே செல்வது அது வேண்டுமென்றே சென்றாலும் மறதியாகச் சென்றாலும் தவறுதலாகச் சென்றாலும் எப்படியானாலும் இஃதிகாஃபை முறித்த பாவத்திற்கு இலக்காகமாட்டார் ஆனால் இஃதிகாஃப் முறிந்தது முறிந்ததுதான். (ஷாமி)

4. பள்ளிக்கு வெளியே அதாவது பள்ளி வளாகத்திற்குள் ஓர் இடத்திற்கு சென்றார். அது பள்ளியின் எல்லைக்கு உட்பட்டது என்று எண்ணிக் கொண்டார். உண்மையில் அந்த இடம் எல்லைக்கு வெளியே இருந்தது. அப்போதும் அவருடைய இஃதிகாஃப் முறிந்து விடும். இதனால்தான் ஆரம்பத்திலேயே பள்ளியின் எல்லையைக் கேட்டறிந்து கொள்ள வேண்டும் என்றோம்.

5. இஃதிகாஃபிற்கு நோன்பு வைத்திருப்பது நிபந்தனையாகும். எனவே, நோன்பு இடையிலேயே முறிந்து விடின் இஃதிகாஃபும் முறிந்துவிடும். அதுவேண்டுமென்றே நோன்பு முறிக்கப்பட்டிருந்தாலும் அல்லது இடையூறின் காரணத்தினால் நோன்பை முறித்திருந்தாலும் சரியே; எப்படியானாலும் நோன்பு முறிந்தால் இஃதிகாஃபும் முறிந்து விடும்.

6. உடலுறவு கொள்வதாலும் இஃதிகாஃப் முறிந்து விடும். தெரிந்து கொண்டோ - மறந்து விட்டோ, பகலிலோ - இரவிலோ பள்ளியிலோ - வெளியிலோ உடலுறவால் விந்து வெளிப்பட்டாலோ - வெளிப்படாவிட்டாலோ எப்படியானாலும் உடலுறவால் இஃதிகாஃப் முறிந்து விடும். (ஹிதாயா)

7. இஃதிகாஃப் இருக்கையில் மனைவியை முத்தமிடுவதும் அணைப்பதும் கூடாது. அவ்வாறு செய்ததால் விந்து வெளிப்பட்டுவிடின் இஃதிகாஃப் முறிந்து விடும் இல்லையேல் முறியாது. (ஹிதாயா)

இஃதிகாஃபை முறிப்பது எப்போது கூடும்?

கீழ்க்கண்ட காரணங்களுக்காக இஃதிகாஃபை கைவிடுவது கூடும்.

இஃதிகாஃப் இருந்து கொண்டிருக்கும்போது நோய் கண்டது. அந்த நோய்க்கு பள்ளியைவிட்டு வெளியேறா

ஈத் முபாரக்!

கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

சிறப்பு சிகிச்சைகள் :

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், புதுக்கோட்டை – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com

மல் சிகிச்சை செய்ய முடியாது என்றிருப்பின் இஃதிகாஃபை கைவிடுவது கூடும். (ஷாமி)

நீரில் மூழ்கிக் கொண்டிருக்கிற அல்லது தீயில் எரிந்து கொண்டிருக்கிற ஒருவரைக் காப்பாற்ற அல்லது தீயை அணைக்க இஃதிகாஃபைக் கைவிட்டு வெளியே போகலாம். (ஷாமி)

தாய், தந்தை, மனைவி, மக்கள் ஆகியோரின் கடுமையான நோயின் காரணத்தினால் இஃதிகாஃபை விட்டு வெளியே வரலாம்.

எவரேனும் இஃதிகாஃப் இருப்பவரை வலுக்கட்டாயமாக பள்ளியை விட்டு வெளியே கொண்டு வந்தால் அப்போதும் இஃதிகாஃபைக் கைவிட்டு வெளியேறலாம். அரசிடமிருந்து வருகிற பிடிவாரண்டு போல (ஷாமி)

ஏதேனும் ஜனாஸா வந்தது தொழ வைப்பதற்கு ஒருவரும் இல்லை. இந்நிலையில் ஜனாஸா தொழவைப்பதற்காக பள்ளியை விட்டு வெளியேறலாம்.

(பதஹுல் கதீர்)

மேற்சொன்ன எல்லா நிலைகளிலும் பள்ளியிலிருந்து வெளியே போவதால் பாவமில்லை. எனினும் இஃதிகாஃப் முறிந்து போகும். (பதஹுல் கதீர்)

இஃதிகாஃப் முறிந்தால் என்ன செய்ய வேண்டும்?

மேற்குறிப்பிட்டபடி இஃதிகாஃப் முறிந்து விடின், எந்த நாளின் இஃதிகாஃப் முறிந்ததோ அந்த நாளின் இஃதிகாஃபை மட்டும் களா செய்வது கடமையாகும், பத்து நாள்களின் இஃதிகாஃபையும் களா செய்ய வேண்டியதில்லை. (ஷாமி)

அந்த ஒரு நாள் இஃதிகாஃபை களா செய்யும் முறையாவது:-

அதே ரமளானில் நேரம் கிடைப்பின், ஏதேனும் ஒரு நாளில் சூரியன் மறைந்தது முதல் அடுத்த நாள் சூரியன் மறையும் வரை களாவின் நிய்யத்து செய்து இஃதிகாஃப் இருக்க வேண்டும். அந்த ரமளானில் அவகாசம் இல்லையேல், ரமளான் அல்லாத நாள்களில் ஒன்றிலே நோன்பு வைத்துக் கொண்டு ஒரு நாள் இஃதிகாஃப் இருக்கலாம். அடுத்த ரமளானில் களா செய்தாலும் கூடும். ஆனாலும் அடுத்த ஆண்டு வரை உயிர் வாழ்வோம் என்ற உறுதி இல்லாத காரணத்தினால் விரைவாக களா செய்துவிட வேண்டும்.

இஃதிகாஃப் முறிந்து போகும் சமயங்களில் சிறப்பு என்னவென்றால், கடைசிப் பத்து முடியும் வரை இஃதிகாஃபைத் தொடர்வது தான் அப்படி இஃதிகாஃப் முறிந்தவுடன் வெளியேறி விடுவதும் கூடும். அல்லது அந்த ஒரு நாள் மட்டும் வெளியே சென்று விட்டு அடுத்த நாள் முதல் நபில் நிய்யத்தில் இஃதிகாஃபை ஆரம்பிக்கலாம்.

இஃதிகாஃபில் அனுமதிக்கப்பட்ட செயல்கள்

இஃதிகாஃப் இருக்கும் போது கீழ்க்கண்ட செயல்கள் எந்தவிதத்

இம்தாதீ டிரஸ்ட் நடத்தும்
அல்-ஜாமிவுல் அஸ்ஹர் அரபிக் கல்லூரி

85/3, M.P.H.காம்ப்ளக்ஸ், **வள்ளியூர்.**

அலுவலகம் : 1–7/1, இம்தாதி நகர் 6வது தெரு, **ஏர்வாடி** - 627103. நெல்லை மாவட்டம்.

இம்தாதீ டிரஸ்ட் மூலம் நான்கு ஆண்டுகளாக நடத்தப்படுகின்ற அரபிக் கல்லூரி முதலாவது ஆண்டில் 18 மாணவர்களுக்கு பாழில் அஸ்ஹரி பட்டமும், ஒருவருக்கு ஹாஃபிழ் பட்டமும் ஏர்வாடி ஆடிட்டோரியத்திலும், இரண்டாம் ஆண்டு 15 மாணவர்களுக்கு வள்ளியூர் ஆடிட்டோரியத்திலும், 3வது, 4வது ஆண்டு சேர்த்து 40 மாணவர்களுக்கு வள்ளியூர் ஆடிட்டோரியத்திலும் பாழில் அஸ்ஹரி பட்டம் 2023 மார்ச் 11–ம் தேதி சிறப்பாக வழங்கினோம்.

கட்டிட வாடகை 13 ஆயிரம்; மின் கட்டணம் ஏறக்குறைய ஏழாயிரம்; ஒரு மாணவருக்கு குறைந்த கட்டணத்தில் 80 ரூ வீதம் மாதம் 2400 உணவு வகைக்கு சம்பளத்துடன் மாதம் ஒரு இலட்சம் தேவைப்படுகிறது. மாணவர்களிடம் எந்தக் கட்டணமும் பெறாமல் செல்வச் சீமான்களான மனம் படைத்தவர்கள் வழங்கி வரும் சந்தா, நன்கொடை, நேர்ச்சை, ஹதியா, ஸதக்கா, ஜகாத் ஆகியவற்றை வைத்து சிரமத்துடன் நடத்தி வருகிறோம்.

5வது வருடத்திற்கு 2023–24 66 மாணவர்களின் விண்ணப்பங்கள் வந்துள்ளன. செலவினத்தைக் கவனித்து 25 மாணவர்களைவிட அதிகமாகச் சேர்க்க முடியவில்லை. பிப்ரவரி 8–ம் தேதி 66 மாணவர்களையும் நேரில் அழைத்து நுழைவுத் தேர்வு நடத்தினோம். ரமளான் விடுமுறைக்கு பின் ஷவ்வால் 15 (மே 6–ம் தேதி) 5வது வருட பாடங்கள் தொடங்கப்படவுள்ளன. தொடர்ந்து வாடகை கட்டிடத்தில் நடத்துவது சிரமமாக இருப்பதால் கட்டாயம் சொந்த இடமும், கட்டிடமும் தேவைப்படுகிறது. மனம் படைத்தவர்கள் முன் வருவார்களேயானால் பள்ளிக் கட்டிக் கொடுப்பதை விட மார்க்கக் கல்விக்கு உதவி புரிவது அதிக நன்மை பயக்கக்கூடியது.

தாங்கள் தரும் சிறிய தொகையும், முறையாக செலவழிக்கப்பட்டு வரவு, செலவுகளை திறந்த புத்தகமாக வைத்துள்ளோம். ரமளானில் உங்களுடைய ஜகாத், ஹதியாக்களை அதிகமாக எங்கள் கல்லூரியின் **வங்கிக் கணக்கில்** அல்லது **கூகுள் பே நம்பரில்** போடவும் அல்லது எங்களின் வசூலகர் சுத்தமல்லி K.M.A. நகர் ஷேக் சிக்கந்தரிடம் வழங்கி அல்லாஹ்வின் பேரருளைப் பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மாணவர் ஒருவருக்கு மாதம் உணவுக்கு ரூ.2400/– 25 மாணவர்களுக்கு தினசரி உணவு வகைக்கு ரூபாய் 2,000/– தாங்கள் உங்களின் பங்களிப்பிற்கு இதில் பொறுப்பேற்று மாணவர்களின் வாராந்திர துஆவைப் பெறும்படி வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம். உங்களின் நாட்டம், தேட்டங்களைத் தெரிவித்தால் விசேஷ துஆவிற்கு ஏற்பாடு செய்யப்படும்.

தொடர்பு முகவரி : மவ்லானா 'அஸ்ரபுல் உலமா' அல்ஹாஜ் **P.அபுல்கலாம் ஆலிம் இம்தாதி ஹள்ரத்,** நிறுவனர் & தலைவர், இம்தாதீ டிரஸ்ட், முதல்வர் A.J.A.அரபிக் கல்லூரி,

Google Pay : **9865339670**

Bank Details :

AL-JAMIUL AZHAR ARABIC COLLEGE A/c No.1054101030540
CANARA BANK, ERUVADI BRANCH, IFSC CODE : CNRB0001054
MICRO CODE : 627015026

குறிப்பு : வங்கி மூலம் பணம் அனுப்புபவர்கள் அல்லது **Google Pay** மூலம் அனுப்புபவர்கள் தொலைபேசி மூலம் அல்லது மேலேயுள்ள நம்பரில் வாட்ஸப் மூலம் முகவரி தெரிவிக்கவும். இரசீது போட்டு அனுப்பப்படும்.

தடையுமின்றி செய்து கொள்ளலாம்.

* உண்ணுதல், பருகுதல்
* உறங்குதல்
* அவசியமான கொடுக்கல் வாங்கல் செய்தல். ஆனால் வியாபாரப் பொருளைப் பள்ளிக்கு கொண்டு வருதல் கூடாது. மேலும் வாழ்க்கைத் தேவைகளுக்கான கொடுக்கல் வாங்கலாக இருக்க வேண்டும். எப்படியாயினும் மஸ்ஜிதை வியாபாரத் தலமாக்கு வது கூடாது. (காழீகான்)
* முடிதிருத்தம் செய்து கொள்ளல். ஆனால் முடி பள்ளியில் விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
* பேசுதல், எனினும், தேவையை விட அதிகமாகப் பேசுவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். (ஷாமி)
* திருமணம் போன்ற ஒப்பந்தங்கள் செய்தல்.
* துணிமாற்றுதல், நறுமணம் பூசுதல், தலைக்கு எண்ணெய் தேய்த்தல் (குலாசதுல்பதாவா)
* பள்ளியில் வைத்து ஏதேனும் நோயாளியைக் கவனித்தல், மருந்துச் சீட்டு கொடுத்தல். மருந்து சொல்லுதல். (பதாவா தாருல் உலூம்)
* திருக்குர்ஆன் மற்றும் மார்க்க விளக்கம் அளித்தல் (ஷாமி)
* ஆடை சலவை செய்தல், ஆடை தைத்தல், (இப்னு அபீ ஷைபா) ஆக பள்ளி யில் துவைத்தால் கழிவு நீர் பள்ளியில் விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இஃதிகாஃபில் மக்ரூஹ்கள்

இஃதிகாஃப் இருக்கையில் கீழ்க்கண்ட செயல்கள் மக்ரூஹ் (அருவருக்கத் தக்கது) ஆகும்.

1. அறவே எந்தப் பேச்சும் பேசாமல் மௌனமாக இருத்தல். ஏனெனில் முழுக்க, முழுக்க மௌனமாக (மௌன விரதம்) இருப்பது மார்க்கத்தில் ஒரு வழிபாடு ஆகாது. அவ்வாறு மௌன விரதம் இருப்பதை வழிபாடாகச் செய்தால் அது பித்அத்தாகும். ஆக தேவை ஏற்படும் போது பேசாமல் இருக்கலாகாது.

2. அதே நேரத்தில் தேவையற்ற பேச்சுகளை பேசிக் கொண்டிருப்பதும் மக்ரூஹ் ஆகும். தேவைப்படும் போது தேவைக்கேற்ப பேசிக் கொள்ளலாம். இருப்பினும் மஸ்ஜிதைக் கண்ட பேச்சு பேசுவதற்கான இடமாக்கிக் கொள்ளக் கூடாது. (மின்ஹத்துல் காலிக்)

3. வியாபாரப் பொருள்களைப் பள்ளியில் கொண்டு வந்து வைத்து விற்பனை செய்வதும் மக்ரூஹாகும்.

4. இஃதிகாஃப் இருப்பதற்காக பள்ளியில் அதிக இடத்தை அடைத்துக் கொண்டு அடுத்தவர்களுக்கு இடையூறு செய்வது.

5. கூலிக்கு எழுதுவது, துணி தைப்பது, படித்துக் கொடுப்பதும் மக்ரூஹாகும்.

உணவில் கவனம்

மவ்லவீ மு.முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி

كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ

"நாம் உங்களுக்கு அளித்துள்ள தூய்மையான உண்பொருட்களை உண்ணுங்கள்." - அல்குர்ஆன் (20 : 81)

நோன்புக் காலம் முடிந்த பிறகு நம்முடைய உடல் ஆரோக்கியத்தில் மாற்றங்கள் ஏற்படலாம். நமது வயிறு ஒரு மாத காலம் பகலில் பட்டினி கிடந்துள்ளது. எனவே, கனமான உணவுகளை அதிகமாக உட்கொண்டால் ஆரோக்கியக் கேடு ஏற்படக் கூடும். இந்நேரத்தில் நமக்கு உணவு விஷயத்தில் அதிக அளவில் கவனம் தேவை. உணவு மனிதனை வாழ வைக்கும் அல்லது சாகடிக்கும்.

உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துகளும் உடல் இயக்கத்திற்குத் தேவையான ஆற்றலும் உணவில் இருந்தே கிடைக்கின்றன. பொதுவாக உயிரினங்களின் வாழ்க்கையில், குறிப்பாக மனிதனின் வாழ்க்கையில் உணவின் பங்கு மிகவும் இன்றியமையாதது.

உணவு இரண்டு வகையான மூலங்களிலிருந்து பெறப்படுகிறது. 1.விலங்குகள் மூலம் 2.தாவரங்கள் மூலம். மரம், செடி, கொடி உள்ளிட்ட தாவர வகைகளில் இருந்து பெறப்படுகின்ற தானியங்கள், பயிறுகள், எண்ணெய், காய்கறிகள், கீரைகள், கிழங்குகள் ஆகியவை தாவர உணவுகளாகும். இது மரக்கறி உணவு (Vegetarian) எனப்படும். உயிரினங்களின் இறைச்சி, முட்டை, பால் உள்ளிட்டவை விலங்கிலிருந்து கிடைக்கும் உணவுகளாகும். இது புலால் உணவு (Non Vegetarian) எனப்படுகிறது. மனிதனின் சௌமான உறுப்புகள் இவ்விருவகை உணவுகளையும் செரிப்பதற்கு ஏற்றதாக அமைந்துள்ளன. இவ்விரு வகை உணவுகளையும் மனிதர்கள் உட்கொள்வது இயற்கையே என்பதை இது காட்டுகிறது.

புலால் உணவை, நீர் சார்ந்தது, நிலம் சார்ந்தது, என இருவகைகளாகப் பிரிக்கலாம். மரக்கறி உணவிலும், புலால் உணவிலும் உண்ண அனுமதிக்கப்பட்டவையும் உள்ளன; உண்ண அனுமதிக்கப்படாதவையும்

உள்ளன. அவற்றில் உண்ண அனுமதிக்கப்பட்டவை உடலுக்கும், அறிவுக்கும் ஊறு விளைவிக்காத, ஆரோக்கியமான உணவு வகைகள் ஆகும்.

அவ்வாறே, உணவு உட்கொள்ளும்போது கடைபிடிக்க வேண்டிய ஆரோக்கியமான பழக்க வழக்கங்களும் உள்ளன. அவற்றைக் கடைபிடிப்பது உடல் நலம் காப்பதற்கு அவசியமாகிறது. அந்த வகையில் ஆரோக்கியம் நல்கும் உணவு வகைகளை உட்கொள்ளும்போது அதற்கு முன்னும் பின்னும் கடைபிடிக்க வேண்டிய நல்ல பழக்க வழக்கங்களையும் இஸ்லாம் எடுத்துரைக்கிறது.

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது. அருமை நாயகம் (ஸல்) அவர்கள் எந்த உணவையும் ஒரு போதும் குறை சொன்னதில்லை. பிடித்தால் அதை உண்பார்கள். பிடிக்காவிட்டால் அதை (உண்ணாமல்) விட்டுவிடுவார்கள்.

(நூல் : புகாரீ-5409)

மனதிற்கு ஒப்பவில்லை

ஹள்ரத் காலித் பின் அல்வலீத் (ரளி) அவர்கள் கூறியதாவது. (அன்னை) மைமூனா (ரளி) அவர்கள் நஜ்திலிருந்து கொண்டு வரப்பட்ட உடும்பு இறைச்சியைக் கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் முன் (சாப்பிட) வைத்தார்கள். நபியவர்களோ, எந்த உணவாயினும் அதன் பெயர் தமக்கு கூறப்பட்டு அதைப் பற்றிய விபரம் சொல்லப்படாத வரை அதன் பக்கம் தமது கையை நீட்டுவது அரிதாகும்.

இந்நிலையில் நபியவர்கள் தமது கையை அந்த உடும்பின் பக்கம் நீட்ட அங்கிருந்த பெண்களில் ஒருவர், "நீங்கள் பரிமாறியிருப்பது என்னவென்று நபியவர்களுக்குத் தெரிவியுங்கள். நாயகமே அது உடும்பு" என்று கூறினார். உடனே நபியவர்கள் அந்த உடும்பு இறைச்சியை விட்டு தமது கையை எடுத்துக் கொண்டார்கள். அப்போது நான், "நாயகமே! உடும்பு தடை செய்யப்பட்டதா? என்று வினவினேன். நபியவர்கள், "இல்லை; ஆயினும் அது என் சமுதாயத்தாரின் பூமியில் இல்லை. ஆகவே, என் மனம் அதை விரும்பவில்லை" என்று கூறினார்கள். உடனே நான் அதைத் துண்டித்து சாப்பிட்டேன். அப்போது நபியவர்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

(நூல்: புகாரீ-5391, முஸ்லிம்-3941)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் பழக்கத்தையும், ஆசையையும் பேணிக் கொண்டார்கள். தம் நிலத்தில் இல்லாததைச் சாப்பிட்டுப் பழகாதபோது அதை மனமும் விரும்பாத போது அதைச் சாப்பிடாமல் தவிர்த்துக் கொண்டார்கள். அதே

அல்லாஹ்வின் இல்லத்திற்கு அள்ளி வழங்குங்கள்!

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

இறை இல்லத்தின் விரிவாக்கத்திற்காக 14 சென்ட் இடம் முடிப்பதற்கு சென்ட் ஒன்றுக்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 14 சென்டுக்கு 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தங்களால் இயன்ற பொருளுதவியைப் பேருதவியாகச் செய்து மறுமையில் சொர்க்கத்தில் ஒரு மாளிகையைப் பெற அன்புடன் அழைக்கின்றோம். தங்களின் உதவிகளை கீழ்கண்ட பெயரில் செலுத்துங்களேன்!

பேங்க் விபரம் :

பெயர் : **SELLUR NEW MOSQUE JAMATH**

பேங்க் : **INDIAN BANK** Branch : **BIBIKULAM**

A/C எண் : **707006 1108**

IFSC CODE : IDIB000B066 CIF No : 30415785610

செல்லூர் புதுப்பள்ளிவாசல் முஸ்லிம் ஜமாஅத்

அஹிம்சாபுரம் மேலத்தெரு விசாலம், செல்லூர், மதுரை – 2.

தலைவர் : K.சுல்தான் அலாவுதீன் M.A.,B.L., 9842137386

செயலாளர் : முஹம்மது அபூபக்கர் B.Com., 9042450369

பொருளாளர் : A.காதர் மைதீன் 9443732567

இன்பமான இனிய இல்லறத்திற்கு

பக்க விளைவுகள் கிடையாது

ஜிங்கா கோல்டு™

ஆண்களின் சக்திக்கு முழுமை மந்திரம்

4 கேப்சூல்ஸ் ரு.600/- மட்டுமே

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும் அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Customer Care - 9962664444

www.jingagold.com info@jingagold.com

அன்பான வேண்டுகோள்

இஸ்லாமிக் சென்டர் வேலூர்

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மார்க்கக்கல்வி கற்றுத் தரும் ஏற்பாடுகள் எதுவும் இல்லாத சூழ்நிலையில் 1978-ம் ஆண்டு துவக்கப்பட்ட அகில இந்திய அளவில் தனித்துவம் வாய்ந்த சிறந்த முன்னோடி கல்வி நிறுவனமாகும்.

அல்லாஹ்வின் அருளால் ஏறக்குறைய 10,000 பேர் இஸ்லாமிக் சென்டரில் பயின்று இஸ்லாமிய மார்க்கத்தின் சட்டதிட்டங்களை அறிந்துள்ளனர். ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கு தனித்தனி தங்கும் வசதியுடன் 4 ஆசிரியர்களைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக பெண்களுக்கு தையல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

குல்லிய்யத்துல் மஆரி ஃப்

பெண்களுக்கு குல்லிய்யத்துல் மஆரி ஃப் அரபிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு கம்ப்யூட்டர் மற்றும் தையல் பயிற்சியுடன் மூன்றாண்டு ஆலிமா கோர்ஸ் நடத்தப்படுகிறது. இதுவரை 90 ஆலிமாக்கள் பட்டம் பெற்று பல தளங்களில் சிறப்பாகப் பணியாற்றி கொண்டிருக்கின்றனர்.

இஸ்லாமிக் அகாடமி

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாமிய நூல்கள் அஞ்சல் மூல மாக அனுப்பி வைக்கப்படுகிறது. TOLL FREE 18005723000 நம்பர் மூலமாக இஸ்லாம்பற்றித் தெரிந்து கொள்ள ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இஸ்லாமிக் சென்டர் - மதுரை

★ இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மேற்படிப்பிற்காக மதுரையில் மாணவர் தங்கும் வசதி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

★ இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட 18 கிராமங்களில் மஸ்ஜிதுகள் கட்டப்பட்டு, கிராமங்களில் தண்ணீர், சுகாதாரம் மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக 10 பேர் கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகிறது.

★ பள்ளி, கல்லூரி விடுமுறை நாட்களில் மாணவ, மாணவிகளுக்கு ஸம்மர் இஸ்லாமிக் கோர்ஸ் நடத்தப்படுகிறது.

இஸ்லாமிக் சென்டரில் இரண்டு மாதம் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு தங்குமிடம், உணவு, மருந்து, பயணச் செலவு மற்றும் அவர்களின் அடிப்படை தேவைகள் அனைத்தும் இஸ்லாமிக் சென்டர் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

அன்பான சகோதர,சகோதரிகளே! இப்பணிகள் மென்மேலும் சிறப்பாகத் தொடர்ந்து செயல்பட உங்களின் ஜகாத் தொகை, நன்கொடையை இஸ்லாமிக் சென்டருக்கு வழங்க வேண்டுமென உங்களின் உதவியையும், ஆதரவையும் வேண்டுகிறோம்.

BANK DETAILS : Cheque, DD or Bank Transfer can be sent through

Bank: **UNION BANK OF INDIA, Vellore Branch,**

A/c.No.33300-10100-19006 **IFSCode: UBIN0533301**

Bank Transferer are requested to send SMS the details of Amount, Name, Address to 09500190520

Address : **ISLAMIC CENTRE VELLORE**

 # 19/4, MADAR SAHIB STREET, R.N.PALAYAM,

VELLORE-632001. Tamilnadu **Phone : 0416-2223825**

Mobile : 9500190520 Email:icvellore@gmail.com

நேரத்தில் யார் அதை விரும்பி உண்கிறாரோ, அதை உண்பதைப் பழக்கமாகக் கொண்டுள்ளாரோ அவரைத் தடுக்கவில்லை.

நபியவர்கள் உணவுப் பொருளை மனம் விரும்பவில்லையென்றால் அதைச் சாப்பிடமாட்டார்கள். விரும்பாமல் அதை இரைப்பைக்குள் திணிக்கமாட்டார்கள். இதுவே உடலின் ஆரோக்கியத்தைப் பேண மிக முக்கியமான அடிப்படையாகும். ஒரு மனிதன் தனக்குவிருப்பமில்லாதஉணவை உண்டால் அதனால் ஏற்படும் பயனைவிடத் தீங்குதான் மிகுதியாக இருக்கும்.

பகிர்ந்துகொள்!

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஒருவருடைய உணவு இருவருக்குப் போதுமானதாகும்."

(நூல்: முஸ்லிம் - 4182)

"இருவருடைய உணவு மூவருக்குப் போதுமானதாகும். மூவரின் உணவு நால்வருக்குப் போதுமானதாகும்."

(நூல்: புகாரீ-5392)

அதாவது ஒருவர் சாப்பிடும் உணவை இருவர் பகிர்ந்து கொள்ளலாம். இருவர் வயிறு நிரம்ப சாப்பிடும் உணவைப் பகிர்ந்தால் அது மூவருக்குப் போதுமானதாகிவிடும்.

வயிறு முட்ட

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது : அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம் இறை மறுப்பாளர் ஒருவர் விருந்தாளியாக வந்து தங்கினார். அவருக்கு நபியவர்கள் ஓர் ஆட்டிலிருந்து பால் கறந்து கொடுக்கும்படி உத்தரவிட்டார்கள். அவ்வாறே பால் கற(ந்து அவரிடம் கொடு)க்கப்பட்டது. அவர் (அந்தப் பாலைப்) பருகினார்.

பிறகு மற்றொரு ஆட்டில் பால் கறக்கப்பட்டது. அதையும் அவர் பருகினார். மீண்டும் ஓர் ஆட்டில் பால் கறக்கப்பட்டது. அதையும் பருகினார். இவ்வாறாக ஏழு ஆடுகளிலிருந்து கறக்கப் பட்ட பாலை அவர் பருகினார்.

பின்னர் மறுநாள் காலையில் அவர் இஸ்லாத்தைத் தழுவினார். அப்போது ஓர் ஆட்டில் பால் கறந்து அவருக்கு வழங்கும்படி நபியவர்கள் உத்தரவிட, அவ்வாறே பால் கறந்து கொடுக்கப்பட்டது. அவர் அந்தப் பாலைப் பருகினார். பிறகு அவருக்கு மற்றொரு ஆட்டில் பால் கறந்து கொடுக்கும்படி நபியவர்கள் உத்தரவிட்டார்கள். அப்போது அவரால் அதை முழுவதுமாகப் பருக முடியவில்லை அப்போது நபியவர்கள், "இறைநம்பிக்கையாளர் ஒரே குடலில் பருகுவார். இறை மறுப்பாளரோ ஏழு குடல்களில் பருகுவார்" என்று கூறினார்கள்.

(நூல்: புகாரீ-5397, முஸ்லிம்-4189, திர்மிதீ-1741)

ஹள்ரத் நாஃபிஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் தம்முடன் சாப்பிட ஓர் ஏழையையேனும் அழைத்து வரப் படாமல் உணவு உண்ண மாட்டார்கள். ஆகவே, (ஒருநாள்) அவர்களுடன் சாப்பிட ஒருவரை நான் அழைத்துச் சென்றேன். அம்மனிதர் நிறைய சாப்பிட்டார்.

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள், "நாஃபிஉ! இவரை (இனி மேல்) என்னிடம் அழைத்துவராதீர்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் 'இறை நம்பிக்கை யாளர் ஒரே குடலில் சாப்பிடுவார். இறைமறுப்பாளரோ ஏழு குடல்களில் சாப்பிடுவார்' என்று கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள். (நூல் : புகாரீ-5393)

ஓர் இறைநம்பிக்கையாளர் இறைக்கட்டளையை மதித்து ஹலால் - ஹராமைப் பேணி, அனுமதிக்கப்பட்ட உணவு வகைகளை மட்டுமே உண்பார். மாறாக, இறைமறுப்பாளர் மனம் விரும்பும் எதையும் விதிவிலக்கே இல்லாமல் உண்பார் என்பது ஒரு விளக்கம்.

அனுமதிக்கப்பட்ட உணவு வகைகளே ஆயினும் ஓர் இறை நம்பிக்கையாளர் அளவோடு உண்பார். அப்போதுதான் வணக்க வழிபாடுகளில் ஈடுபடவும், அதிகமாக உண்பதால் ஏற்படும் விளைவுகளிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவும் அவ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ...

المدرسة الجنة ودارالأيتام

Regd. No. : 28/BK V/15

அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா

தேவாரம் - 625 530. தேனி மாவட்டம்.

அன்பான வேண்டுகோள் ...

பேரன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

தேனி மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வரும் நமது அல்ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா-வில் 50-க்கும் மேற்பட்ட எத்தீம் மாணவியர்கள் ஈருலக நற்கல்வி பயின்று வருகிறார்கள். முழுமையான மார்க்க கல்வியுடன் பள்ளி, கல்லூரிகளிலும் பயின்று வருகிறார்கள். அவர்களின் கல்விக்கும், வாழ்வின் உயர்விற்கும் தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நமது மதரஸாவிற்கு எந்த ஒரு நிரந்தர வருமானம் இல்லாத சூழலில் தங்களது **ஜகாத் / ஸதகா** போன்ற உதவிகளை அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா எனும் பெயருக்கு DD/ செக் மூலமாக கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி எத்தீம்களுக்கு உதவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இன்ஷா அல்லாஹ் வங்கியில் பணம் செலுத்தியபின் மதரஸாவிற்கு தகவல் தெரிவிக்கவும்

வங்கி விபரம்

AL JANNATH YATHEEMKHANA MADRASA
A/C No : 35486597490 State Bank of India
Thevaram Branch, IFS Code : SBIN0014441
Theni District. TamilNadu. S.India

Google Pay/PhonePe: 87542 22470

C.அபூபக்கர் சித்தீக் தஃவத்தி, D.T.T., நிர்வாகி
27/2, W-17, 5-வது தெரு, தேவாரம்-625 530
தொடர்புக்கு : 04554-254021, 099443 77681

ருக்கு வசதியாக இருக்கும்; இறை மறுப்பாளர் நிலை அவ்வாறன்று. அவன் வரைமுறையின்றி வயிறு புடைக்க உண்பான் என்பது மற்றொரு விளக்கம்.

சுருங்கக்கூறின், உணவு மட்டுமின்றி வாழ்க்கை வசதிகள் அனைத்திலும் கிடைத்ததைக் கொண்டு போதுமாக்கிக் கொள்வதும், ஆடம்பரங்களைத் தவிர்ப்பதும் நல்ல இறைநம்பிக்கையாளரின் பண்பாகும். இவ்வுலக வாழ்க்கை இன்பங்களை எந்த வழியிலும் அனுபவித்தாக வேண்டும் என விரும்புவது மறுமையை நம்பாதவனின் செயலாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "மனிதன் நிரப்புகின்றன பைகளில் வயிற்றைவிடத் தீங்கானது ஒன்றுமில்லை. மனிதனுக்கு அவனது முதுகெலும்பை நிமிர்த்துகின்ற சில கவளங்கள் உணவே போதும்? அவனையும் மீறி அவன் மனம் ஆசைப்பட்டால் வயிற்றில் மூன்றில் ஒரு பகுதியை உணவுக்காகவும், இன்னொரு பகுதியைப் பானத்துக்காகவும், மற்றொரு பகுதியை மூச்சு விடுவதற்காகவும் ஒதுக்கிக் கொள்ளட்டும்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் மிக்தாம் பின் மஅதிகீரப் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ-2302, இப்னுமாஜா-3340, இப்னு ஹிப்பான்-5236, ஹாகிம்)

வயிறு நிரம்ப உணவு உண்ணலாமா? என்றால், உண்ணலாம் என்பதே விடையாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்களது காலத்தில் நபித் தோழர்கள் சில சமயம் வயிறு நிரம்பச் சாப்பிட்டுள்ளார்கள் என்பதற்கும், அதை நபியவர்கள் தடுக்கவில்லை என்பதற்கும் பல நபிமொழிகள் சான்றாக உள்ளன. இருப்பினும், கடமையான பணிகளை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்படுகின்ற அளவுக்கு வயிறு புடைக்கச் சாப்பிடுவது விரும்பத்தக்கதன்று. உணவின் அளவு எவ்வளவு இருப்பது நலம் என்பதை இந்த நபிமொழி உணர்த்துகிறது.

மரக்கறி

ஹள்ரத் சஹ்ல் பின் சஅத் (ரளி) அவர்கள் கூறியதாவது : "வெள்ளிக்கிழமை வருவதால் நாங்கள் மகிழ்ச்சியடைந்து வந்தோம். எங்களுக்கு ஒரு மூதாட்டி இருந்தார். அவர் தண்டுக்கீரையின் தண்டுகளை எடுத்து தனது பாத்திரமொன்றில் அவற்றையிட்டு அதில் தொலி நீக்கப்படாத கோதுமை தானியங்கள் சிறிதைப் போட்டு(க் கடைந்து) வைப்பார். நாங்கள் (வெள்ளிக்கிழமை தொழுகை) தொழுத பின்னர் அவரைச் சந்திப்போம். அவர் அதை எங்களுக்குப் பரிமாறுவார். இதன் காரணத்தால் நாங்கள் வெள்ளிக்கிழமை மூலம் மகிழ்ச்சியடைந்து வந்தோம்."

(நூல்:- புகாரீ-5403)

நமக்கு வெள்ளிக்கிழமை என்றாலே நமக்கு இறைச்சி, மீன், முட்டை இப்படி ஏதேனும் அசைவ

ஈத் முபாரக்!

ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

N.S.ஸ்டீல் ஹவுஸ்

எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362

அனைவருக்கும் ஈத் பெருநாள் வாழ்த்துக்கள்!

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக பரிபூரணமாக நிறைவு செய்யுங்கள்

RAHMAAN
TOURS & TRAVELS

RECOGNISED BY : GOVT OF INDIA - MINISTRY OF MINORITY AFFAIRS
KINGDOM OF SAUDI ARABIA - MINISTRY OF HAJJ

* HAJJ
* UMRAH
* ZIARAH

PASSPORT & VISA எடுத்து தரப்படும்

RAHMAAN TOURS & TRAVELS

A. SALEEM **RAHMAAN BUILDERS**

45D, RAMASAMY PILLAI ST., MARUTHAMALAI MAIN ROAD,
VADAVALLI (P.o.), COIMBATORE - 641041.

93632 20624, 99943 23977, 99767 78597

உணவு இருக்க வேண்டும். அசைவ உணவு இல்லாத ஜும்ஆ தினம், ஜும்ஆ தினமா? என்று சலிப்பாக நாம் எண்ணுகிறோம்.

பருப்புன்னா வெறுப்பு, ரசம்ன்னா விஷம், கறின்னா சரி என்ற நிலைப்பாட்டில் நம்மில் பலர் உண்டு.

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "தையற்காரர் ஒருவர் அருமை நாயகம் (ஸல்) அவர்களைத் தாம் தயாரித்திருந்த உணவி(னை உண்பத)ற்காக அழைத்தார். நானும் நபியவர்களுடன் சென்றேன். அவர் தொலி நீக்கப் படாத கோதுமை ரொட்டியையும், சுரைக் காயையும், உப்புக்கண்டம் இருந்த குழம்பையும் நபியவர்களின் முன்னால் வைத்தார். நபியவர்கள் உணவுத் தட்டின் நாலா பக்கங்களிலும் சுரைக்காயைத் தேடுவதை நான் பார்த்தேன். அன்றிலிருந்து நானும் சுரைக் காயை விரும்பிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்.

(நூல் : புகாரீ- 5436)

மற்றொரு அறிவிப்பில், "நான், நபியவர்கள் உணவில் சுரைக் காயைத் தேடுவதை பார்த்த வுடன் சுரைக்காயை நபியவர் களுக்கு முன்னால் ஒன்று சேர்த்து வைக்கலானேன்" என்று வருகிறது.

ஹள்ரத் ஜாபிர் பின் தாரிக் (ரளி) அவர்கள் கூறியதாவது : "நான் கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களின் (இல்லம்) சென்றேன். அவர்களுக்கு முன் னிலையில் சுரைக்காய் பல துண்டு களாக்கப்படுவதைக் கண் டேன். என்ன இது, (எதற்காக) என்றேன். அதற்கு நபியவர்கள், "இதன் மூலம் எங்களது உணவை, (சால்னாவை) அதிகப்படுத்திக் கொள்வோம்" என்று கூறினார்கள்.

(நூல் : இப்னுமாஜா-3304, ஷமாயில் திர்மிதீ-161)

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஜஅஃபர் (ரளி) அவர்கள் கூறியதாவது : "அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வெள்ளரிக்காயுடன் (சேர்த்து) பேரீச்சச் செங்காய்களை உண்பதைக் கண்டேன்.

(நூல் : புகாரீ-5447)

ஒரே நேரத்தில் சாப்பிடக்கூடாது

பேரறிஞர் இப்னு கய்யிம் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். பேராசான் பெருமானார் (ஸல்) அவர்கள் பாலையும் மீனையும், பாலையும் முட்டையையும், பாலையும் இறைச்சியையும், பாலையும் புளிப்பான உணவுப் பொருள்களையும் ஒரே நேரத்தில் சாப்பிட மாட்டார்கள்.

மேலும், முதல் நாள் உணவை மறுநாள் சூடேற்றப்பட்டு வழங்கப் படுகின்ற உணவையும் உண்ண மாட்டார்கள். அது போலவே கெட்டுப்போன, புளித்துப்போன உணவுகளையும் உண்ண மாட்டார்கள். ஊறுகாய்கள், உப்புத்தடவி வைக்கப்பட்ட (கருவாடு போன்ற) உணவுப் பொருள்கள் முதலானவற்றை யும் உண்ணமாட்டார்கள்.

மேலும்,

வெப்பத் தன்மை கொண்ட இரண்டு பொருள்களையோ, குளிர்ச்சித் தன்மை கொண்ட இரண்டு பொருள்களையோ, பிசுபிசுப்பு தன்மை கொண்ட இரண்டு பொருள்களையோ, பிடிப்புத் தன்மை கொண்ட இரண்டு பொருள்களையோ, இளகிய தன்மை கொண்ட இரண்டு பொருள்களையோ, கடினத்தன்மை கொண்ட இரண்டு பொருள்களையோ, மென்மைத் தன்மை கொண்ட இரண்டு பொருள்களையோ ஒன்றாக ஒரே நேரத்தில் சாப்பிட மாட்டார்கள். இவை அனைத்தும் உடலின் ஆரோக்கியத்திற்கும், நடுநிலைத் தன்மைக்கும் இடையூறு ஏற்படுத்தக்கூடியவை ஆகும்.

(நூல் : அத்திப்பு நபவி)

ஹள்ரத் ஸஹ்தம் பின் முளர்ரிப் அல்ஜர்மீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது : நாங்கள் அபூமூசா அல்அஷ்அரீ (ரளி) அவர்களிடம் இருந்தோம். அப்போது கோழி இறைச்சி(யுடன் கூடிய உணவு) கொண்டு வரப்பட்டது. அங்கிருந்த மக்களில் ஒருவர் (அதனை உண்ணாமல்) விலகி இருந்தார். அப்போது அபூ மூசா (ரளி) அவர்கள், "உனக்கு என்ன நிகழ்ந்தது? (சாப்பிடாமல் தனித்து இருக்கிறாயே) என்று வினவினார்கள்.

அதற்கவர், "கோழி அசுத்தப் பொருள் சாப்பிடுவதை நான் பார்த்தேன். எனவே கோழிக்கறி சாப்பிட மாட்டேன் எனச் சத்தியம் செய்துவிட்டேன்" என்று பதிலளித்தார். அப்போது அபூமூசா (ரளி) அவர்கள், "அருகில் வாருங்கள். (வந்து சாப்பிடுங்கள்.) ஏனெனில், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இதை (கோழி இறைச்சி) உண்பதை நான் பார்த்துள்ளேன்" என்று கூறினார்கள். (நூல் : புகாரீ-5518, ஷமாயில் திர்மிதீ-154)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கோழி இறைச்சியைச் சாப்பிட்டிருப்பதால் நீரும் சாப்பிடலாம்; சத்தியப் பரிகாரம் செய்து கொள்ளலாம் என்ற நோக்கில் ஹள்ரத் அபூமூசா (ரளி) அவர்கள் அவரை உண்பதற்கு அழைத்து விருந்தோம்பினார்கள். மேலும், மார்க்க அறிஞர்களில் சிலர் பேணுதல் அடிப்படையில் அசுத்தம் தின்னும் கோழி அல்லது விலங்கை உண்ண விரும்பினால் அதனைச் சில நாட்கள் கட்டிப்போட்டு பின்னர் அதை அறுத்து அதன் இறைச்சியை உண்ணலாம் என்கிறார்கள். அசுத்தம் தின்னும் விலங்கின விஷயத்தில் மட்டுமே இத்தகைய நடைமுறை. அப்பெயர் நீக்கி விட்டால் தடையேதும் இல்லை.

பத்தியம் பேணு!

ஹள்ரத் உம்முல் முன்திர் (ரளி) அவர்கள் கூறியதாவது : "(ஒரு நாள்) நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அலீ (ரளி) அவர்களுடன் என் இல்லத்திற்கு வந்தார்கள். அப் போது எங்களிடம் வீட்டில் பேரீச்சச் செங்காய் குலையொன்று தொங்க விடப்பட்டிருந்தது. நபியவர்கள் (அதிலி

ருந்து பறித்து) உண்ணலா னார்கள். ஹள்ரத் அலீ (ரளி) அவர்களும் உண்ணலானார்கள்.

அப்போது நபியவர்கள், "அலீயே! (போதும்) நிறுத்து வீராக! (போதும்) நிறுத்துவீராக! ஏனெனில், (உடல்நலிவுற்றி ருந்த) நீர் இப்போதுதான் உடல் நலம் தேறியுள்ளீர்" என்றார்கள். எனவே அலீ (ரளி) அவர்கள் உண்ணாமல் அமர்ந்துகொள்ள, நபியவர்கள் (மட்டும் அதை) உண்ணலானார்கள்.

பிறகு அவர்களுக்காக நான் தண்டுக்கீரையும், கோதுமையும் கலந்து தயாரித்த உணவை வைத்தேன். அப்போது நபியவர் கள், "அலீயே! இதை நீர் உண் ணலாம்! ஏனெனில், இது உம(து உடல்நலத்து)க்கு மிகவும் ஏற்றதாகும்" என்றார்கள்.

(நூல்: அபூதாவூத் - 3856, திர்மிதீ-1959, இப்னுமாஜா-3442, முஸ்னது அஹ்மத், ஹாகிம்)

நோய்வாய்ப்பட்டிருந்த அலீ (ரளி) அவர்கள் அப்போது தான் உடல்நலம் தேறியிருந்தார் கள். எனவே அந்நிலையில் உணவு பத்தியத்தைக் கடை பிடிக்க அறிவுறுத்தினார்கள்.

நோயிலிருந்து அப்போது தான் உடல் நலம் தேறி வந்தவருக்கு கோதுமைக் கஞ்சி மிகவும் பய னுள்ள உணவாகும். குறிப் பாக அத்துடன் தண்டுக்கீரை சேர்த்து சமைத்து உண்பது பொருத்த மாக இருக்கும். இத்தகையோ ருக்கு பேரீத்தம், திராட்சைப் பழங் கள் இடையூறு அளிக்கக்கூடும்.

"பத்தியமே தலைசிறந்த மருந்து," "இரைப்பை நோய்க்கான வீடு" ஆகியன அரபுப் பழமொழி கள் ஆகும்.

பத்தியம் என்பது உடல் நிலை யைப் பொறுத்து அல்லது மருந்து உட்கொள்வதைப் பொறுத்து எதை விலக்க வேண்டும்; எதைச் சேர்க்க வேண்டும் என்ற உணவுக் கட்டுப்பாட்டை அதாவது பத்தியத் தைப் பற்றி நோயாளி அறிந்து கொள்ள வேண்டும். நபியவர்கள் இத்தகைய உணவுக் கட்டுப் பாட்டை வலியுறுத்தியுள்ளார்கள்.

பழங்கள்

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஜஅ்ஃபர் (ரளி) அவர்கள் கூறிய தாவது : கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் ஈரப்பதமான பேரீத்தம் பழத்துடன் வெள்ளரிக் காயை சாப்பிடுபவர் களாக இருந்தார்கள். (புகாரீ-5440, முஸ்லிம்-4150, அபூதாவூத் - 3835, திர்மிதீ-1767, இப்னு மாஜா-3325)

மேலும், ஈரப்பதமான பேரீத் தம் பழத்துடன் தர்பூசணிப் பழத் தைச் சாப்பிடுபவர்களாக இருந் தார்கள். (அபூதாவூத்-3836, திர்மிதீ-1766, பைஹகீ)

மேலும் ஈரப்பதமான பேரீத் தம் பழத்துடன் முலாம் பழத் தையும் சேர்த்துச் சாப்பிடுபவர் களாக இருந்தார்கள்.

(முஸ்னது அஹ்மத், இப்னுஹிப்பான்-1356, ஷமாயில் திர்மிதீ-199)

பேரீத்தம்பழம் புரதச் சத்துக்கள், நார்ச் சத்துக்கள் மற்றும் பல சத்துக்கள் நிறைந் தது. பல்வேறு நோய்களை குணப்படுத்தவல்ல ஊட்ட உணவு. வெள்ளரிக்காய் நீர்ச்சத்துமிகுந்தது. நாவறட்சியை விரட்டும், பசியையும் உண்டாக்கும், உடலைக் குளிரவைக்கும், சூட்டைத் தணிக்கும், சிறுநீர்க் கோளாறைச் சரி செய்யும். இரண்டிலும் ஏராளமான மருத்துவ பலன்கள் உள்ளன. மருத்துவ ரீதியாக இரண்டையும் சேர்த்துச் சாப்பிடுவது நேர்த்தியானதாகும். அதனால் தீய விளைவுகள் ஏற்படுவதில்லை. இவ்விரண்டில் ஒன்றினால் ஏற்படும் இடையூறை மற்றது நிவர்த்தி செய்யும். மொத்தத்தில் இரண்டும் உடல் நலம் காக்கும் அருமருந்தாகும்.

தர்பூசணி குளிர்ச்சியானது. பேரீத்தம் பழம் உடலைச் சூடேற்றும். இரண்டையும் சேர்த்து உண்பது உடல் வெப்பத்தைச் சீராக வைத்திருக்க உதவும். இவ்விரண்டையும் சாப்பிட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இதன் சூட்டை இதன் குளிர்ச்சியின் மூலமாக இதன் குளிர்ச்சியை இதன் சூட்டின் மூலமாகவும் முறியடிப்போம் என்று கூறிய செய்தி அபூதாவூத் (3836) நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் எதற்காக அழுதார்கள்?

ஒரு முறை அண்ணலார் நபி (ஸல்) அவர்களிடம் வருகை தந்த ஒருவர், "என் தந்தை என்னுடைய பொருள்களை எடுத்துக் கொள்கிறார்" என்று முறையிட்டார். நபி (ஸல்) அவர்கள், அவரின் தந்தையை வரவழைத்தார்கள். தம் தடியை ஊன்றிக் கொண்டு பலவீனமான முதியவர் ஒருவர் வந்தார். நபி (ஸல்) அவர்கள் அந்த முதியவரிடம் "நிலைமை என்ன?" என்று கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒருகாலம் இருந்தது. அப்போது இவன் பலவீனமானவனாகவும், இயலாதவனாகவும் இருந்தான். எனக்கு உடல் வலிமை இருந்தது. நான் செல்வந்தனாக இருந்தேன். இவனோ வெறுங்கையுடன் இருந்தான், என்னுடைய பொருள்களிலிருந்து இவன் எதனையும் எடுத்துக் கொள்ள நான் இவனுக்கு ஒரு போதும் தடை ஏற்படுத்தவில்லை! இன்று நான் பலவீனமாக இருக்கிறேன். நான் கையில் ஒன்றும் இல்லாதவனாக இருக்கிறேன். இவனோ செல்வந்தனாக இருக்கிறான். தன் செல்வத்தை எனக்கு எட்டாத இடத்தில் (மறைத்து) வைக்கிறான்" என்றார் அப்பெரியவர். முதியவரின் இந்த வரலாறு கேட்டு கருணை நபி (ஸல்) அவர்கள் அழுதேவிட்டார்கள். பிறகு அந்த முதியவரின் மகனை நோக்கிக் கூறினார்கள் : "நீயும் உன் செல்வமும் உன்னுடைய தந்தைக்குரிய உடைமையாகும்" என்றார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அம்ரு பின் ஷுஐபு (ரளி) அவர்கள்.
(நூல் : அபூதாவூத், ஜிந்தஹிஹா அதப்)

தருபவர் : அல்ஹாஜ் கே.கே.சைய்யது சுலைமான், தென்காசி.

இரவு உணவு

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "இரவு உணவை(ச் சாப்பிடாமல்) கை விட்டு விடாதீர்கள். ஒரு கைப்பிடியளவு பேரீச்சம் பழமாயினும் (சாப்பிடுங்கள்). ஏனென்றால், அதைக் கைவிடுவது முதுமையை (அதாவது பலவீனத்தை) ஏற்படுத்தும்.

அறிவிப்பாளர்:- ஹள்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (நூல்:- திர்மிதீ, இப்னுமாஜா-3346)

ஹள்ரத் அபூநயீம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: சாப்பிட்ட உடனேயே தூங்குவதை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். ஏனென்றால், அவ்வாறு செய்வது உள்ளத்தைக் கல்லாக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. இதனால் தான் ஆரோக்கியத்தை பேணிக்கொள்வோருக்கு மருத்துவர்களின் அறிவுரைகள்: உண்டவுடன் நூறடிகளாவது நடக்க வேண்டும் அல்லது தொழ வேண்டும் அதனால் உணவானது இரைப்பையின் அடியில் சென்று தங்கி சௌமானத்தை எளிதாக்குவதோடு நல்ல முறையில் சௌமானமாவதற்கு உதவியாகவும் அமையும். சாப்பிட்ட உடனே உறங்குவது கூடாது. அவ்வாறு செய்வது மிகப் பெரிய தொல்லையை ஏற்படுத்தும்.

(நூல்: அத்திப்புந் நபவி இமாம் இப்னு கையிம்)

நாம் உணவில் கவனம் செலுத்தி, உடல் ஆரோக்கியம் பெற, அல்லாஹுதஆலா அருள்புரிவானாக!

துவக்கம் 1958

குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)

அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)

பொறுப்பாசிரியர் : மவ்லவீ மு.ஃப்தீ
மு.முஹம்மது இஸ்மாயீல்
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹள்ரத்

குர்ஆனின் குரல்
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
மதுரை-625020.

அலுவலக அலைபேசி எண் :
94420 56547
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com

ஓராண்டு சந்தா ரூ.300/-
தனி இதழ் ரூ.25/-

விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ தொகை செலுத்துபவர்களுக்கு :
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.6851528029 IFSC Code : IDIB000T003

சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH

குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

உடல் வெப்பத்தைத் தணிக்க-12

- அன்வர் ஜீ, சேலம் – 5.

கோடை வெயில் கொளுத்தத் துவங்கி விட்டது. பகல் நேரத்தில் வெளியில் செல்லவே பயப்படும் அளவிற்கு கோடையின் தாக்கம் அதிகமாக உள்ளது. கோடை காலம் முடிய இன்னும் முழுதாக இரண்டு மாத காலம் இருக்கிறதே. அதுவரை எப்படித் தான் சமாளிப்பதோ என்பதே நம் அனைவரின் கவலை யாக இருக்கும். வெயிலில் போக பயப்படுவது ஒரு பக்கம் இருந்தாலும், எந்தெந்தப் பொருளைச் சாப்பிட்டால் வெயிலால் ஏற்படும் சூட்டைத் தணிக்கலாம் என்பதும் மற்றொரு கவலையாக நிற்கும்.

பொதுவாக ஒருவருக்கு உடல் வெப்பமானது 98.4°F டிகிரி இருக்கும். அதுவும் இந்த வெப்பநிலை ஒவ்வொருவருக்கும் வேறு படும். ஆனால் இதனை விட அதிகமான அளவில் வெப்பமானது உடலில் அதிகரித்தால் அது உடலில் பல பிரச்சனைகளை ஏற்படுத்தும். எனவே, உடல் வெப்பத்தைக் கட்டுப்பாட்டுடன் வைப்பது என்பது மிகவும் முக்கியமானது. தற்போது கோடைகாலம் என்பதால் உடல் வெப்பமானது அளவுக்கு அதிகமாகும் வாய்ப்புள்ளது. இத்தகைய வெப்பம் உடலில் வெப்பத்தை மட்டும் அதிகரிக்காமல் வயிற்று வலி, அரிப்புகள், பரு, மயக்கம் மற்றும் சோர்வு போன்றவற்றையும் ஏற்படுத்தும். எனவே, இத்தகைய உடல் வெப்பத்தைத் தணிப்பதற்கு உட்கொள்ள வேண்டிய 12 வகை குளிர்ச்சியான பொருள்களின் பட்டியல் இதோ உங்களுக்காக :

தர்பூசணி : நீர்ச்சத்து அதிகம் நிறைந்துள்ள இந்தப் பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் உடலில் இருக்கும் வெப்பமானது தணிவதோடு உடல் வறட்சியும் நீங்கும்.

முலாம் பழம் : உடல் வெப்பத்தைத் தணிக்கும் பழங்களில் முலாம் பழம் மிகவும் முக்கியமானது. இந்தப் பழம் மிகவும் குளிர்ச்சி தன்மை நிறைந்தது. இதனை ஒரே நேரத்தில் அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால், சிலருக்கு அதிலுள்ள குளிர்ச்சியால் காய்ச்சல், இருமல் போன்றவை ஏற்படும்.

வெள்ளரிக்காய் : கோடையில் அதிகம் கிடைக்கும் உணவுப் பொருட்களில் வெள்ளரியும் ஒன்று. இதில் நீர்ச்சத்து அதிகம் இருப்பதால் இது உடல்வறட்சியைக் குறைப்பதோடு, உடல் வெப்பத்தையும் குறைக்கும்.

புதினா : இயற்கை வைத்தியத்தில் உடல் வெப்பத்தைத் தணிப்பதற்கு புதினா பெரிதும் உதவியாக உள்ளது. எனவே, அதிகமான உடல் வெப்பமுள்ளவர்கள், புதினா ஜூஸ் குடிப்பது நல்ல பலனைத் தரும்.

முள்ளங்கி : முள்ளங்கியில் அதிகப்படியான நீர்ச்சத்து இருப்பதோடு, வைட்டமின் சி என்னும் உடல் வெப்பத்தைக் குறைக்கும் ஆன்டி ஆக்ஸிடன்ட் நிறைந்துள்ளது.

எள் : தினமும் எள் சாப்பிட்டாலும், உடல் வெப்பமானது எளிதில் தணியும். மேலும் உடலில் நீர்ச்சத்தும் அதிகம் இருக்கும்.

சீரகம் : சீரகத்தை இரவில் படுக்கும்போது சுடுநீரில் ஊற வைத்து, பின் அந்த நீரைக் காலையில் எழுந்து பருகி வந்தால் உடல் வெப்பம் குறையும்.

இளநீர் : உடல் வெப்பத்தை தணிப்பதில் இளநீருக்கு நிகர் எதுவும் இல்லை. அதிலும் இதனை தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடல் குளிர்ச்சியுடன் ஆரோக்கியமாக இருக்கும்.

மாதுளை : மாதுளை ஜூஸை தினமும் குடித்து வந்தாலும் உடல் குளிர்ச்சியாக இருக்கும்.

கசகசா : நாள்தோறும் இரவில் தூங்கும் முன் ஒரு கை கசகசா சாப்பிட்டு, தண்ணீர் குடித்து வந்தால் நல்ல நிம்மதியான தூக்கம் கிடைப்பதோடு, உடல் வெப்பமும் கட்டுப்பாட்டுடன் இருக்கும்.

வெந்தயம் : மிகவும் பிரபலமான இயற்கை வைத்தியம் என்றால் அது தினமும் வெந்தயத்தை சாப்பிடுவது தான். இதனால் உடல் வெப்பமானது எளிதில் தணியும்.

பால் : குளிர்ச்சியான பாலில் தேன் சேர்த்து வெறும் வயிற்றில் குடித்து வந்தாலும் உடல் வெப்பம் தணியும்.

அண்ணல் நபியின் கன்னல் மொழி!

"எவரது குணம் மிகவும் சிறந்து இருக்குமோ, எவரது நடத்தை தம் வீட்டாருடன் மிக நளினமாக இருக்குமோ அவர் பரிபூரண விசுவாசம் கொண்டவர்களில் உள்ளவராவார்."

அறிவிப்பவர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதி)

"விற்கும்போதும் வாங்கும்போதும், உரிமையைக் கேட்கும்போதும், மென்மையை கையாளுபவருக்கு அல்லாஹ்தஆலா அருள்புரிவானாக"

(நூல்: புகாரி)

"மக்களுடன் கலந்துறவாடாத அவர்களால் ஏற்படும் சிரமங்களை சகித்துக் கொள்ளாத முஃமினை (விசுவாசியை) விட மக்களுடன் கலந்துறவாடி அவர்களால் ஏற்படும் துன்பங்களைச் சகித்துக் கொள்ளும் விசுவாசியே சிறந்தவர்"

(நூல்: இப்னு மாஜா)

தொடர் - 3

இஸ்லாத்தில் வதந்திகளுக்கு இடம் கிடையாது!

பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

ஆகவே தவறான தகவல்கள், வதந்திகள், புரளிகள் எப்படிப் பட்ட மாபெரும் பாதகங்களை ஏற் படுத்துகின்றன என்பதற்கு இரண்டாம் உலகப் போர் ஓர் அத் தாட்சியாகும். இதனால் தான் இஸ்லாம் வதந்திகளையும், பொய்ச் செய்திகளையும், தவறான தகவல்களையும், புரளிகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

தவறான வதந்திகளால் மேலும் சில நிகழ்ச்சிகள் சரித்திரத் தில் இடம் பெற்றிருக்கின்றன.

1750-ம் ஆண்டு வாக்கில் பிரான்ஸ் நாட்டில் குழந்தைகள் திடீரென்று காணாமல் போவதாக ஒரு வதந்தி பரவியது. அந்த நாட்டை ஆண்ட பதினைந்தாம் லூயி என்ற மன்னனுக்கு தொழு நோய் ஏற்பட்டிருக்கிறது என்றும், அதனால் குழந்தைகளை தூக்கிக் கொண்டு போய் அவர்களை வெட்டி அவர்களின் இரத்தத்தில் லூயி மன்னன் குளிக்கப் போகி றான் என்றும், அவ்வாறு குளித் தால் தொழு நோய் அவனுக்கு குணமாகிவிடும் என்றும் வதந்தி கள் கிளம்பவே பிரான்ஸ் மக்கள் பெரிதும் அதிர்ச்சிக்கு ஆளா யினர். தங்களின் குழந்தைகளை அவர்கள் வெளியே விடாமல் வீட்டிற்குள்ளே வைத்துக் கொண் டனர். சில மாதங்களுக்குப் பின்னர் அவர்கள் கேள்விப் பட்டவை வெறும் பொய்யான வதந்திகள் என்று தெரிந்து கொண்டனர்.

1761-ம் ஆண்டு வாக்கில் இலண்டன் மாநகரத்தில் சிறிய நில நடுக்கம் ஏற்பட்டது. இதை அடுத்து 1761-ம் ஆண்டு ஏப்ரல் மாதம்15-ம் தேதி அன்று பெரிய அளவில் நில நடுக்கம் ஏற்படப் போவதாகவும் அதனால் இலண்டன் மாநகரம் அழிந்து விடப் போவ தாகவும் வதந்தி கிளம்பியது. அந்தத் தேதிக்கு முன்பாகவே மக்கள் இலண்டன் மாநகரத்தை விட்டு வெளியேறி விட்டனர்.

வெளியேற முடியாதவர்கள் அன்று வயல் வெளிகளில் படுத்துக் கொண்டனர். அந்தத் தேதியில் நில நடுக்கம் ஏற்பட வும் இல்லை. இலண்டன் மாநகரத் திற்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவுமில்லை. எல்லாம் பொய் வதந்திகள் என்று தெரிந்து கொண்ட மக்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்கள்.

2013-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் தேதி அன்று வெள்ளை மாளிகையில் நடந்த குண்டு வெடிப்பினால் அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா காயம் அடைந்தார் என்ற வதந்தி அமெரிக்கா முழுவதும் பரவியது. இதனால் பல நூறு கோடி ரூபாய் அளவில் அமெரிக்கப் பங்குச் சந்தை சரிவுற்றது. இந்தச் செய்தி வெறும் வதந்தி என்று தெரிந்ததும் பங்குச் சந்தை மீண்டும் பழைய நிலைக்கு வந்தது.

15-ம் நூற்றாண்டில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, எவ்வளவு வேகமாக உண்மையான செய்திகள் பரவியதோ அதே வேகத்தில் பொய்ச் செய்திகளும், வதந்திகளும் அச்சடிக்கப்பட்ட காகிதங்கள் மூலம் பரவ ஆரம்பித்தன.

1700-ம் ஆண்டு நடுப் பகுதியில் மன்னர் இரண்டாம் ஜார்ஜ் இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து நாடுகளை ஆட்சி செய்து வந்தார். அபபோது உள்நாட்டுக் கலகங்கள் நடந்து கொண்டிருந்தன. மன்னரின் கவுரவத்தைக் குறைக்கும் வகை யில் கலகக்காரர்கள் மன்னரின் உடல் நலம் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறது என்ற பொய்ச் செய்தியை பத்திரிகையில் வெளி யிட்டனர். இதைப் பார்த்த மற்ற பத்திரிகைகளும் இந்தச் செய்தியை உண்மை என்று நம்பி மன்னர் உடல்நலம் குன்றிப் போயிருக்கிறார் என்று செய்திகளை வெளியிட ஆரம்பித்தன. சினம் கொண்ட மன்னர் இந்த வதந்திகள் பொய்யானவை என்று அரசாங்கத் தரப்பிலிருந்து அறிக்கையை வெளியிடச் செய்தார்.

இதைப் போலவே டைட்டானிக் கப்பலைப் பற்றியும் ஒரு பத்திரிகை பொய்யான செய்தி ஒன்றை வெளியிட்டது.

ஆர்.எம்.எஸ்.டைட்டானிக் (Royal Mail Ship (RMS) Titanic) கப்பலைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். நியூயார்க் நகரத்திற்குப் போகும் வழியில் 1912-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் தேதி இரவு சுமார் 11.40 மணிக்கு பனிப்பாறையில் மோதி ஏப்ரல் 15-ம் தேதி அதிகாலை சுமார் 2.20 மணி அளவில் வடக்கு அட்லாண்டிக் பெருங் கடலில் (North Atlantic Ocean) மூழ்கி விட்டது.

பயணம் செய்த 2240 பயணிகளில் ஏறத்தாழ 1500 பயணிகள் கடலில் மூழ்கி இறந்து விட்டனர். 740 பயணிகள் உயிர் தப்பினர். இந்தக் கப்பலின் உரிமையாளர் ஜான் பியர் பான்ட், ஜே.பி. மோர்கன் என்பவரும் இந்தக் கப்பலில் பயணம் செய்வதாக இருந்தது. ஆனால் அவருக்கு உடல் நலம் சரியில் லாததால் அவர் பயணத்தை ரத்து செய்து விட்டார். அவர் உயிர் தப்பினார்.

அமெரிக்காவிலுள்ள பால்டிமோர் (Baltimore) என்ற துறைமுக நகரத்திலிருந்து மாலை பதிப்பாக வெளி வந்த ஈவினிங் சன் (Evening Sun) என்ற பத்திரிகை 1912-ம் ஆண்டு ஏப்ரல் 15-ம் தேதி இதழில்

மறுமைக்காக ஓர் அரிய சேமிப்பு!

வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா **NH48** அருகில் உள்ள இந்த மக்தப் / நிஸ்வான் மதரஸா **2016**-ல் துவங்கி **2018**-ல் டிரஸ்ட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. இந்த மதரஸாவில் **100**க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் வயதானப் பெண்கள் **7** வருடங்களாக குர்ஆன் மற்றும் தீன்கல்வியையும் மிகச் சிறப்பாக படித்து வருகின்றனர். இந்த மதரஸா வாடகை கட்டிடத்தின் மாடியின் மேற்பகுதியில் இயங்கி வருகிறது. அதனால் ஒத வருபவர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. எனவே பள்ளிகொண்டாவில் **1000** சதுரடி இடம் சுமார் **(15,00,000)** பதினைந்து லட்சத்திற்கு வாங்க மதரஸா நிர்வாகம் முடிவு செய்துள்ளது. ஆகையால் தங்களால் முடிந்தவரை இந்த டிரஸ்ட் கணக்கில் **G-PAY/Phonepe** மூலம் பணம் அனுப்பி உதவி செய்வதோடு, மற்றும் நண்பர்கள், தெரிந்தவர்களுக்கும் எடுத்துச் சொல்லி உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். அல்லாஹ் தங்கள் அனைவருக்கும் நீண்ட ஆயுளையும், உடல் சுகத்தையும், வியாபாரத்தில் பரக்கத்தையும் தந்தருள்புரிவானாக.

DEPOSIT FOR YOUR LIFE AFTER

Makthab Niswaan Madrasa, Near Pallikonda NH48 Vellore District, Started in 2016 and got Trust Registered at 2018. In this Madrasa, More than 100 Students and Old Women are studying Al-Quran and Dheen. The Madrasa Administration has decided to buy a thousand square feet Land in Pallikonda for 15 Lakh rupees. Therefore, as far as you can, send money to the trust account through G-pay or Phonepe. May Allah bless everyone with a long life, good health and success in business.

Estd : 2016

Regd No.29/IV/2018

MADRASA-E-MIFTHAHUL KHAIR

(Maintained by Mifthahul Khair Trust)

51/21A, CENTRAL STREET, PALLIKONDA–635809.

Vellore Dt. TamilNadu, India.

DONATE US

BANK DETAILS

Name : **MIFTHAHUL KHAIR EDUCATIONAL AND WELFARE (TRUST)**

Current A/c No : **59 32 00 21 00 00 06 91**

Bank : PUNJAB NATIONAL BANK Branch : **PALLIKONDA**

IFSC Code : PUNB0593200

G-Pay/Phonepe : **94886 61742** (TRUST NUMBER)

Contact No . Moulana **M.SANAULLAH Qasimi SB** : 9786641742

MALIGAI AYYUB SB : 9940960499

டைட்டானிக் கப்பலைப் பற்றி ஒரு தவறான செய்தியை வெளியிட்டது.

"1912-ம் ஆண்டு ஏப்ரல் 10-ம் தேதி இங்கிலாந்திலுள்ள சவுத்தாம்ப்டன் என்ற துறைமுகத்திலிருந்து (Southampton Port, England) நியூயார்க் நகரத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த டைட்டானிக் கப்பல் 1912-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் தேதி இரவு பனிப்பாறையில் மோதி சேதமடைந்தது. ஆனால் உயிர்ச் சேதம் எதுவும் இல்லை. பயணிகள் அனைவரும் பத்திரமாக படகுகளில் ஏறிக் கரை சேர்ந்து விட்டனர். பயணிகள் தங்குவதற்காக முகாம்களில் தங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. விர்ஜினியன் (Virginian) என்ற கப்பல், சேதமடைந்த டைட்டானிக் கப்பலை ஹாலிஃபாக்ஸ் (Halifax) நகரத்திற்கு இழுத்துச் செல்கிறது".

இந்தச் செய்தியைப் படித்தது பயணிகளின் உறவினர்கள் பெரு மூச்சு விட்டனர்.

டைட்டானிக் கப்பலில் பெரும் தனவந்தர்கள், கோடீஸ்வர பிரபுக்கள், பெரும் செல்வம் படைத்த வணிகர்கள், அரசாங்கத்தில் செல்வாக்கு மிக்க பெரும் புள்ளிகள், பெரும் தனியார் நிறுவனங்களின் உரிமையாளர்கள். தலைமை நிர்வாகிகள் போன்றோர் முதல் வகுப்பில் பிரயாணம் செய்தனர். முகாம்களில் தங்கியிருக்கும் இவர்கள் தொலைபேசி மூலம் தங்களைத் தொடர்பு கொள்வார்கள் என்று இவர்களின் உறவினர்கள் காத்திருந்தனர். ஆனால் யாரும் தொடர்பு கொள்ளவில்லை.

சந்தேகம் அடைந்த இவர்களின் உறவினர்கள் டைட்டானிக் கப்பலின் உரிமையாளர்களான ஒயிட் ஸ்டார் லைன் (White Star Line) என்ற நிறுவனத்தை தொடர்பு கொண்ட பின்புதான் டைட்டானிக் கப்பல் பனிப்பாறையில் மோதி ஏப்ரல் 15-ம் தேதி அதிகாலை சுமார் 2:20 மணி அளவில் வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் (North Atlantic Ocean) மூழ்கி விட்டது என்ற உண்மையை அறிந்தனர். படகுகளில் ஏறி தப்பித்து நடுக் கடலில் தத்தளித் துக் கொண்டிருந்த பயணிகளை கார்பதியா (Carpathia) என்ற கப்பல் அவர்களை ஏற்றிக் கொண்டு 1912-ம் ஆண்டு ஏப்ரல் 18-ம் தேதி நியூயார்க் நகரத்தை வந்தடைந்தது.

இப்படியிருக்க டைட்டானிக் கப்பலின் பயணிகள் அனைவரும் பத்திரமாக படகுகளில் ஏறிக் கரை சேர்ந்துவிட்டனர். பயணிகள் தங்குவதற்காக முகாம்களில் தக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்ற பொய்ச் செய்தியை ஈவினிங் சன் (Evening Sun) பத்திரிகை எதற்காக வெளியிட்டது என்பது இன்று வரைக்கும் யாருக்கும் புரியவில்லை. இந்தப் பொய்ச் செய்தி நாட்டில் எவ் வளவு குழப்பத்தை உருவாக் கியது என்பதைப் பற்றி

ஈத் முபாரக்!

94867 04264
04368 - 240014

AYISHA
BAGS & LUGGAGES

130, Sulthan Arcade, Bharathiyar Road,
KARAIKKAL - 609 602.

ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

OXFORD ENGLISH SCHOOL (CBSE)

சிதம்பரம் - 608001. கடலூர் மாவட்டம்.

KG to XII Grade

NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

- முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாம் மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ்,** M.B.A.,M.Sc.,Ph.D.
Founder & Chairman.

தொடர்புக்கு : Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030-412, (414), (421)**
WhatsApp : **+91-9566247805** https://**oxfordenglishschool.info**

அந்தப் பத்திரிகையாளர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை.

1896-ம் ஆண்டு வாக்கில் இரண்டு விஷமிகள் நியூயார்க் நகரத்தில் தங்களின் பத்திரிகைகளின் மூலம் விஷமச் செய்திகளை மக்களுக்கு வழங்கி அமெரிக்க மக்களிடையே குழப்பத்தை விளைவித்த சம்பவங்களும், அமெரிக்கா, கியூபா நாட்டு மக்களைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்த்த சம்பவங்களும் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

ஜோசப் புலிட்சர் (Joseph Pulitzer) என்பவர் அமெரிக்க நாட்டின் தலைநகரமான நியூயார்க்கில் நியூயார்க் வோர்ல்ட் (New York World) என்ற பெயரில் தினப் பத்திரிகை ஒன்றை நடத்தி வந்தார். ஒரு நாளைக்கு பத்து லட்சம் பிரதிகள் விற்பனையாயின. கோடீஸ்வரரான வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்ட் (William Randolph Hearst) என்பவரும் அதே நகரத்தில் நியூயார்க் ஜர்னல் (New York Journal) என்ற பெயரில் தினப் பத்திரிகை ஒன்றை நடத்தி வந்தார்.

இந்த இரண்டு பத்திரிகைகளுக்கும் இடையே கடுமையான போட்டி, இந்த இரண்டு பத்திரிகைகளும் உண்மையான செய்திகளை வெளியிடாமல் பலவிதமான பொய்யான செய்திகளை வெளியிட்டு மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி வந்தன. மக்களைக் கவரும் வண்ணம் பொய்யும், புரட்டும் கலந்த காரசாரமான செய்திகளை (Sensational News) வெளியிட்டு இந்த இரண்டு பத்திரிகைகளும் வானில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தன.

இப்படியிருக்க கியூபா நாடு பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது. ஸ்பெயின் நாட்டின் காலனித்துவ ஆட்சியிலிருந்து (Colonial Rule) விடுதலை பெற கியூபா மக்கள் வெகு காலமாக போராடி வந்தார்கள்.

1890-ம் ஆண்டு வாக்கில் கியூபாவில் மக்களின் புரட்சி வெடிக்க கலவரங்கள் உச்ச நிலையைத் தொட்டன. கியூபா மக்களின் பரிதாபமான நிலையைப் பார்த்து இவர்களுக்கு உதவ அமெரிக்கா முன் வந்தது. மெய்னே (Maine) என்ற ஒரு போர்க் கப்பலை அமெரிக்கா கியூபா நாட்டின் ஹவானா துறை முகத்திற்கு அனுப்பி வைத்தது. 1898-ம் ஆண்டு பிப்ரவரி 15-ம் தேதி இரவு அன்று மெய்னே கப்பலில் குண்டு வெடிக்க அந்தக் கப்பல் ஹவானா துறைமுகக் கடலில் மூழ்கி விட்டது. உயிர் சேதங்கள் எதுவும் இல்லை.

இந்த வெடிகுண்டு சம்பவத்தை விசாரிக்க கடற் படையைச் சார்ந்த ஒரு புலனாய்வாளரை அமெரிக்கா, கியூபா நாட்டிற்கு அனுப்பி வைத்தது. இந்த வெடிகுண்டுச் சம்பவத்தில் எந்தவிதமான சதித் திட்டம்

எதுவும் இல்லை என்றும் துறை முகத்திற்கு அருகிலிருந்த ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் வைக்கப் பட்ட வெடிகுண்டு அசம்பாவித மாக கப்பலில் வந்து விழுந்து விட்டதால் கப்பல் மூழ்கி விட்டது என்றும் அந்தப் புலனாய்வாளர் தனது அறிக்கையை அமெரிக்க அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தார். நிலவரம் அமைதி அடைந்தது.

நியூயார்க் ஜர்னல் தினப் பத்திரிகையின் உரிமையாளர் வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்ட் அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்ற ஓவியரான ஃபிரடெரிக் ரெமிங்டன் (Frederic Remington) என்பவரை தன்னுடைய பத்திரிகையில் வேலைக்கு அமர்த்திக் கொண்டார்.

வெடிகுண்டுச் சம்பவத்தின் போது ஓவியர் ஃபிரடெரிக் ரெமிங் டன் கியூபா நாட்டில் இருந்தார். வெடிகுண்டுச் சம்பவத்தினால் இங்கு பிரச்சனைகள் எதுவும் இல்லை. நிலவரம் அமைதியாக இருக்கிறது. நான் அமெரிக்கா வுக்கு திரும்பி வருகிறேன் என்று ஓவியர் ஃபிரடெரிக் ரெமிங்டன், வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்டுக்கு கடிதம் எழுதினார். வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்ட் உடனே ஓவியர் ஃபிரடெரிக் ரெமிங்டனுக்கு பதில் கடிதம் அனுப்பினார்.

"நீங்கள் அங்கேயே இருங் கள்; அமெரிக்காவின் மெய்னே போர்க் கப்பல் வெடிகுண்டினால் சிதறியதை ஓவியங்களாகத் தீட்டி அனுப்புங்கள். நான் போரைத் தயாரித்து விடுகிறேன்" (Please re-main. You furnish the pictures and I'll furnish the war).

வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்ட் கேட்டுக் கொண்டபடி ஓவியரான ஃபிரடெரிக் ரெமிங் டன் தத்ரூபமான ஓவியங்களைத் தீட்டி அனுப்பினார். அந்த ஓவியங் களை தன்னுடைய நியூயார்க் ஜர்னல் தினப் பத்திரிகையில் வெளியிட்டு, மெய்னே போர்க் கப்பல் பகைவர்களின் இரகசிய ராட்சத இயந்திரங்களினால் இரண்டாக வெடித்துச் சிதறியது (The War Ship Maine was Split in Two by an Enemy's Secret Infernal) என்ற தலைப்பில் பரபரப்பான செய்தியை வெளியிட்டார்.

போட்டியாக நியூயார்க் வோர்ல்ட் பத்திரிகையும் ஓவியங் களைத் தீட்டி இது பகைவர்களின் வேலை தான் என்று பரபரப்பான செய்திகளை வெளியிட்டது.

இரண்டு பத்திரிகைகளின் விற்பனை வானைத் தொட்டது. அமெரிக்க மக்கள் வெகுண் டெழுந்தனர்.

இறுதியில் ஸ்பெயின் நாட்டுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே போர் மூண்டது. 1898-ம் ஆண்டு மே மாதம் முதல் தேதி அன்று மணிலா விரிகுடா கடற் பகுதியில் (Manila Bay) நடந்த போரில் ஸ்பெயின் நாட்டை அமெரிக்கா வென்று விட்டது.

போர் நடந்ததற்கு நியூயார்க் வோர்ல்ட், நியூயார்க் ஜர்னல் ஆகிய இரு பத்திரிகைகளும் நேரடியான

எதுவும் இல்லை என்றும் துறை முகத்திற்கு அருகிலிருந்த ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் வைக்கப் பட்ட வெடிகுண்டு அசம்பாவித மாக கப்பலில் வந்து விழுந்து விட்டதால் கப்பல் மூழ்கி விட்டது என்றும் அந்தப் புலனாய்வாளர் தனது அறிக்கையை அமெரிக்க அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தார். நிலவரம் அமைதி அடைந்தது.

நியூயார்க் ஜர்னல் தினப் பத்திரிகையின் உரிமையாளர் வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்ட் அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்ற ஓவியரான ஃபிரடெரிக் ரெமிங்டன் (Frederic Remington) என்பவரை தன்னுடைய பத்திரிகையில் வேலைக்கு அமர்த்திக் கொண்டார்.

வெடிகுண்டுச் சம்பவத்தின் போது ஓவியர் ஃபிரடெரிக் ரெமிங் டன் கியூபா நாட்டில் இருந்தார். வெடிகுண்டுச் சம்பவத்தினால் இங்கு பிரச்சனைகள் எதுவும் இல்லை. நிலவரம் அமைதியாக இருக்கிறது. நான் அமெரிக்கா வுக்கு திரும்பி வருகிறேன் என்று ஓவியர் ஃபிரடெரிக் ரெமிங்டன், வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்டுக்கு கடிதம் எழுதினார். வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்ட் உடனே ஓவியர் ஃபிரடெரிக் ரெமிங்டனுக்கு பதில் கடிதம் அனுப்பினார்.

"நீங்கள் அங்கேயே இருங் கள்; அமெரிக்காவின் மெய்னே போர்க் கப்பல் வெடிகுண்டினால் சிதறியதை ஓவியங்களாகத் தீட்டி அனுப்புங்கள். நான் போரைத் தயாரித்து விடுகிறேன்" (Please re-main. You furnish the pictures and I'll furnish the war).

வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்ட் கேட்டுக் கொண்டபடி ஓவியரான ஃபிரடெரிக் ரெமிங் டன் தத்ரூபமான ஓவியங்களைத் தீட்டி அனுப்பினார். அந்த ஓவியங் களை தன்னுடைய நியூயார்க் ஜர்னல் தினப் பத்திரிகையில் வெளியிட்டு, மெய்னே போர்க் கப்பல் பகைவர்களின் இரகசிய ராட்சத இயந்திரங்களினால் இரண்டாக வெடித்துச் சிதறியது (The War Ship Maine was Split in Two by an Enemy's Secret Infernal) என்ற தலைப்பில் பரபரப்பான செய்தியை வெளியிட்டார்.

போட்டியாக நியூயார்க் வேர்ல்ட் பத்திரிகையும் ஓவியங் களைத் தீட்டி இது பகைவர்களின் வேலை தான் என்று பரபரப்பான செய்திகளை வெளியிட்டது.

இரண்டு பத்திரிகைகளின் விற்பனை வானைத் தொட்டது. அமெரிக்க மக்கள் வெகுண் டெழுந்தனர்.

இறுதியில் ஸ்பெயின் நாட்டுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே போர் மூண்டது. 1898-ம் ஆண்டு மே மாதம் முதல் தேதி அன்று மணிலா விரிகுடா கடற் பகுதியில் (Manila Bay) நடந்த போரில் ஸ்பெயின் நாட்டை அமெரிக்கா வென்று விட்டது.

போர் நடந்ததற்கு நியூயார்க் வேர்ல்ட், நியூயார்க் ஜர்னல் ஆகிய

பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டுவதற்கு உதவி செய்யுங்கள்

"யாரொருவர் பள்ளிவாசல் கட்டுவதற்கு உதவி செய்கிறாரோ அவருக்கு மறுமையில் சொர்க்கத்தில் ஒரு வீட்டை அல்லாஹ் கட்டுகிறான்." "பள்ளிவாசல் கட்டுபவர்களுக்கு உலகத்தின் எல்லா தேவைகளையும் அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்கிறான்"

அன்புள்ளம் கொண்ட சகோதர, சகோதரிகளுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

சென்னை முகப்பேர் ஏரி ஸ்கீம் பக்கம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், முகப்பேர் கபருஸ்தான் பின்புறம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, நம்பர் 1 என்ற இடத்தில் அல்லாஹ்வின் இல்லமாகிய **மஸ்ஜிதுன் நூர் & மதரஸா** கட்டுவதற்காக ¼ கிரவுண்ட் இடத்தை அல்லாஹ்வின் கிருபையால் ரூ. 25 லட்சம் கொடுத்து ரிஜிஸ்டர் செய்து விட்டோம். அல்ஹம்துலில்லாஹ்!

இனி அடுத்த கட்டமாக மஹல்லாவாசிகள், ஸ்கூல் படிப்புடன் கூடிய **அல் மதரஸத்துன் நூரிய்யா** ஹிப்ழு மதரஸா மாணவர்கள், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் சகோதரர்கள் ஆகியோர் பள்ளியில் தங்கி தொழுவதற்காகவும், ஓதுவதற்காகவும் இன்ஷா அல்லாஹ் இந்த பள்ளிவாசலை உருவாக்குகிறோம். அல்லாஹ்வின் நாட்டப்படி கட்டட வேலைகள் ஆரம்பமாகி விட்டன. எனவே, இந்தப் பள்ளிவாசலின் கட்டட வேலைகள் முழுமை பெறுவதற்கு பொருளாகவோ, பணமாகவோ, செக்காகவோ அனுப்பி ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்புள்ளம் கொண்ட இஸ்லாமிய சகோதரர்களே! நீங்களும் உங்களின் உதவிகளை அனுப்புவதோடு, உங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களையும் உதவி செய்ய வையுங்கள். அல்லாஹ் தஆலா நமக்கு எல்லா நிஅமத்துக்களையும் அளித்து, பரக்கத் செய்தருள்புரிவானாக! நம்முடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வானாக. ஆமீன்.

மஸ்ஜிது அக்கவுண்ட் விபரம்

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**
Bank : **Karur Vysya Bank** Branch: **Arumbakkam**
A/C.No : **1289135000013292**
Ifsc : **KVBL0001289** Swift Code: **KVBLINBBIND**
G.Pay : **9444273674**

மஸ்ஜிதுன் நூர் அண்ட் மதரஸா டிரஸ்ட்

பள்ளிவாசல் காம்ப்ளக்ஸ், 3வது மாடி, 23, முதல் மெயின் ரோடு, ஜெய் நகர், அரும்பாக்கம், சென்னை – 600 106.

தொடர்புக்கு : தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ் **G. நூர் முஹம்மது ஆமிரி சிராஜி** அலைபேசி : **9444273674**
செயலாளர் : ஜனாப் **M.காதர் மஸ்தான்** B.A., அலைபேசி : **9962320242**

இரு பத்திரிகைகளும் நேரடியான காரணம் இல்லை என்றாலும் போருக்கு முன் பொய்ச் செய்திகளை வெளியிட்டு எரியும் தீயில் எண்ணை வார்த்தன. மக்களிடையே பெரும் குழப்பத்தை உருவாக்கி வந்தன. அமெரிக்க மக்கள் தூண்டி விடப் பட்டனர். அமெரிக்கா, ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு இடையே காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டது.

இந்த இரு பத்திரிகைகளும் பொய்ச் செய்திகளை வெளியிட்டு குழப்பத்தை உருவாக்காமல் இருந்திருந்தால் அன்றைய அரசியல் சூழ்நிலைகள் வேறு விதமாக இருந்திருக்கும் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

மஞ்சள் உடையணிந்த ஒரு சிறுவனின் (Yellow Kid) கார்ட்டூனை வரைந்து தினந்தோறும் பொய்ச் செய்திகளை நியூயார்க் வேர்ல்ட் பத்திரிகை வெளியிட்டு வந்தது. மஞ்சள் சிறுவனின் கார்ட்டூன் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இதைக் கண்ட நியூயார்க் ஜர்னல் பத்திரிகையின் உரிமையாளர் வில்லியம் ராண்டால்ஃப் ஹார்ஸ்ட் அவருடைய ஓவியரான ஃபிரடெரிக் ரெமிங்டனிடம் ஒரு மஞ்சள் சிறுவன் கார்ட்டூனை வரைந்து பொய்ச் செய்திகளை வெளியிட கூறினார். இரு பத்திரிகைகளும் மஞ்சள் சிறுவன் கார்ட்டூனை போட்டி போட்டுக் கொண்டு தினமும் வரைந்து செய்திகளை வெளியிட்டு வந்தன. மஞ்சள் சிறுவன் கார்ட்டூன் இரண்டு பத்திரிகைகளுக்கும் நல்ல விற்பனையை ஏற்படுத்திக் கொடுத்தது.

நியூயார்க் வேர்ல்ட், நியூயார்க் ஜர்னல் ஆகிய இரு பத்திரிகைகளும் பொய்யும் புரட்டும் கலந்த காரசாரமான செய்திகளை (Sensational News) மஞ்சள் சிறுவன் கார்ட்டூன் மூலம் வெளியிட்டு மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி வந்ததை மஞ்சள் பத்திரிகை (Yellow Journalism) என்று அக்கால மக்கள் கூறினர். அந்தக் காலகட்டத்திலிருந்து தான் பொய்ச் செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளை மஞ்சள் பத்திரிகை (Yellow Journalism) என்று அழைக்க ஆரம்பித்தனர்.

இப்படிப்பட்ட விஷமிகள் கொண்டு வரும் செய்திகளை உடனே நம்ப வேண்டாம் என்றும் அந்தச் செய்திகள் உண்மையா அல்லது இல்லையா என்பதை நாம் தீர்க்கமாக விசாரிக்க வேண்டும் என்றும் திருமறை நமக்கு அறிவுறுத்துகிறது. மேலும் அவ்விதம் விசாரிக்கத் தவறிவிட்டால் அதனால் பிறருக்கு தீங்கு விளைந்தால் நாம் அதை நினைத்து பின்னால் வருத்தப்பட வேண்டியிருக்கும் என்றும் திருமறை நமக்கு எச்சரிக்கை செய்கிறது.

"நம்பிக்கையாளர்களே! யாதொரு விஷமி உங்களிடம்

ஒருவர் தான் கேள்விப்பட்டதை அடுத்தவர்களுக்குச் சொல்லாமல் இருந்து விட்டால் வதந்திகள் பரவுவதற்கான வாய்ப்புகள் கிடையாது. ஆகவே நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு கேள்விப்பட்டதையெல்லாம் மற்றவர்களுக்குச் சொல்பவர்களை பொய்யர்கள் என்று கூறுகின்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஒருவர் தாம் கேள்விப்பட்டதையெல்லாம் (பிறருக்கு) அறிவிப்பதே அவர் பொய்யர் என்பதற்குப் போதுமான சான்றாகும்" இதை ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் : அத்தியாயம் 1 : ஹதீஸ் 6)

மேலும், கேள்விப்பட்டதை எல்லாம் அடுத்தவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருப்பவர் தலைமைத் தனத்திற்கு தகுதி படைத்தவர் இல்லை என்றும் அவர் மற்றவர்களுக்கு வழிகாட்டுவதற்கு அருகதை அற்றவர் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"கேள்விப்பட்டதையெல்லாம் அறிவிக்கும் ஒருவர் ஒரு போதும் (வழிகாட்டும்) தலைவராக இருக்கமாட்டார்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் வஹ்ப் பின் முஸ்லிம் (ரஹ்) அவர்கள்

ஸஹீஹ் முஸ்லிம் : அத்தியாயம் 1 : ஹதீஸ் : 8

(தொடரும்)

கதை பெருநாள் வாழ்த்துக்கள்!

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் - 623 501.

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

துஆ மஜ்லிஸ்

தேர்வில் வெற்றி பெற

அரசு பொதுத் தேர்வு எழுதும் அனைத்து மாணவச் செல்வங்களும் தேர்வை நன்றாக எழுதி அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெறுவதற்கு துஆ செய்யுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- அ.உஷ்னாரா பேகம் - மதுரை – 16.

நஜீர் அஹமது - மங்கலம்; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; ஹமீதுல்லாஹ் - கும்பகோணம்; ரஹ்மத் அலீ - சென்னை; உஜீது - புங்கனூர்; உம்முல் பரீதா - நீடூர் நெய்வாசல்; எஸ். அப்துல் சுக்கூர் - நீடூர்; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; அ.அப்பாஸ் - விழுப்புரம்; எஸ்.ராஜ் முஹம்மது, கே.சிராஜுதீன் - விழுப்புரம்; பீபீ ஜான், சல்மா பானு - மேல் தொண்டி தக்கா; அ. சம்சாத் - பெங்களூரு; குரல் வாசகி - கர்நாடகா; அ. ஹாஜரா - கர்நாடகா; ச.எண் L1262 - பெங்களூரு; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, அப்துஸ் ஸலாம் - மதுரை; அ. ஜெய்புன்னிஸா - கருமண்டபம்; அ. முஹம்மது அபுபக்கர் - பொட்டல்புதூர்; தஸ்லீமா - பெங்களூரு; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷம்பானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; குரல் வாசகர் - ஒட்டன்சத்திரம்; நாகூர் மீரான் - மானூர்; எஸ். ஹஸன் பானு - தஞ்சாவூர்; சந்தா எண் F595 - திருச்சி; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; பி. தாகிரா - நெய்க்காரப்பட்டி; பீ. எஸ். எம்.எஸ். அபுதாஹிர் - நத்தம்; சந்தா எண் H1101 - கூத்தாநல்லூர்; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்தீரி பேகம் - மதுரை; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிம்பா - மதுரை; ரக்ஷானா - தஞ்சாவூர்; சுஜாதீன் - கோயமுத்தூர்; முனீர் மீரான் - சென்னை; குரல் வாசகி - சிவகங்கை; குரல் வாசகி - அலங்கியம்; செல்லபா, எஸ்.கோரிமா, எஸ்.சிக்கந்தர் பாஷா - விராதனூர்; மும்தாஜ் - சென்னை; ஷேக் முஹம்மது - மண்ணரை; குரல் வாசகி - பள்ளபட்டி; ரபிக் - மண்ணரை; சார்மிளா - பெரியகுளம்; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை;

எஸ்.நூருன்னிஸா - தஞ்சாவூர்; ராகிமா - தாராபுரம்; ராபியத் பஸரியா - மூணார்; பி. சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; காஜா மைதீன் - நெய்க்காரப்பட்டி; வஹாப் - திருப்பூர்; அ. சப்ரின் - பெங்களூரு; பி. சுபைதா - சோழமாதேவி; சபினா ஆஸ்மி, முஹம்மது காமில் - இராமநாதபுரம்; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; லைலா பேகம் - இராஜபாளையம்; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; முஹம்மது ரஃபீ, ஷமீமா, அய்மன் முஹம்மது, அர்ஹம் முஹம்மது - சவூதி; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; ஷஃபானா பாத்திமா - சென்னை; அஹமது உவைஸ் - சென்னை;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள்.
குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்!
வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

இதயம் பேசுகிறது!

வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும் துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும் என் அக்கா மகளுக்கு சிறப்பான முறையில் திருமணம் நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ்! துஆ செய்த அனைத்து உள்ளங்களுக்கும் மிக்க நன்றி! நன்றி!

நஸ்ரீன் பாத்திமா - தஞ்சாவூர்.

இறைவா, நிறைவருள் புரிவாயாக!

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நீண்ட கால குர்ஆனின் குரல் வாசகர் (SLA) ஜனாப் எஸ்.லியாகத் அலீ அவர்களின் அன்பு மருமகனாரும், பழனி MLA என்றழைக்கப்படும் ஜனாப் எம்.லியாகத் அலீ அவர்களின் மகனார் ஜனாப் வாசிம் ராஜா அவர்கள் 12.01.23 அன்றும்,

தேனி மாவட்டம் உத்தமபாளையம் சாப்டூர் மர்ஹூம் ஹனிபா ராவுத்தர் (ரஹ்) அவர்களின் அருமை மனைவி ஜனாபா எம்.ஆயிஷா பீவி அவர்கள் 18.01.23 அன்றும்,

தூத்துக்குடி மாவட்டம் காயாமொழி மர்ஹூம் அல்ஹாஜ் ஜெய்னுல் ஆபிதீன் (ரஹ்) அவர்களின் அன்பு மனைவியும், ஜுனைதீன் மற்றும் சகோதரர்களின் தாயாருமான அல்ஹாஜ்ஜா சுலைஹா உம்மாள் அவர்கள் 19.01.23 அன்றும்,

இராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம் ஜும்ஆ பள்ளி வாசலின் மக்தப் மதரஸா ஆசிரியராகப் பணியாற்றி வந்த மவ்லானா லியாக்கத் சித்திக் அன்வாரி ஹள்ரத் அவர்கள் 13.02.23 அன்றும்,

வேலூர் மாவட்டம் கல்மேல் குப்பம் நத்வதுல் இர்ஷாத் உலமாப் பேரவையின் துணைத் தலைவர் மவ்லானா மவ்லவீ கே.இ.அப்துர் ரஹ்மான் காஷிஃபி ஹள்ரத் மற்றும் மேல்விஷாரம் "மஸ்ஜிதே தன்ஈம்" பள்ளிவாசலின் இமாம் மவ்லானா மவ்லவீ கே.இ.அப்துல் கரீம் காஷிஃபீ ஹள்ரத் ஆகியோரின் மூத்த சகோதரர் ஜனாப் கே.இ.அப்துஸ் சுப்ஹான் சாஹிப் அவர்கள் 14.02.23 அன்றும்,

மதுரை பொன்மேனி ஜும்ஆ பள்ளிவாசலின் இமாம் மவ்லானா மவ்லவீ முஹம்மது ஹுசைன் காஷிஃபி ஹள்ரத் அவர்களின் தந்தையார் ஜனாப் அப்துல் மஜீத் அவர்கள் 15.02.23 அன்றும்,

திருநெல்வேலி பேட்டை ரஹ்மானியா பள்ளிவாசல் மற்றும் மதரஸா பைளூர் ரஹ்மான் ஹிப்ளு கல்லூரியின் முன்னாள் தலைவரும் - இன்றைய கௌரவத் தலைவரும், முன்னாள் ரயில்வே கண்காணிப்பாளரும், உலமாபெருமக்கள் மீது நீங்கா பாசமும் - நேசமும் கொண்டவருமான அல்ஹாஜ் D.முஹைதீன் கஸ்ஸாலி அவர்கள் 11.03.23 அன்றும்,

வல்ல ரஹ்மானே ! உன்னவில் சேர்த்துவிட்டனர்

உன்னவில் சேர்த்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

வாசகர் வட்டம்

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 75 வது ஆண்டு பவள விழா மற்றும் அகில இந்திய மாநாடு விழா அழைப்பிதழ் மேலும் இம் மாத தலையங்கம் கண்டு மகிழ்ச்சி. முஸ்லிம் லீக்கை அந்நாளில் தோற்றுவித்தவர்களில் பலர் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அதனைக் காலங் காலமாக கட்டிக் காத்து வளர்த்து பெரு வளர்ச்சி கண்டுள்ளதற்கு காரணம் : பொறுப்பானவர்கள் அவ்வப் போது ஈடுபட்டு வந்ததன் விளைவு தான். இன்ஷா அல்லாஹ் அந்தப் பேரியக்கம் மென்மேலும் வளர்ந்து நல்ல பல சேவைகள் சமூகத் திற்குச் செய்திட துஆ செய்கிறேன்.

ரமளான் நோன்பு பற்றிய பல சந்தேகங்களுக்கு விரிவான சரியான பதில் கொடுத்திருந்தது அருமை! மக்கள் அதனால் பயனடைவதும் நினைவில் கொள்வதும் சிறப்பு!

"அற்புத இஸ்லாம் போற்றும் அண்டை வீட்டார்" கட்டுரை குர்ஆன் ஆயத் மற்றும் நபி மொழிகளை மேற்கோள்காட்டி எழுதியிருந்தவை அனைத்தும் நினைவில் வைத்து அன்றாடம் பேணப்பட வேண்டியவையாகும்.

பா.ஹாஜி முஹம்மது.
சேந்தமங்கலம்.

மார்ச் மாத இதழில் மவ்லானா அ.சைய்யது அலீ மஸ்லஹி எழுதிய "நரகத்தின் வாசல்கள் ஏழு" கட்டுரை நன்றாக இருந்தது. கட்டுரையாளர் ஆதாரத்தோடு தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியிருப்பது மிக்க அருமையிலும் அருமை! வல்ல அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக.

கா.முஸ்திரி பேகம், மதுரை– 20.

டாக்டர் பீ.ஹாமிது அப்துல் ஹை எழுதிய "உலகக் கால்பந்து திரு விழா" கட்டுரையை திரும்பத் திரும்ப படித்தேன். விளையாட்டில் இவ்வளவு விஷயங்களா? வியந்து போனேன். கட்டுரையாளருக்கு சபாஷ்!

ஜே.பிரேம லதா எம்.ஏ.,
நாகர்கோவில்.

கேள்வி பதில் பகுதி மிக்க பயனுள்ளதாக உள்ளது. நம்பிக்கை கொண்டோர் வரிசையில் ஸாபியீன்களையும் அல்லாஹ் இணைக்கிறான் (அல்குர்ஆன் 2 : 26) ஒரு பயணத்தில் தண்ணீர் குடத்துடன் சென்ற பெண்ணை தண்ணீருக்காக நபி (ஸல்) அவர்களிடம் அழைத்த போது 'ஸாபியீ' என்று சொல்லப் படும் அந்த மனிதரிடமா? என்று அவள் கேட்க, நபித்தோழர்கள் 'ஆம்' என்றனர். (புகாரி 344)

(ப. பீர் இலாஹி)
உத்தமபாளையம்

கடைசிப்பக்கம்

எம்.ஜே.அன்வரி

பாரதீய ஜனதா கட்சி மக்களவைத் தேர்தலிலோ, சட்டமன்றத் தேர்தலிலோ தனது கட்சியின் வேட்பாளராக ஒரு முஸ்லிமைக்கூட நிறுத்தாது.

இந்நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் 12-ம் நாள் ஒன்றிய பாரதீய ஜனதா அரசு ஆந்திரப் பிரதேச கவர்னராக எஸ்.அப்துல் நசீரை நியமித்தது.

மக்களவை உறுப்பினரைவிட, சட்டமன்ற உறுப்பினரை விட மிகவும் உயர்ந்த பதவி கவர்னர் பதவி!

இந்நிலையில் கவர்னராக ஒரு முஸ்லிமை எப்படி ஒன்றிய பாரதீய ஜனதா அரசு அறிவித்தது?

இதற்காக மூளையைப் போட்டுக் கசக்க வேண்டாம்.

ஆந்திர மாநில கவர்னராக நியமிக்கப்பட்ட எஸ்.அப்துல் நசீர் உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்து, கடந்த ஜனவரி மாதம் 4-ம் தேதி தான் ஓய்வு பெற்றார்.

இவர் உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தபோது தான் பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் ராமர் கோவில் கட்டலாம் என்றும், முத்தலாக் தடை செய்யப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

பிறகு என்ன? புரட்சிகரமான தீர்ப்பளித்த அப்துல் நசீருக்கு பரிசளிக்க வேண்டாமா?

அதனால்தான் அப்துல் நசீருக்கு ஆந்திர மாநில கவர்னர் பதவியை ஒன்றிய பாரதீய ஜனதா அரசு தூக்கிக் கொடுத்துள்ளது.

உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள், அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள்.

அவர்கள் சுயநலம் எதுவுமில்லாமல், எந்த ஆதாயத்தையும் எதிர்பார்க்காமல், முழுக்க முழுக்கச் சட்டத்தின் அடிப்படையில் நீதிபரிபாலனம் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பது அனைத்துத் தரப்பினரின் எதிர்பார்ப்பு.

அப்போதுதான் மக்களுக்கு நீதித்துறை மீதான நம்பிக்கை நிலைத்திருக்கும். மாறாக நீதிபதிகள்மீதும், அவர்கள் வழங்கும் தீர்ப்புகள் மீதும் மக்களுக்குச் சிறு சந்தேகம் ஏற்பட்டாலும், அது நீதித்துறை மீதான நன்மதிப்பைக் குலைத்துவிடும்.

ஆனால், சில நீதிபதிகள் ஓய்வு பெற்றவுடனேயே பெரிய பொறுப்புகளில் அமர்த்தப்படும்போது, அவர்களது பணிக்காலச் செயல்பாடுகள் கேள்விக்குள்ளாகின்றன.

குஜராத் 2002 கலவர வழக்கில் அன்றைய குஜராத் முதல்வர் மோடி எந்தக் குற்றமும் செய்யவில்லை. மோடி ரொம்ப யோக்கியர் என்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சதாசிவம் பிரதமர் மோடி ஆட்சியில் கேரளா மாநில கவர்னராக நியமிக்கப்பட்டார்.

பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் ராமர் கோவில் கட்டலாம் எனத் தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய்க்கு, பணி ஓய்வுபெற்ற நான்கு மாதங்களில் மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்கப்பட்டது.

அதே அயோத்தி வழக்கில் தீர்ப்பளித்த அசோக் பூஷனுக்கு, பணி ஓய்வுக்குப் பிறகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் தலைவர் பதவி வழங்கப்பட்டது.

தற்போது நீதிபதி எஸ்.அப்துல் நசீருக்கு ஆந்திர மாநில ஆளுநர் பதவி தரப்பட்டிருக்கிறது. இவர் பணி ஓய்வு பெற்று ஒரு மாதத்திலேயே கவர்னர் பதவியை தூக்கி கொடுத்துள்ளனர்.

ஒருவர் பணி ஓய்வுபெற்ற பிறகு, 'கூலிங் பீரியட்' எனப்படும் நியாயமான கால அவகாசம்கூட இல்லாமல் பதவிகளை வழங்குவது மிகவும் கவலைக்குரியது.

நீதிபதியாக இருப்பவர் எந்தவித அச்சமும் இல்லாமல் தீர்ப்புச் சொல்பவராக, ஒரு சாராருக்கு ஆதரவாக இல்லாமல் தீர்ப்பு வழங்குபவராக, யாருடைய செல்வாக்குகளுக்கும் அடிபணியாமல் தீர்ப்புத் தருபவராக இருக்க வேண்டும்.

ஓய்வு பெற்ற நீதிபதிகளுக்கு மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவர் என்பன போன்ற பதவிகள் வழங்கப்படுவது வழக்கம்தான்.

ஆனால், மாநிலங்களவை எம்.பி., மாநில ஆளுநர் போன்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளை ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்கு வழங்குவது, நீதித்துறை மீதான நம்பகத் தன்மையைப் பாதிக்கும்.

பணி ஓய்வுக்குப் பிறகு நமக்கு அரசுப் பதவி ஏதாவது கிடைக்கும் என்ற எண்ணத்துடன் ஒரு நீதிபதி செயல் படுவார் என்றால், அரசுக்கு எதிரான வழக்குகளில் எப்படிப்பட்ட தீர்ப்புகளை அவர் வழங்குவார்? என்ற கேள்வி எழுகிறது.

பணி ஓய்வுக்குப் பிறகு பெறப்போகும் பதவியின் மீதான ஆசை பணியிலிருக்கும்போது வழங்கும் தீர்ப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இத்தகைய போக்கு, நீதித்துறையில் சுயேச்சையான செயல்பாடுகளைப் பாதிக்காதா?

நீதிபதிகளிடமிருந்து தனக்குச் சாதகமாக தீர்ப்பைப் பெறுவதற்காக கொடுக்க வேண்டியதை கொடுத்து வரும் மோடி அரசு, தற்போது ஒரு படி மேலே போய் தற்போது சங்கிகளையே நீதிபதியாக நியமனம் செய்வது கொடுமையிலும் கொடுமையாகும்.

வெறுப்புப் பேச்சுகள், வகுப்புவாத கருத்துகளுக்கு பெயர் பெற்ற விக்டோரியா கவுரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பாரதீய ஜனதாவின் மகளிரணி மாநிலச் செயலாளராக இருந்திருக்கிறார்.

அப்போது முஸ்லிம்களுக்கு எதிராக மிகவும் கீழ்த்தரமாகப் பேசி வந்துள்ளார்.

உச்சநீதிமன்றம் சமீபகாலமாக வெறுப்புப் பேச்சுகளுக்கு எதிராக தொடர்ந்து கருத்துகளைத் தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், முஸ்லிம்களுக்கு எதிராக மிகவும் கீழ்த்தரமாகப் பேசி வந்துள்ள ஒருவர், நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளது உண்மையான நீதியரசர்களை வேதனைப்படுத்தியுள்ளது.

விக்டோரியா கவுரி போன்றோர் நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளது மிகவும் கண்டனத்திற்குரியது.

"நீதியே உன் விலை என்ன?" என்று கேட்கத் தோன்றுகிறதா?

எல்லாம் வல்ல அல்லாஹ் தஆலாவின் அளப்பெரும் பேரருளால்.....

புனிதமிகு ரமளானை முன்னிட்டு

அள்ளி வழங்கி ஆதரவு தாருங்கள்!

கடந்த 39 ஆண்டுகளாய் இச்சமுதாயத்தின் கல்விப் பணிக்காக கண்ணியமாக உழைத்து, சமுதாயத்தின் வருங்காலத் தலைவர்களை ஒழுக்கமிக்கவர்களாக – சன்மார்க்கப் பேரறிவும், உயர்ந்த உலகியல் கல்வியும் பெற்றவர்களாக – உருவாக்கித் தந்திருக்கிறது.....

உங்களின்

"அல்ஜாமிஅத்துல் அரபிய்யா மஃதினுஸ் ஸஆதா" எனும்

மதுரை J.M.S.அரபு கல்லூரி.....!

புனிதமிகு ரமளான் மாதத்தில்

ஜகாத், ஸதகா, நன்கொடைகளை அள்ளி வழங்கி அதிக நன்மைகளைப் பெற்றிட வேண்டுகிறோம்.

தங்களின் மேலான உதவிகளை

"AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST" எனும் பெயரில் மதுரை இந்தியன் வங்கி கருப்பாயூரணி பிராஞ்சின் (Br. Code : 1437) எங்கள் கணக்கு எண். 429079510 (IFSC Code : IDIB000K136) எனும் கணக்கிற்கு எந்த வங்கியிலிருந்தும் பணமாக Transfer செய்து விட்டு, கீழ்கண்ட மொபைல் எண்களுக்கு தெரிவிக்கலாம். மணியார்டர் மூலமும் எங்களின் கீழ்கண்ட முகவரிக்கு தொகைகளை அனுப்பலாம்.

J.M.S.ARABIC COLLEGE

Jaamiyaa Nagar, Sivagangai Highway Road,
MADURAI - 625020. S.India.

94430 66539, 94860 17570

ஈத் முபாரக்!

ஜிங்கா பெய்ன் கேர் ஆயில்™

ROLL - ON

Jinga™
Pain Care Oil
ONE SOLUTION FOR ALL PAIN

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உங்கள் அருகில் உள்ள மருந்து கடைகளில் கிடைக்கும் கேட்டு வாங்குங்கள்...

Apollo HOSPITALS

MedPlus

மொத்த வலிக்கும் ஒத்த நிவாரணம்

ஒரே மொழி போதும் வலி மாத்திரை போகும்

₹40/-

Customer Care: 9962 99 4444 | Missed Call: 9543006000

மாவட்ட வாரியான உதவிக்கு : • சென்னை : 7823997001, 7823997004, • பாண்டிச்சேரி - விழுப்புரம் : 7823997003, • வேலூர் - திருப்பத்தூர் : 7823997013 • மதுரை திண்டுக்கல் - காரைக்குடி : 7823997002 • சேலம் - ஒசூர் : 7823997005 • கோவை : 7823997007 • ஈரோடு - திருப்பூர் : 7823997006 • திருச்சி - தஞ்சாவூர் - புதுக்கோட்டை : 7823997015 • திருநெல்வேலி - நாகர்கோவில் : 7823997010

ஈத் முபாரக்!

தாஜ் டிரேடர்ஸ்

சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் வீடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள் வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்

No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

Ulama®

LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS

Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
✆: +91- 44 - 2525 4050, 4859 4050, 81220 14050 ✆: 78450 64050
✉: ho@pgtextiles.in 🌐: www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made in India